967

உ

மனமோகினி

ஓர் மாதாந்தச் சஞ்சிகை

(முதல்தர நாவல்கள்)

தொகுதி 2.] 1923ஞூ அக்டோபர்மீ 1வ [பகுதி 9.

16 NOV 1923

இதில் வெளிவரும் "பவளத்தீவு" அல்லது
"துடும்பசாபம்" யென்னும் நாவல்
ஸ்ரீமான்
ஆரணி-குப்புசாமி முதலியார் அவர்களால்
இயற்றப்பட்டது

"ஆனந்தபோதினி" பத்திராதிபர்
நா. முனிசாமி முதலியாரால்
பிரசுரிக்கப்பட்டது

1923

ரிஜிஸ்டர்ட்] [காபிரைட்.

மனமோகினி

ஓர் மாதாந்த சஞ்சிகை.

இதில் இனிய நாவல்களே வெளிவரும். நமது "ஆனந்தபோதினிச்" சந்தாதாரர்களிற் பலர் அச்சஞ்சிகையில், ஒவ்வொரு நாவலும் சிற்சில சஞ்சிகைகளில் விரைவில் முடிவு பெறும்படி, சில நாவல்களை வெளிப்படுத்தி வரவேண்டுமென்று அடிக்கடி கேட்டு வருகின்றார்கள். அச்சஞ்சிகை பற்பல விஷயங்களுக்கும் இடந் தரவேண்டியதாயிருத்தலின், அதில் ஒவ்வொரு மாதத்திற்கும் இரண்டு மூன்று பக்கங்களே நாவல் வெளியிடக்கூடியதாயிருக்கிறது. அதனால் நம் நண்பர்களின் விருப்பம் நிறைவேறக் கூடாததாகிறது. ஆதலின் நாவலுக்கென்றே ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது மேற்கூறியவர்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வதோடு மற்றைய தமிழபிமானிகட்கும் திருப்தி யளிக்கக் கூடியதாயிருக்குமென்று இதனை 1922ஞு பிப்ரவரிமீ 1வ முதல் ஆரம்பித்தோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாக வந்து ஆறு மாதங்களுக்கொரு முறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவுபெறும். ஒரு வருஷத்துக்கு ஐந்து ரூபா விலை மதிப்புள்ள இரண்டு புத்தகங்கள் பைண்டாகிவிடும். இப்போது மகா அற்புதம் பொருந்திய அநேகம் நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட "அமராவதி" என்னும் நாவல் முதலில் வெளியாகி முடிந்தது. இச்சஞ்சிகை கிரௌன் 80-பக்கங் கொண்டது. வருஷ சந்தா ரூ. 2-8-0 இரண்டரைதான். வெளிநாட்டிற்கு 3—0—0. 1923ஞு மார்ச்சுமீ 1வ முதல் இதே நூலாசிரியரால் வரையப்பட்ட "பவழத்தீவு" அல்லது "குடும்ப சாபம்" என்ற மிக்க அதிசயமான நாவல் தொடங்கி, வெளியாகிவருகிறது. அடியிற்கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி வெளியாகியுள்ள சஞ்சிகைகளை வி-பி-யிலோ முன் பணம் அனுப்பியோ பெற்றுக் கொள்ளுங்கள்.

☞ முன் பணம் அனுப்பினால் 2—8—0யும், மணியார்டர் கமிஷன் 1-அணாவுமாகும். வி-பி-யில் ரூபா 2—13—0 ஆகும்.

இது அநேக நாவல்கள் இயற்றிய ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் அவர்களால் எழுதப்பட்டது. அவருடைய நாவலின் போக்கு எல்லோருக்குந் தெரிந்திருக்குமாகையால் மாதிரி காப்பி அனுப்பப்படமாட்டாது.

மானேஜர்: "ஆனந்த நிலையம்"

நெ. 6, வெங்கடேச மேஸ்திரி வீதி, மதராஸ்.

தங்கவேலுப் பிள்ளையையும் கண்டு பேசுவதுண்டு. இவர்கள் கூட நெடுநேரமிருப்பதுண்டு. இவர்கள் எத்தகைய இரகசிய காரியமாயினும் என் முன்பாகப் பேசிக்கொள்வார்கள். ஆகையால் இவர்கள் இரகசியங்கள் யாவும் எனக்குத்தெரியும். எனக்கு முதலில் அமரநாதம் அரசர் கொலை செய்யப்பட்டார் என்ற சங்கதி தெரியாது. சமீப காலத்தில் இவர்கள் பன்முறை அதைப் பற்றி சம்பாஷித்துக்கொண் டிருந்ததைக் கேட்டபோது அந்த அரசர் ஒரு பட்டுச்சரிகைக் கயிற்றால் கழுத்தில் சுருக்குப்போட்டுக் கொல்லப்பட்டா ரென்றும், புண்ணியகோடிபபிரபு அதில் முதல்தர உதவிசெய்தா ரென்றும் சற்றும் ஐயமின்றி அறிந்துகொண்டேன்'' என்றார்.

இதைக்கேட்ட ஜனங்கள் கோரம் கோரம் என்று கோபத்தோடு கூவினார்கள்.

இவருக்கு முன் சாக்ஷிபகர்ந்த இருவரும் தங்களுக்கு விரோதமாகவே சாக்ஷிகூறினும் அவர்களால் தங்கள்மேல் குற்றம் சரியாக ருசுவாகவில்லையென்றுகருதி குற்றவாளிகள் அதிக பயங்கொள்ளவில்லை. காரியதரிசி சாக்ஷிக் கூண்டில் வந்து நின்றபோதே அவர் ஏதேனும் வெளியிட்டால் அது சந்தேகமில்லாத ருசுவாக அங்கீகரிக்கப் படுமென்று குற்றவாளிகள் திகிலடைந்தார்கள். ஆகையால் அவர் கூறியதைக் கேட்டதும் அவர்களுக்குப் பெருந்திகில் உண்டாய்விட்டது. ஆயினும் புண்ணியகோடி ஒருவித முரட்டுப் பிடிவாதமும் தைரியமும் கொண்டு "இதுபொய் பொய்'' என்று கூவினான். உடனே பத்மநாபனும் சற்று தைரியத்தோடு அவ்வாறே கூவினான். சித்ராங்கி மட்டும் வாய்திறக்க முடியாமல் பெருந்திகிலோ டிருந்து விட்டாள்.

நியாயாதிபதி "குற்றவாளிகளே! உங்கள் குற்றம்

186496.

முதல் இரண்டு சாட்சிகள் கூறிய சங்கதிகளாலேயே ருசுவாகிவிட்டதெனக் கூறலாகும். ஆயினும் இப்போது காரியதரிசி யவர்கள் கூறிய மொழிகளால் எள்ளளவு சந்தேகமு மின்றி நீங்கள் கொலைசெய்தவர்களே யென்று ருசுவாய் விட்டது. ஆகையால் நீங்கள் செய்த குற்றத்தை ஒப்புக்கொண்டால் அதற்குச் சொல்ப பரிகாரம் தேடிக் கொண்டதாகும். ஒப்புக்கொள்கிறீர்களா ?" என்றார்.

புண்ணியகோடிப் பிரபு உறுதியான மொழிகளால் "நான் ஒப்புக்கொள்ள வேண்டிய குற்றம் ஒன்றுமே யில்லை" என்றான். உடனே பத்மநாயகி "இது அபாண்டம் நான் ஒரு குற்றமும் செய்யவில்லை. நான் ஒன்றையும் ஒப்புக்கொள்ளவும் மாட்டேன்." என்றாள். கடைசியாகச் சித்ராங்கியும் "நான் ஒப்புக்கொள்ள ஒரு குற்றமு மில்லை" என்றாள்.

இவர்கள் மூவரும் இதுகாறும் ஒரு நம்பிக்கை கொண் டிருந்தார்கள். அதாவது இராணி தங்களை மீட்டுக் கொண்டுவந்துவிட ஏதேனும் ஏற்பாடு செய்யாமலிராள் என்பதே. கடைசிவரையில் அப்படி யொன்றும் நடக்காமற் போகவே, "இராணி நம்மைக் கைவிட்டு விட்டாளோ ? அல்லது அவள் பிரியப்படி எதுவும் நடக்கவொட்டாமல் செய்யப்பட் டிருக்கின்றதோ ! என்று கலக்க மடைந்தார்கள். இவர்கள் குற்றத்தை ஒப்புக்கொள்ள மாட்டோம் என்றதே, நியாயாதிபதி கோபத்தோடு போர்வீரர்களை நோக்கி, "இவர்களை நிலவறைக்குக் கொண்டுபோங்கள்" என்றார். இதைக் கேட்டதே மாதர் இருவரும் வீறிட் டலறினார்கள். புண்ணியகோடிப் பிரபு மட்டும் பற்களைக் கெட்டியாய்க் கடித்துக்கொண்டு மௌனமா யிருந்தான்.

44-வது அத்தியாயம்.

குற்றவாளிகள் உண்மையை யொப்புக்கொள்ளும்படி சித்திரவேதனை செய்யப்படல்—சித்திராங்கி மட்டும் குற்றத்தை யொப்புக்கொள்ளல்- பத்மநாயகியின் பயங்கரக் கனவு—குற்றவாளிகளுக்கு மரண தண்டனை.

16 NOV 1923

நிலவறை யென்பது பூமியின் கீழுள்ள கட்டிடம். குற்றத்தை யொப்புக் கொள்ளாத குற்றவாளிகள் அங்கு கொண்டுபோகப்பட்டுத் தங்கள் குற்றங்களை யொப்புக் கொள்ளுமட்டும் சித்திர வேதனை செய்யப்படுவார்கள். முற்காலத்தில் உலகின் பலபாகங்களில் இந்தக் கொடிய அநாகரீக வழக்கம் நடைபெற்று வந்தது. அதிலும் மேல் நாட்டார் தங்கள் புத்தி சாமார்த்தியத்தால் மனிதர்கள் சொல்லொணாப் பிராணவேதனை யடையும் வண்ணம் பலவிதங்களான இம்சைகளை ஏற்படுத்தி அவற்றிற்குத்தக்க ஆயுதங்களையும் எந்திரங்களையும் செய்து வைத்துக்கொண் டிருந்தார்கள். ஒரு எந்திரத்தில் மனிதனைப் படுக்கவைத்துக் கைகால்களைக் கட்டிவிட்டு அந்த எந்திரத்தின் சக்கரத்தைச் சுற்றினால், எந்திரம் இயங்கி தேகத்தின் ஒவ்வொரு பூட்டுகளும் எதிர்ப்பக்கம் திரும்பி அப்படி யப்படியே விலகச்செய்து பிராணவேதனையை யுண்டாக்கும், மனிதனை நாற்காலியில் உட்காரவைத்து அசையா வண்ணம் கட்டி விட்டு, அவன் பாதங்களில் இரும்பினால் செய்த பாதரட்சையை மாட்டி, அதில் அமைக்கப்பட்டிருக்கும் மரைகளை முடிக்கினால், விரல்கணுக்களினின்று இரத்தம் பீறிட்டு வரும்படி அப்பாதரட்சை பாதங்களை நெறுக்கும். அவ்வாறே கைவிரல்களை,

நசுக்கவும் எந்திரம் உண்டு. இன்னும் கல்மன முடைய வனும் கண்டு சற்றும் சகிக்கமுடியாத வேதனைகளை யெல் லாம் செய்ய அங்கு ஏற்பாடுகளுண்டு.

குற்றவாளிகள் மூவரும் காவலர்களால் நிலவறைக் குள் கொண்டு போகப்பட்டதே, அங்கு இருபுறங்களி லும் சுவர்களில் தொங்கிக் கொண்டிருக்கும் பலவித ஆயு தங்களையும், அங்கிருக்கும் எந்திரங்களை யியக்க, அந்த வேலைக்கென்று ஆறுபேர் முரட்டு ஆட்கள் சற்றும் இரக்க மென்பதையே யறிந்திராத பார்வையோடு ஆயத் தமாய் அங்குநிற்பதையும் கண்ட மாதர்களிருவரும் கோவென்றலறினர்கள். சித்ராங்கி பாதி ஆவிசோர்ந்து பூமியில் உட்கார்ந்து விட்டாள்.

அதற்குள் நியாயாதிபதியும், ஒரு குருவும் ஒரு டாக்டரும் அங்குவந்தார்கள். நியாயாதிபதி புண்ணிய கோடிப் பிரபுவைநோக்கி "பிரபுவே! உம்மேல் குற்றம் ருசுவாய்விட் டிருக்கிறது. இதோ இங்கிருக்கும் ஆயுதங் களையும் எந்திரங்களையும் உற்று நோக்கும்; வீணே வேத னைக்கு இடம் வைத்துக் கொள்ளாமல் உமது குற்றத்தை யொப்புக் கொள்ளும்" என்றார்.

புண்ணியகோடிப் பிரபு:—"உம்மைப் பிரசங்கம் செய்யும் படி நான் கோரிக்கொள்ள வில்லை. நான் ஒப்புக் கொள்ள வேண்டியது ஒன்று மில்லை." என்று கடு கடுப்பாய்க் கூறினன்.

நியாயாதிபதி அங்கிருந்த ஆட்களை நோக்கி இனி உங்கள் வேலை நடக்கட்டும் என்று கூறி, அங்கிருந்த ஒரு நாற்காலியைக் குறிப்பாய்க் காட்டினர். ஆட்கள் பிரபு வைப் பிடித்துக் கொண்டுபோய் அந்த நாற்காலியில் உட் காரவைத்து அவருடைய புயங்கள், கரங்கள், துடைகள், கால்கள் யாவற்றையும் நாற்காலியிற் கட்டி விட்டார்கள்.

அவர் சிரசுதவிர தேகத்தின் மற்ற எந்தப்பாகத்தையும் அசைக்க முடியாது.

அந்த நாற்காலி தரையில் புதைக்கப்பட்டிருப்பதால் அசைக்கக் கூடியதல்ல. அந்த நாற்காலிக்கு நேராய் மேலே தளத்தில் ஒரு கருவி தொங்கவிடப்பட் டிருக்கிறது. அது அர்த்தசந்திரவடிவாய் அதாவது அரைவட்டமாய் வளைக்கப்பட்ட ஒரு கனத்த இருப்புக்கம்பி. அதன் இரு முனைகளிலும் விளாங்காயளவு ஒவ்வொரு பித்தளைக் குண்டு அக்கம்பியில் சொருகப் பட்டதுபோல் இருக்கிறது. அக்கம்பியின் மையம் மேலே சங்கிலியில் கட்டப்பட்டிருக்கிறது. அந்தக்கருவி புண்ணியகோடியின் சிரசு அளவிற்குக் கீழிழுக்கப்பட்டது. அதாவது அக்குண்டுகள் அவன் சிரசின் பக்கத்தில் இருபுறங்களிலும் ஒரு அடி தூரத்தில் நிற்கும்படி அக்கருவி நிறுத்தப் பட்டது. இப்போது அதை யசையும்படி செய்துவிட்டால் அக்குண்டுகள் மாறிமாறி அவன் மண்டையில் இருபுறங்களிலும், தாக்கிக் கொண்டே யிருக்கும். குண்டு இருக்கும் தூரத்தாலும் அக்கருவி அசையும் குறைந்த வேகத்தாலும் அடிபடுவதால் மண்டை யுடைந்து விடாது. ஒரே முறையில் ஸ்மரணையும் போகாது. ஆனால் மாறிமாறி சிரசில் குண்டு தாக்கத்தாக்க ஒருவிதப் பொருக்கொணு உணர்ச்சியுண்டாகி எல்லாம் சுழல்வதுபோல் தோன்றிக் கடைசியில் "அய்யோ சீக்கிரம் பிராணன் போய்விடாதா ?" என்று கோரும்படியான சகிக்கொணு வேதனையை யுண்டாக்கி விடும்.

மேற்கண்டபடி அக்கருவியை யவன் சிரசிற்கு நேராக நிறுத்திபபின், ஒருவன் அவன் எதிரில்நின்று ஒரு சட்டியைக் கையில் பிடித்து, அதன் கூரானமுனை புண்ணியகோடியின் நெற்றி மையத்திற்கு அரை அங்குல

தூரத்தில் இருக்கும் வண்ணம் வைத்துக்கொண்டான். இன்னொருவன் அவ்வாறே அவன் பின்பக்கம் ஒரு ஈட்டியைப் பிடித்துக்கொண்டு நின்றான். இப்போது அவன் சிரசை முன்னுக்காவது பின்னுக்காவது சாய்க்க முடியாது. சாய்த்தால் ஈட்டி முனை தாக்கும் என்ற விஷயம் அவனுக்கு அறிவிக்கப்பட்டது. இப்போது அவனுடைய நிலைமை யெப்படிப்பட்ட தென்பதையும் அவன் மனோ வேதனை யெவ்வாறிருக்கு மென்பதையும் இதை வாசிப்போரே யூகித்துக்கொள்ளலாகும்

யாவும் ஆயத்தம் செய்யப்பட்டதே. நியாயாதிபதி அவன் முன் நின்று "இப்போதேனும் உனது குற்றத்தை யொப்புக்கொள்கிறாயா?" என்றார். புண்ணியகோடி "இல்லை. ஒப்புக்கொள்ளமாட்டேன்" என்று உறுதியாகக் கூறினான். அதன்மேல் நியாயாதிபதி ஆட்களை நோக்கி" ஆகட்டும் என்றார்.

உடனே மேலே தொங்கும் அக்கருவி அசைத்து விடப்பட்டது. உடனே அது ஊஞ்சலாடுவதுபோல் ஒரே நிதானமாக அசைவாடத் தொடங்கியதால் அதன் முனைகளிலிருந்த குண்டுகள் மாறிமாறி புண்ணியகோடியின் தலையில் இருபுறங்களிலும் இடிக்கத் தொடங்கின. இக்காட்சியைக் கண்ட பத்மநாயகியும் சித்ராங்கியும் பிரமையடைந்தவர்கள்போல் அசையாமல் தரையில் உட்கார்ந்தபடி இமைகொட்டாது அதையே நோக்கிக் கொண்டிருந்தார்கள். நம்மையும் இம்மாதிரி செய்வார்களே யென்ற எண்ணம் அவர்கள் மனதிற்பட்ட தெனினும் அச்சமயம் அவர்கள் ஏதோ ஒரு மந்திரத்தில் கட்டுப்பட்டவர்கள்போ லாகிவிட்டார்கள்.

புண்ணியகோடிப் பிரபுவின் வேதனை வர வர அதிகரித்துக் கொண்டே யிருந்தது. முதலில் அந்த அறையே

இராட்டினம்போல் ஒரு விநாடியில் பன்முறை அதிவேக மாய்ச் சுற்றுவதுபோன்றிருந்தது. அதன்பிறகு தன் சிரசிற்குள்ளிருந்து சகிக்கமுடியாத ஒருவிதச் சத்தம் உண்டாகி பலங்குன்றுவதுபோ லிருந்தது. சற்று நேரங் கழிந்தபின் நியாயாதிபதி மறுபடி "நீ யிப்போதேனும் உன் குற்றத்தை யொப்புக்கொள்கிறாயா" என்று பிரபுவைக் கேட்டார். அவன் அப்போதும் ஒப்புக்கொள்ள மாட்டேனென்றான். அதன் பிறகு வரவர அவன் வேதனை சகிக்கொணாத விதமாய்விட்டது. அப்போதும் அவன் ஒரே பிடிவாதமாய் வாய் திறவாமலிருந்தான். நியாயாதிபதி மறுபடி யொருமுறை கேட்டபோதும் அவன் ஒப்புக்கொள்ளமாட்டேனென்றான். ஆனால் அதே நிமிடம் அவன் ஸ்மரணை நீங்கிவிடும்போ லிருந்த நோக்கத்தை யறிந்ததே சட்டென்று அக்கருவி நிறுத்திவிடப்பட்டது. ஈட்டிபிடித்த ஆட்களும் எட்டப்போய்விட்டார்கள். புண்ணியகோடியின் சிரசு தொங்கிவிட்டது. உடனே டாக்டர் அருகில் வந்து பார்த்து "இவன் இனிச் சகிக்க முடியாது" என்று கூறிவிட்டார்.

ஆட்கள் நியாயாதிபதியின் கட்டளைப்படி அவனை யுடனே நாற்காலியிலிருந்து அவிழ்த்து வேறொரு அறைக்குக் கொண்டுபோய் விட்டார்கள். அங்கு அவனுக்கு ஔஷதம் கொடுத்து மூர்ச்சை தெளிய உபசாரம் செய்யப்பட்டது. அவன் மூர்ச்சை யடைந்ததைக் கண்ட சித்ராங்கி அப்போதுதான் பெரிய கனவிலிருந்து விழிப்படைந்தவள்போல் திடுக்கிட்டெழுந்து கோவென் றலறிக் கூவி மூர்ச்சையாய் விழுந்து விட்டாள்.

அதன் பிறகு நியாயாதிபதி பத்மநாயகிச் சீமாட்டி யெதிரில் வந்து நின்று "நீ யுன் குற்றத்தை யொப்புக் கொள்ளுகிறாயா?" என்றார். பத்மநாயகி அதைக் கேட்

டதும் திடுக்கிட்டு சிந்தித்தாள். அவள் மனம் பெருங் குழப்பத்தில் விழுந்துவிட்டது. உண்மையைக் கூறிவிட லாமா என்ற சிந்தனை யொரு பக்கம். என்னத்திற்கு அப் படிச் செய்து தண்டனை யடையவேண்டும்? புண்ணிய கோடிப் பிரபுவைப்போல் நாம் இருவரும் சமாளித்துக் கொண்டிருந்துவிட்டால் மரண தண்டனையினின்றும் தப் பலாமல்லவா என்பது ஒரு பக்கம். இவள் இப்படிக் கல வரத்தி லிருக்கையில் நியாயாதிபதி "ஏனம்மா? ஒப்புக் கொள்கிறாயா என்ன கூறு!" என்றார். அதன்மேல் "இல்லையில்லை, நான் ஒப்புக்கொள்ளவேண்டிய தொன்று மில்லை" என்றாள்.

நியாயாதிபதி ஆட்களை நோக்கி வெறுப்போடும் கோபத்தோடும் "கொண்டுபோங்கள் இவளை" என்று கூறிக்கொண்டே அங்கிருந்த ஒரு நீண்ட எந்திரத்தைக் கரத்தால் சுட்டிக்காட்டினார். உடனே ஆட்கள் பத்ம நாயகியைப் பிடித்து மேல் உடைகளைக் களைந்து விட்டு உள் உடையோடு நாம் முன் கூறிய தேகத்தின் கீல்களை விலகச் செய்யும் அந்த எந்திரத்தில் படுக்கவைத்துக் கட்டி விட்டார்கள்.

நேயர்களே! இக்கோரக் காட்சிகளை விவரித்துக்கூற நமக்குப் பிரியமில்லை. ஆகையால் சுருக்கமாய்க் கூறிக் கதையைத் தொடர்ந்து செல்வோம். பத்மநாயகி முதலில் தன்னிடத்தில் பூரண அன்பு வைத்திருந்த உத்தமனாகிய கணவனுக்குத் துரோகம் செய்து டாக்டர் தங்கவேலுப்பிள்ளையோடு கூடிக்கொண்டு, சொல்லொணா அக்கிரமங்களை யெல்லாம் செய்யத் தொடங்கியதற்கு அன்று அவள் அனுபவித்ததே போதுமான தண்டனையா கும். அந்த எந்திரத்தின் சக்கரம் சுற்றப்பட்டதே அது இயங்கியபோது தேகத்தின் ஒவ்வொரு கணுவும் திருப்பி

எதிர்ப்பக்கமாக மடக்கப்பட்டது போன்ற பிராண வேதனையை அனுபவித்தாள். ஆனால் அப்போதும் குற்றத்தை யொப்புக்கொள்ளலாகாது என்ற பிடிவாதத்தைமட்டும் அவள் விட்டவளல்ல. நீதவான் இடையில் இரண்டுமுறை அவளைக் கேட்டும் அவள் அப்படி யொப்புக்கொள்ள மறுத்துவிட்டாள். கடைசியில் பரிதாபமாகக் கூச்சலிட்டு ஸ்மரணை யிழந்து சவம்போ லாய்விட்டாள். ஆட்காரர்கள் தட்சணம் கட்டுகளை யவிழ்த்துவிட்டு அவளைத் தூக்கிக்கொண்டுபோய் ஒரு அறையில் வைக்கோல்மேல் கிடத்தி சிகிச்சை செய்தார்கள்.

பத்மநாயகி போட்ட கூச்சலால் மூர்ச்சையடைந்திருந்த சித்ராங்கி மூர்ச்சைதெளிந்து கண்களை விழித்துப் பார்த்தாள்—தன் கூட்டாளியும் உபாத்தினியு மாகிய பத்மநாயகி சவம்போ லாகிவிட்டதைக் கண்டதே அவள் மனதிலுண்டான பயத்தால் தேகம் முழுமையும் நடுக்கலெடுத்துக் கொண்டது. உடனே அலறிக் கூவியதும் நியாயாதிபதியின் முன்வந்து அவர் பாதங்களில் விழுந்து "பிரபுவே! என்னைக் காப்பாற்றும் காப்பாற்றும். நான் எல்லா உண்மைகளையும் கூறி விடுகிறேன்" என்றாள்.

குரு:—"புத்திரியே! அதுதான் நல்லது. ஆண்டவன் கோபத்தை யாவது கொஞ்சம் தணிக்கலாகும்" என்றார்.

சித்ராங்கி "அய்யோ என்னை முன்னே இக்கோரமும் பயங்கரமுமாகிய இடத்தி லிருந்து அப்புறம் கொண்டுபோய் விடுங்கள். வேறு எங்கு அழைத்துச் சென்றாலும் சரி, வருகிறேன்" என்றாள்.

நியாயாதிபதி "ஓ மாதே! அப்படிச் செய்யமுடியாது: நீ யுன் குற்றத்தை யொப்புக்கொள்வதாயின், இதே

விடத்தில் இந்த ஆட்களின் முன்னிலையிற்றான் ஒப்புக் கொள்ளவேண்டும்'' என்று கண்டிப்பாய்க் கூறிவிட்டார்.

சித்ராங்கி வேறு விதியில்லையென் றுணர்ந்து "ஆம் அப்படியே கூறுகிறேன். விருந்து நடந்தபோது அமரநாதம் இராஜகுமாரர் கொலைசெய்யப் பட்டது உண்மையே. அவர் அந்தப் பட்டுச் சரிகைக்கயிற்றால் கழுத்தில் சுருக்குமாட்டி இழுத்துக் கொல்லப்பட்டார். புண்ணியகோடிப் பிரபுதான் அவரைக் கெட்டியாகக் கீழே அழுத்திப் பிடித்துக் கொண்டார். டாக்டர் தங்கவேலுப்பிள்ளையும் பத்மநாயகிச் சீமாட்டியும் தங்கள் கரங்களால் சுருக்குமாட்டி யிருந்த கயிற்றைப் பற்றி யிழுத்தார்கள். ஆம், கடவுளறிய இப்படியே நடந்தது. அவர் இறந்தபின் அவர் கழுத்திலிருந்த கயிற்றைக் கழற்றிவிட்டு புண்ணியகோடிப் பிரபுவே சவத்தை யிழுத்துச் சாளரவழியாய் வெளியி லிருந்த தோட்டத்தில் போட்டு விட்டார். நான் யாவும் கண்களால் பார்த்துக்கொண் டிருந்தேன். நான் அவர்களுக்கு ஒரு உதவியும் செய்யவில்லை. இவர்களையன்றி இன்னொரு ஆள் கூட அச்சமயம் அங்கிருந்தார். அந்த ஆள் குற்றம் சாட்டப்படவில்லை ......'' என்பதற்குள் நியாயாதிபதி. "போதும் போதும், வேறொன்றும் உன்னைக் கூறும்படி கேட்கவில்லை. இவ்வளவோடு நிறுத்து; நாளைக்கு உங்களுக்குத் தீர்ப்பளிக்கப்படும்'' என்றார்.

நியாயாதிபதியின் கட்டளைப்படியே ஆட்கள் அவளைப் பிடித்துப்போய் பத்மநாயகி யிருக்கும் அறைக்குப் பக்கத்தறையில் விட்டுக் கதவைத் தாளிட்டுச் சென்றார்கள். பத்மநாயகி மூர்ச்சையா யிருக்கையில் அங்கு கொண்டுபோய் போடப்படினும், உடனே கொடுக்கப்பட்ட ஔஷதத்தால் அவளுக்கு ஸ்மரணை வந்துவிட்டது.

ஆனல் அவளுடைய அவயவங்க ளனைத்தும் மரத்துப் போனவைபோ லாய்விட்டன அதாவது உணர்ச்சியற்று அதது அப்படி யப்படியே போட்டவிடத்திலேயே அசை வற்றுக் கிடந்தது.

அவள் மிக்க ஆயாசமடைந் திருந்ததால் அப்படியே மெதுவாக நித்திரையடைந்தாள். சற்றுநேரம் ஒன்றும் தோன்ருத காடாகாரமான சுழுத்தியிலிருந்தாள். பிறகு ஒருகனவு தோன்றியது. அக்கனவில் அவள் ஒருவஸ்து வும் கொஞ்சம்கூடப் புலப்படாத கரிய அந்த காரத்தில் சிக்கிக்கொண்டு பயப்படுகிருள். அவளுக்குத் திக்குத் திசை யொன்றுமே தெரியவில்லை. அத்தகைய இருளின் மையத்தில் ஒருவித ஒளிதோன்றியதும் நான்கைந்து கருத்த நிறமும் அகன்ற கண்களும் சுருண்டு தொங்கும் உரோமங்களும், நீண்ட வக்கிரதந்தங்களு முடைய பயங் கரமான உருவங்கள் அவள் கண்களுக்குப் புலப்பட்டன. அவ்வுருவங்கள் கரங்களில் வாட்களை யேந்திக்கொண்டு தன்னை நோக்கி வருவதைக் கண்டதே அவள் நடுங்கிப் பயந்து, ஓடிவிட வழியிருக்கிறதா வென்று நாற்புறங்களி லும் பார்த்தாள். எப்பக்கம் திரும்பினுலும் அத்தகைய உருவங்களே புலப்படுகின்றன. என்ன செய்வாள்? "நாம் என்ன செய்தோம்? இவர்கள் நம்மை யெங்கு பிடித்துப் போகிருர்கள்?" என்று சிந்தித்தாள். டாக்டர் தங்கவேலுப் பிள்ளையையும் இராகவனையும் நினைத்துப் பார்த்தாள். ஒருவரும் அங்கு புலப்படவில்லை.

அதற்குள் அந்த உருவங்கள் அவளைச் சூழ்ந்து கொண்டு, கத்தியால் ஆடுமாடுகளை மனிதர் ஓட்டுவது போல் அவளைக் குறித்த ஒருதிக்கே செல்லும்படி யோட் டிக்கொண்டு போகின்றன. அவளுக்கு பின்னும் திகில் அதிகமாய் விட்டது. வாய்திறக்க முடியவில்லை. அதற்

குள் எதிரில் சற்று தூரத்தில் ஒரு உயரமான மேடை யிருப்பதுபோலும் அதன் பின்னல் கறுப்புத் திரை தொங்கவிட் டிருப்பதுபோலவும் தோன்றியது. அத னருகிற் செல்லச் செல்ல அம்மேடைமேல் ஒரு தூக்கு மரம் நாட்டப்பட்டிருப்பதுபோல்தோன்றிற்று. அதோடு அம்மேடைமேல் ஒரு மரத்துண்டு இருந்தது. அதன் பக் கத்தில் கையில் ஒரு கண்டகோடரியைப் பிடித்துக் கொண்டு ஒரு மனிதன் மிகப் பயங்கரமான ரூபியாய் நின்றுகொண்டிருந்தான்.

பத்மநாயகியின் பார்வைக்கு அம்மனிதன் தன் னேயே கொடூரமாக நோக்குவதுபோலிருந்தது. கடை சியில் அவள் மேடை யருகில் கொண்டுபோய் நிறுத்தப் பட்டபோது அங்கு அம்மேடையின் மத்தியில் இரண்டு பேர் நெடுகக் கறுப்புச் சீலையால் தேகமுழுதும் மூடிக் கொண்டு நிற்பதைக்கண்டாள். அவர்கள் முகம் அவ ளுக்கு முதலில் புலப்படாவிடினும், அவள் மிக்க நடுக்கத் தோடு அவர்களேயே நோக்கிக்கொண் டிருந்தாள். கண்ட கோடரி வைத்திருப்பவனும் அவர்களேச் சுட்டி அவ ளுக்குக் காட்டுகிறன்.

பிறகு திடீலென்று அவற்றில் ஒரு உருவம் தன் முக மூடியை விலக்கியதும் அதைக்கண்ட பத்மநாயகி வீறிட் டாள். ஏனெனில் அவ்வுருவம் விஷம் வைத்துக் கொல் லப்பட்ட இரண வீரகேசரி அரசரின் உருவம்; அதாவது ஜீவரத்தினம் இராணியின் பெரியதந்தை. அந்தப் பிரமை யும் திகிலும் சற்று அடங்குவதற்குள் இன்னெரு உருவ மும் தன் முகமூடியைத் திறந்துவிட்டது. அதைக் கண் டதே அவள் ஆவியே ஒடுங்கிவிட்டது. அவ்வுருவம் அவள் தன்கையால் உதவிசெய்துக் கொன்ற அமரநாதம் இராஜ குமாரனுடையதே. அது அவளேக் கோபமான பார்வை

யோடு நோக்கிக் கையில் கண்டகோடரி வைத்திருந்த ஆளைச் சுட்டிக் காட்டியது. உடனே அந்த ஆள் அவளைப் பிடித்து இழுத்துக்கொண்டுபோய் அங்கிருந்த கட்டையின் எதிரில் அவளை முழங்காற்படியிடச் செய்து கழுத்தை அக்கட்டைமேல் வைத்துக் கண்டகோடரியால் தலையை வெட்டிவிட்டான். அவள் தன் கழுத்தில் கத்தி யிறங்குவதுபோல் ஒரு உணர்ச்சி உண்டாகியதும் கோவென்றலறிக் கூவினுள்.

உடனே விழிப்படைந்து கண்களைத் திறந்து பார்த்தாள். நிலவறையில் இருட்டான படியால் நான் கைந்து போர்வீரர்கள் கரங்களில் தீவட்டிகளை யேந்திக்கொண்டு தன் எதிரில் நிற்கக்கண்டாள். மறுநாள் காலை ஒன்பது மணியாய் விட்டதால் தீர்ப்பளிப்பதற்காக நியாயாதிபதி முன் அவளை யழைத்துக் கொண்டுபோக அவ்வீரர்கள் அங்கு வந்திருந்தார்கள். அவள் நடக்கவும் சக்தியில்லா தவளாக விருந்தாள். போர்வீரர் உதவியால் மெதுவாய் எழுந்து சென்று நியாய சபையில் நின்ருள்.

புண்ணியகோடிப் பிரபுவும் சித்ராங்கியும் முன்னமே அங்குவந்து நின்றுகொண் டிருந்தார்கள். சித்ராங்கி சொல்லொணுத திகிலடைந்து புண்ணியகோடிப் பிரபுவின் தோளைப் பற்றிக்கொண்டு நின்ருள். அவள் முகம் சவம்போல் வெளுத்துவிட் டிருந்தது. அவள் குற்றத்தை யொப்புக்கொண்டு தங்களைக் காட்டிக் கொடுத்து விட்ட சங்கதி யாவர்க்கும் தெரியும். ஆயினும் புண்ணியகோடிப் பிரபு, அவள் பெண்பால் அதிலும் கன்னிகை யானதால் அவர்கள் செய்யும் வேதனைக்குப் பயந்து கொண்டு கூறி விட்டாளென்று அவள்மேல் பரிதாபம் கொண்டானே யன்றிக் கோபமடையவில்லை. பத்மநாயகிமட்டும் அவளைத் தகித்து விடுபவள்போலக் கோபத்தனல் வீசும் கண்க

ளால் நோக்கினாள். சித்ராங்கி தலைகவிழ்ந்து கொண்டு கண்ணீரை யாறுகப் பெருக்கிக்கொண் டிருந்தாள்.

குற்றவாளிகள் மூவரும் தன் முன்பாக நிறுத்தப் பட்டதே, நியாயாதிபதி இலிகிதரை நோக்கிச் சித்ராங்கி கூறிய வாக்குமூலத்தைப் பகிரங்கமாய் வாசித்துக் காட்டி அவளிடம் கையொப்பம் வாங்கும்படிக் கட்டளையிட் டார். இலிகிதர் அவ்வாறே செய்து முடிந்தபிறகு நியா யாதிபதி அடியிற் கண்டபடி தீர்ப்புகூறினார்:—

"குற்றவாளிகளே! உங்கள்மேல் கொண்டுவரப் பட்டகுற்றம் மிக்க பிரமாதமானது. கடவுளின் பிரதிநிதி யாக அனுப்பப்பட் டிருக்கும் சங்கைக்குரிய ஜகத்குரு சுவாமிகளால் முடிசூட்டப்பெற்ற ஒரு அரசனை நீங்கள் அக்கிரமமாகக் கொலை செய்திருக்கிறீர்கள். உங்கள் குற் றம் சாக்ஷிகளால் பூரணமாக ருசுப் படுத்தப்பட் டிருக் கிறது. அதோடு உங்களில் ஒரு குற்றவாளியே நடந்த உண்மையைப் பூரணமாக ஒப்புக்கொண்டாள். ஆகை யால் நீங்கள் மூவரும் நமது தேசச் சட்டப்படி மரண தண்டனை யனுபவிக்க வேண்டுமென்று தீர்ப்புசெய்கி றேன். ஆண்டவன் உங்கள் ஆன்மாக்களுக்கு ஆறுத லளிப்பாராக" என்று கூறினார்.

இப்பயங்கரமான மொழிகளைக் கேட்டதே பத்ம நாயகி கோவென் றலறினாள். புண்ணியகோடிப் பிரபு பற்களைக் கடித்துக்கொண்டு கோபத்தோடு மௌனமாக நின்றான். சித்ராங்கி கோஷ்டமிட்டுத் தன்னை மன்னிக் கும்படி வேண்டிக் கொண்டாள். துஷ்டகேது சந்தோ ஷத்தோடு இவர்களைப் பார்த்துக் கொண்டு நின்றான். நியாயாதிபதி காவலரைநோக்கி "எல்லாம் ஆயத்தமா யிருக்கின்றனவா?" என்றார். காவலர்கள் ஆம் என்றதே "குற்றவாளிகளைக் கொண்டு போங்கள் சீக்கிரம்" என்

ரூர். இயற்கையாகவே கடினதண்டனை விதிக்கும் சுபாவ முடைய அந்நியாயாதிபதியின் மனதைக் குற்றவாளிக ளின் துயரக் கோஷ்டமாவது, மாதரின் யௌவனமா வது ஒன்றுமே இளகச்செய்யக் கூடியதாக விருக்கவில்லை.

அச்சமயம் வீதியில் இரண்டு புரவிகள் பூட்டிய ஒரு சாதாரணமான வண்டி ஆயத்தமாக நிறுத்தப்பட் டிருந் தது. காவலர்கள் குற்றவாளிகள் மூவரையும் அழைத்து வந்து அவ்வண்டியில் ஏற்றினார்கள். வண்டியின்பக்கத்தில் கறுப்புடையும் கறுப்பு முகமூடியு மணிந்திருந்த ஒரு மனிதன் கையில் நீளமான ஒரு குதிரைச்சாட்டி வைத் துக்கொண்டு நின்றிருந்தான். வீதியில் ஜனக்கூட்டம் நிறைந்திருந்தது. குற்றவாளிகள் வண்டியில் ஏற்றப்பட் டதும் அக்கறுப்புடை யணிந்திருந்த மனிதன் சாட்டியால் குதிரைகளைத் தட்டினான்.

இப்போது வண்டியை யோட்டும் அம்மனிதனைக் கண்டதும் குற்றவாளிகளுக்கு எமனை நேரிற் கண்டது போன் றிருந்தது. ஏனெனில் அம்மனிதன் நமது பூபா லன் தந்தையாகிய துரைத்தனக் கொலையாளியே. வண்டி இராஜ அரண்மனைக் கெதிரிலுள்ள விசாலமான மைதா னத்தை நோக்கிச் சென்றுகொண் டிருக்கிறது. அதற்குச் செல்லும் அகன்ற வீதியின் இருபக்கங்களிலும் மூன்ற டுக்கு முதல் எட்டடுக்கு பத்தடுக்குகளை யுடைய பிரம் மாண்டமான மாடமாளிகைகள் நிறைந்திருக்கின்றன. அவ் வீதியில் மந்திரிகள், பிரதானிகள், சீமான்களாகிய செல் வப்பிரபுக்கள் முதலியவர் வசிக்கிறார்கள். இராஜசபையில் மிக்க செல்வாக்கு பெற்றிருந்தவர்களும், இராணியின் நெருங்கிய சினேகர்களுமான ஆசாமிகள் மரணதண்டனை யை யனுபவிக்கப் போகிறார்கள் என்ற வதந்தி ஊரெங் கும் பரவிவிட்டதால் வீதியில் ஜனக்கூட்டம் மிக்க அதிக

மாய்விட்டது. மாளிகைகளின் சாளரங்களி லெல்லாம் செல்வச் சீமாட்டிகளும் சிறுவர்களும் நிறைந்து நின்று கொண் டிருந்தார்கள்.

வண்டியிலுள்ள குற்றவாளிகள் தாங்கள் இதுவரை யில் இருந்த நிலைமையையும், இப்போது தங்களைச் சனங்க ளெல்லாம் வேடிக்கை பார்த்துக்கொண்டும் தூஷண வார்த்தைகளைப் பகிரங்கமாய்க் கூறிக்கொண்டும் கேலி செய்துக்கொண்டும் சூழ்ந்து வருவதையும் கருதியபோது அவர்கள் மனோ நிலைமை யெவ்விதமாக இருந்திருக்கும் என்பதை நாம் விவரிக்க முயல்வது முடியாதகாரியம். அந்தோ! பயங்கரமான மரணம் நெருங்கிவிட்டதை யறிந் திருக்கும்போதும் வஞ்சம் தீர்த்துக்கொள்ள வேண்டு மென்ற ஆசை இவர்கள் மனதில் இருந்துகொண்டே யிருக்கிறது. சித்ராங்கிக்குமட்டும் ஒரு நினைவுமில்லை. அவள் பாதி இறந்தவள் போலாய்விட்டாள். புண்ணிய கோடிக்கும் பத்மநாயகிக்கும் துஷ்டகேதுவின் மேல் வஞ்சம் தீர்த்துக்கொள்ளவேண்டு மென்று மிக்க ஆவலா யிருந்தது. அதை நிறைவேற்றிக் கொள்வதற்கில்லையே என்பதே அவர்கள் மனதில் சொல்லொணு நரகவேதனை யினுங் கொடிய வேதனையா யிருந்தது. புண்ணிய கோடிக்குமட்டும் துஷ்டகேதுவின்மேல் வஞ்சம் தீர்த்துக் கொள்ளச் சந்தர்ப்பம் வாய்ந்திருந்தால் சந்தோஷமா கவே தன் மரணத்தை யேற்றுக்கொள்வான். அந்தோ மனித சுபாவமே! பொறுமையும் கோபமும் மனிதனை மிருக சுபாவமுடையவனுக்கி விடுகின்றன இக்குணங் கள் தம்மையுடையோர்க்கு மிக்க இக்கட்டுகளையும் துய ரத்தையும் விளைவிக்கின்றன. ஆதலின் இவைகள் மிக்க நன்றி கெட்டவைகளென்றே ஆன்றோர் இவற்றை மிக்க இழிந்தவைகளெனக் கூறுகின்றனர்.

வண்டி அரண்மனைக்கருகில் சென்றபோது, குற்றவாளிகள் மூவரும் ஏககாலத்தில் தலை நிமிர்ந்து தாங்கள் பல நாட்கள் மிக்க சந்தோஷத்தோடும், ஒருவரும் நிகரில்லை, எதிரில்லை யென்ற அகங்காரத்தோடும் உயர்தரமான போகபாக்கியங்களை யனுபவித்துக்கொண்டும் வசித்திருந்த இடமாகிய அவ்வரண்மனையை நோக்கினார்கள். அரண்மனையின் சாளரங்களனைத்தும் மூடப்பட்டிருந்தன. ஒன்றேனும் திறக்கப்பட் டிருக்கவில்லை. "அந்தோ! இராணியையே வேறெங்கேனும் கொண்டுபோய் வைத்து விட்டார்களோ! அல்லது எதிரிகள் இராணியினருகில் இருந்துகொண்டு அவள் பிரியப்படி ஒன்றும் நடக்கவொட்டாமற் செய்துகொண் டிருக்கிறார்களோ" என்று சிந்தித்து ஆவி சோர்ந்தார்கள்.

அதற்குள் வண்டி தூக்குமரம் நாட்டப்பட்டிருக்கும் பெரியமேடை யருகிற்போய்ச் சேர்ந்துவிட்டபடியால் ஜனங்களில் கீழ்த்தரமான அநாகரீகர்களும், துஷ்டர்களும் பெருங்கோஷ்ட மிட்டார்கள். குற்றவாளிகள் கனவிலிருந்து விழித்துக் கொண்டவர்கள்போல் திடுக்கிட்டு மேடையை நோக்கினார்கள். மேடை மேல் நிறைய கறுப்புச் சீலை விரிக்கப்பட் டிருந்தது. மத்தியில் ஒரு மரத்துண்டும் அதன்மேல் ஒரு கண்டகோடரியும் வைக்கப்பட்டிருந்தன. வண்டியோட்டிக்கொண்டு வந்த கொலையாள் சட்டென்று மேடைமேற் சென்று அக்கோடரியைக் கரத்தி லெடுத்துக்கொண்டான். பத்மநாயகி இக்காட்சி தான் இரவு கனவிற்கண்டதுபோலவே யிருப்பதைப் பார்த்ததும் கோவென்றலறி ஆவி சோர்ந்தாள்.

நேயர்களே! இனிமேல் நடக்கும் கோர சம்பவங்களை விவரிப்பது அனவசியம். முடிவில் ஒருவர் பின் ஒருவ

ளாக மூன்று குற்றவாளிகளும் சிரச்சேதம் செய்யப் பட்டனர்.

45-வது அத்தியாயம்.

ஆத்மநாதம் பிரபுவின் நாட்டு மாளிகையில் பிரபுவின் குடும்பமும் டாக்டர் தங்கவேலுப்பிள்ளையும்—டாக்டரின் கள்ள அபிநயம்—கோமளாபாயும் தேவசிங்கனும் இராணிக்கு உதவியாதல்—பூகம்பம்—பிரபுவும் மயூரநாதனும் நகர மாளிகைக்குச் செல்லல்—படசாலையில் நடக்கும் சம்பவங்கள்—உலகநாதம் பிரபுவின் கடிதம்—பயங்கர சங்கதி.

நேயர்களே! இதுகாறும் நமது கதையின் நிகழ்ச்சி முழுமையும் நவீனபுரி நகரிலும் அதன் சுற்றுப்பக்கங்களிலுமேயிருந்தது. இப்போது நவீன புரிக்கு வடக்கு சுமார் ஐம்பது மைல் தூரத்தில் கடற் கரையில் நடக்கும் சில சம்பவங்களைக் கவனிக்க வேண்டியது அவசியமாகிறது.

அங்கு கடலோரத்தில் புராதனமான ஓர் பெரிய மாளிகையிருக்கின்றது. கடலின் பக்கத்தில் பார்த்தால் அம்மாளிகை ஓர் பழைய செங்கற்கட்டிடம் போல வனப் பின்றி தோன்றும் மறு பக்கம் பார்த்தால் அம்மாளிகை யின் அழகிய வேலைப்பாடு காண்போர் கண்களைக் கவரத் தக்கதாக விருக்கின்றது. அதன் மாடிகளிலுள்ள சாளரங்களில் தொங்கும் பொற் சரிகையால் சித்திர வேலைகள் செய்யப்பட்ட விலை யுயர்ந்த பட்டுத் திரைச்சீலைகள் அம் மாளிகையின் உள் அலங்காரத்தையும் அதில் வசிப்போ

ருடைய செல்வப் பெருக்கையும் நன்கு விளக்கும். அம் மாளிகையைச் சூழ ஓர் பெரிய தோட்டம் உண்டு. அத் தோட்டம் மாளிகையின் முன்பக்கம் மிக்க விசாலமா யிருக்கின்றது. நறுமணம் வீசும் பலநிற மலர்களை யுடைய விருட்சங்களும், மதுரமான கனிகளை யளிக்கும் விருக்ஷங்களும் எத்தகையோர் மனதையும் கவரக் கூடி யவைகளாக விருந்தன. அத்தோட்டத்தில் உல்லாச மாக உலவுதற்காகச் செப்பனிட்ட பாதைகள் பல வுண்டு. பல மைல்கள் விஸ்தீரணமுடைய அத்தோட் டத்தின் ஓரங்களிலுள்ள அடவிகளில் மாடுகளும், ஆடு களும், மான்களும், முயல்களும் பெருங் கூட்டங்களாய் மேய்ந்துகொண் டிருக்கக்காணலாம். அந்த அடவிகளைச் சேர்ந்த பூமிகளில் செழிப்பான புலங்களும் ஆங்காங்கு பயிரிடும் குடிகள் வசிக்கும் சிறுசிறு கிராமங்களும், செழிப்பான தோட்டங்களும், தோப்புகளும் நிறைந் திருக்கின்றன. காறுறுகள் ஆங்காங்கு ஓடுகின்றன.

அந்த மாளிகையின் தோட்டத்தில் ஒருநாள் மாலைப் போது ஒரு அழகிய வாலிபனும் அழகே உருவெடுத்தது போன்ற ஒரு கன்னிகாரத்தினமும் மிக்க சந்தோஷத் தோடு உல்லாசமாக உலவிக்கொண் டிருக்கிறார்கள். இவர்கள் யாரென்று நாம் கூறுமலே நேயர்கள் அறிந்து கொள்வீர்கள். ஏனெனில் நாம் கூறிய அம்மாளிகைக்கு ஆத்மவிலாசம் என்று பெயர். அதுவும் அதைச் சேர்ந்த செழிப்பான பூஸ்திதி முழுமையும் ஆத்மநாதம் பிரபு வின் பிதுரார்ச்சித ஆஸ்தி. இந்த நாட்டு மாளிகை யில்தான் பிரபு குடும்பத்தோடு இப்போது வந்திருக் கிறார். வில்வநாதன் என்ற மயூரநாதம் பிரபுவும் டாக்டர் தங்கவேலுப்பிள்ளையும் இங்கு வந்து சேர்ந்து மூன்று வாரங்களாயின.

வில்வநாதனும் குசலாம்பாளும் தங்களுக்கிருந்த துயரம் நீங்கி இப்போது ஒருவருக்கொருவர் சகோதர வாஞ்சையோடு ஆனந்தமாகக் காலத்தைக் கழிக்கிறார்கள் என்று நாம் கூறவேண்டுவ தில்லை. தங்கள் புத்திரன் கல்வி ஒழுக்கம் யோக்கியதை சுத்த வீரத்தன்மை யாவற்றிலும் சிறந்தவனாகப் பயிற்சி செய்யப்பட்டிருப்பதைக் கண்ட பிரபுவும் சீமாட்டியும் எவ்வளவோ சந்தோஷமடைந்தார்கள். இதனால் அவர்கள் டாக்டரிடம் நன்றியும் விசுவாசமும் வைக்கவேண்டியவர்களாக விருந்தார்கள். டாக்டரிடம் உலகத்தில் மெய்யான அன்பு வைத்த ஆடவன் நமது வில்நாதன் ஒருவனே. ஸ்திரீகளில் பத்மநாயகிமட்டுமே. வாலிபன்மேல் வைத்த வாஞ்சையாலும், அங்கு தனக்கு வேண்டிய எல்லா சௌகரியங்களும் மேலான விதமாகக் கிடைப்பதாலும், இதுகாறும் மனச்சலனம், புத்தி, உழைப்பு இவற்றால் அதிகமாக விருந்த ஆயாசத்தை நீக்கிக்கொள்ள இங்கு நிம்மதியாய்க் கொஞ்சகாலம் இருக்கலாகும் என்ற வாஞ்சையாலுமே டாக்டர் வில்வநாதனை அவன் பெற்றோரிடம் விட்டுவிட்டு வந்து விடாமல், தான் அங்கேயே தங்கியிருந்தார். டாக்டருடைய அயோக்கிய நடக்கைகளில் எதுவும் பிரபுவுக்கேனும் சீமாட்டிக்கேனும் தெரியாது. ஆகையால் அவர்கள் டாக்டர்மேல் உண்மை விசுவாசமே கொண்டிருந்தார்கள். அக்காலத்தில் இவ்வளவு சீக்கிரமாக ஒரு விடத்திலிருந்து ஒரு விடத்திற்குச் சமாசாரம் எட்டாது. நாம் முன் கூறியபடி இவர்கள் அங்கு வந்து சேர்ந்து மூன்று வாரங்கள் ஆனபின்பு ஒருநாள் நகரத்தில் நடந்த பயங்கரமான சங்கதிகள் பிரபுவின் மாளிகைக்கு எட்டியது. இச்சங்கதியைக் கேட்டதே டாக்டருக்கு உள்ளத்தில் திகில் உண்டாய்விட்டது. அதோடு

பத்மநாயகியை யவன் உண்மையாகவே நேசித்திருந்த படியால் அவள் குரூரமாய்க் கொல்லப்பட்டதைக் கேட்டு மிக்க துயரமடைந்தான்.

அக்கொலைக் குற்றத்தில் டாக்டர் தங்கவேலுப் பிள்ளையும் சேர்க்கப்பட்டிருக்கும் விஷயத்தை யறிந்த வில்வநாதன், அவன்மேல் வைத்துள்ள விசுவாசத்தால் கண்ணீர் விட்டுக்கொண்டே யவனை யாலிங்கனம் செய்து கொண்டு, "ஓ என் தந்தைக் கொப்பானவரே! உம்மேல் அபாண்டமாகக் குற்றஞ் சாட்டுகிறார்கள். விரோதிகள் வேண்டுமென்றே உம்மைக்கெடுக்க இப்படிச் செய்கிறார்கள். நீர் நிரபராதியென்று நான் அறிவேன்" என்று அவனுக்குத் தேறுதல் கூறினன். டாக்டர் இதுதான் சரியான மார்க்கமென்று கண்ணீர் விட்டுக்கொண்டே தான் நிரபராதியே யென்றும் விரோதிகள் வேணுமென்று இவ்வாறெல்லாம் பொய்க் கதைகட்டி இராணியின் வல்லமையைக் குறைக்க வழி தேடுகிறார்களென்றும், சித்ராங்கி அவர்கள் செய்யும் வேதனைக்கஞ்சி அவர்கள் பிரியப்படி ஒப்புக்கொண்டிருக்கவேண்டும் என்றும் அபிநயித்தான்.

பிரபுவும் சீமாட்டியும் இவன் அழுகையாலும் பிரலாபித்ததாலும் மயங்கிப்போய், இவன் கூறியவற்றையெல்லாம் உண்மையேயென்று நம்பிக்கொண்டார்கள். அதன் பிறகு பிரபு டாக்டரை நோக்கி "நீர் ஒன்றுக்கும் பயப்படவேண்டாம். நான் என் பிராணனுள்ளளவும் உம்மை யெதிரிகள் கையில் சிக்கவிடாது காப்பாற்றுகிறேன்" என்று கூறினர். அதன்படிக்கு உடனே தமது மாளிகையைத் தற்காப்பு நிலையில் வைக்கும்படி ஏற்பாடு செய்தார். ஐந்நூறு வீரர்கள் துரிதமாகச் சேர்க்கப்பட்டார்கள். போதுமான ஆயுதங்களும், மாளிகை முற்றுகையிடப்பட்டால் நீண்ட காலத்திற்குப் போதுமான உண

வுப் பொருள் முதலியவைகளும், யாவும் சேகரம் செய்யப் பட்டன. மயூரநாதம் பிரபுவாகிய நமது வில்வநாதனே அச்சேனையின் படைத்தலைவனுக ஏற்படுத்தப்பட்டான்.

இந்த ஏற்பாடுகளால் டாக்டர் தங்கவேலுப்பிள்ளைக்குச் சற்று தைரியமுண்டாயிற்று. தான் இருக்குமிடத்தை யறிந்துகொண்டு துஷ்டகேது சேனையைச் சேர்த்துக்கொண்டு அங்கு வந்து தன்னைப் பிடிக்க முயல்வதாயினும் இன்னம் நாட்செல்லும். அப்படிவரினும் அவன் வெல்வது கஷ்டம். அதிக சேனையோடுவரினும் முற்றுகையை நீடித்துக் காத்துக்கொள்ளக்கூடும்; அப்படியும் ஆபத்து நேர்வதாயின் பின் பக்கம் கடலிருப்பதால் இராக்காலத்தில் படகிலேறித் தப்பித்துக்கொண்டு போய் விடலாகும். இவற்றையெல்லாம் ஆலோசித்து டாக்டர் சற்று தைரியமடைந்திருந்தார்.

சுமார் ஆறுவாரங்கள் கழிந்தபோது நகரத்தில் நடக்கும் கீழ்க்கண்ட சம்பவங்கள் தினே தினே மாளிகைக்கு எட்டிக்கொண்டேயிருந்தன. தன் நண்பர்கள் சிறை செய்து கொண்டு போகப்பட்டதே இராணி ஆவிசோர்ந்து வீழ்ந்துவிட்டாள். ஆயினும் சற்றுநேரத்திற்குள் தன் சுபாவகுணமாகிய தைரியத்தையும் உற்சாகத்தையுமடைந்து தன் நண்பர்களைக் காப்பாற்ற யோசனைசெய்தாள். ஆனல் எதிரியின் வேவு ஆட்கள் அருகிலிருந்துகொண்டு அவளுடைய முயற்சிகள் பயனடையாவண்ணம் செய்தார்கள். அதோடு விசாரணையொரே நாளில் முடிந்து குற்றவாளிகள் மறுநாளே மரண தண்டனைக்குள்ளாக்கப்பட்டதால் இராணி புது நண்பர்களைக் கொண்டு முயற்சிசெய்ய அவகாசமில்லாமற் போய்விட்டது. தன் அன்பார்ந்த நண்பர்களும் கள்ளக்காதலனும் குரூர மரணத்திற் குள்ளாக்கப்பட்டதை யறிந்த இராணி

மிக்க சோர்வும் துயரமுமடைந்தாள். துஷ்டகேது அரண்மனைக்குச்சென்று இதோடு கலகமும் விரோதமும் நீங்கி நாடு க்ஷேமமுற வேண்டுமாயின் தன் நிபந்தனைக்கு ஒப்புக்கொண்டு தன்னை மணம் புரிந்துகொள்ளவேண்டுமென்று இராணியைக்கேட்டான். இராணி தன் நோக்கத்தை வெளியிடாமல், தந்திரமாகத் தனக்குத் தற்சமயம் மனம் மிக்க வியாகூலத்திருப்பதால் இன்னும் பதினைந்து நாட்கள் கழித்து விடையளிப்பதாய்க் கூறினாள். இதற்குள் இவ்விரோதியிடமிருந்து தப்பித்துக்கொள்ளவும் இவனை யடக்கிவிடவும் வழிதேடவேண்டுமென்பதே இராணியினெண்ணம்.

விஷத்தால் கொல்லப்பட்ட அரசனாகிய இராணியின் பெரிய தந்தைக்கு ஒரு சகோதரி யுண்டு. அந்த இராஜ குமாரியின் பெயர் கோமளாபாய். அவள் நகரத்திற்குச் சற்று தூரத்தில் அடக்கமாக வசித்துக்கொண்டிருந்தாள். தேவசிங்கன் என்ற இராஜ குமாரன் அவளுடைய ஏக புத்திரன். அவன் திரண்ட செல்வவந்தன். அழகும், தேகபலமும், புத்திசாமார்த்தியம் வீரத்தன்மை முதலிய குணங்களும் பூரணமாக வுடையவன். அவனுக்கு வயது இருபத்திரண்டிருக்கும்.

ஜீவரத்னம் இராணி தன் அத்தையாகிய கோமளாபாய்க்குத் தன் நிலைமையைப்பற்றித் தெரிவித்தாள். அம்மாது தன் புத்திரனைப்போல மிக்க தீரமும் மனோவல்லமையும் உடையவள். இரண்டு மூன்று நாட்களுக்குள்ளாக அம்மாது தன் புத்திரனோடு இரகசியமாக இராணியின் அரண்மனைக்குள் வந்து சேர்ந்துவிட்டாள். தேவசிங்கன் உடனே தன் ஆட்களை அரண்மனையிலுள்ள எல்லா வேலைகளிலும் அமர்த்திவிட்டதோடு, திரளான பொருளைத் தாராளமாகச் செலவுசெய்து துருப்புகளைக்

கைவசப் படுத்திக்கொண்டு பலமான சினேகிதர்களையும் சேகரித்துக்கொண்டான். தேவசிங்கன் மிக்க அழகும், வீரத்தன்மையும், செல்வமும் உடைய இராஜ குமாரன். அதோடு மாதரிடத்தில் மிக்க இனிமையாகவும் சாதுர்ய மாகவும் பேசவல்லவன். இராணியின் மனோ நிலைமையைச் சிந்தித்தால், கணவனுக்குத் துரோகம் செய்யத்துணிந்து இராகவனைக் கள்ளக் காதலனாகக்கொண் டிருந்து, பிறகு அவன் சென்றதே தன் தோழியின் சோரநாயக னாகிய புண்ணியகோடிப் பிரபுவைத் தன் காதலனாகக் கொண்டவள், இப்போது தேவசிங்கனைக் கள்ள நாயக னாகக்கொண்டாள் என்று கூறினால் நேயர்கள் வியப் படையமாட்டீர்களென்று நம்புகிறோம். இராஜ குமார னுடைய தாயார் தன் புத்திரன் அரசனாவானென்ற ஆசையால் அவர்களுக்குள் ளுண்டாகியிருக்கும் காதல் விர்த்தியடையும் வண்ணம் இடங்கொடுத்தாள்.

இராணிக்கு இவ்வாறு புது உதவி கிடைத்திருப்ப தும் இராணியின் காதலைக் கவரக்கூடிய வாலிப இராஜ குமாரன் அவளுக்குத் துணையாய் வந்திருப்பதால் முன் இருந்ததைக்காட்டிலும் இப்போது அவள் அதிக பல முடையவளாகி விட்டிருப்பதையும் துஷ்டகேது உணர்ந் ததும் மிக்க வியாகூலமும் பயமுமடைந்து, உடனே இராணியைக் கண்டு தான் கூறிய ஏற்பாட்டிற்கு விடை யளிக்கும்படி கேட்பதற்காக அரண்மனைக்குச் சென்றான். ஆனால் அரண்மனைக்குள் செல்ல அவனுக்கு அனுமதி யளிக்கப்படவில்லை.

துஷ்டகேதுவுக் குண்டான கோபமும் பொறாமை மையும் துயரமும் பயமும் சொல்ல முடியாது. அவன் மிக்க அவமானமடைந்து நேராய்த் தன் மாளிகைக்குச் சென்று, தன் நண்பர்களை வரவழைத்து ஆலோசனை

செய்தான். கடைசியில் நண்பர்கள் "இப்போது ஜகத் குருவின் கட்டளையால் இவ்வளவு விவகாரங்கள் நடந்திருக் கையில் உடனே இன்னும் ஒரு விவகாரத்தையும் கிளரக் கூடாது. கொஞ்சகாலம் பொறுமையாக விருப்பது நலம்" என்றூர்கள்.

துஷ்டகேது உடனே தன் அரண்மனையைச் சரி யான பாதுகாப்பு நிலைமையில் வைப்பதற்கு அவசிய மான வீரர்களையும் மற்ற தளவாடங்கள் முதலியவைகளை யும் சேகரம்செய்து, இராணியின் கட்சியாரால் நடக்கும் விவகாரங்களைக் கவனித்துக்கொண் டிருந்தான்.

இதற்கிடையில் நாட்டில் பூகம்பங்கள் உண்டாகி நகரத்திலுள்ள அனேக கட்டிடங்கள் அழிந்து அனேக ஜனங்கள் தங்கள் ஆஸ்திகளையும் வாசஸ்தலங்களையும் இழந்து மிக்க பரிதாபமான நிலைமை யடைந்தார்கள். நகரமெங்கும் ஜனங்கள் அன்னுகார மின்றி மிக்க கோர மான காட்சியாய் விட்டது. இராணி முதலியவர்களும், இராஜசபையைச் சேர்ந்தவர்களும் குருமார்களும் போர் வீரர்களும் தவிர மற்றபேரெல்லாம் நகரைவிட்டுப் புலங் களுக்கு ஓடிவிட்டார்கள். இவ்வளவு விபரீதமும் ஒரு பக லில் நேர்ந்துவிட்டது.

பூகம்பங்கள் நின்றதும் குருமார்கள் வெளியில் புறப் பட்டுச் சனங்களுக்குத் தேறுதல் கூறியதோடு உணவுப் பொருள்களையும் பணத்தையும் மிக்க உதாரகுணத் தோடு கஷ்டப் படுகிறவர்களுக் கெல்லா மளித்தார்கள். தேவசிங்க இராஜகுமாரன் தருப்புகளோடு வெளியிற் புறப்பட்டு சேதமடைந்த வீதிகளுக் கெல்லாம் சென்று பார்வையிட்டு ஜனங்களை யன்போடு விசாரித்துத் தேறு தல்கூறி ஏராளமான செல்வத்தைத் தானம்செய்து அழி ந்து போன கட்டிடங்களை யெல்லாம் உடனே கட்டுவதற்

கான ஏற்பாடுகளைச் செய்தான். சீக்கிரமாக வேலைமுடிக்கும் சிற்பிகளுக்கும் தச்சர் முதலிய தொழிலாளிகளுக்கும் நல்ல பரிசுகொடுப்பதாய் வாக்களித்தான். இவ்வாறெல்லாம் செய்து ஜனங்களின் அன்பை யதிகமாய்ப் பெற்றுக் கொண்டான். அன்று முதல் இரவும் பகலும் எங்கும் கட்டிடவேலைகள் தொடங்கி விட்டன.

பூகம்பம் நேர்ந்த ஒரு வாரங் கழித்து ஒருநாள் மாலை சுமார் ஆறு மணிக்கு நான்கு பேர் குதிரைகள்மேலேறிக்கொண்டு வடக்கி லிருந்து நகரத்திற்குள் பிரவேசிக்கிறார்கள். அவர்கள் ஆத்மநாதம் பிரபுவும் அவர் குமாரனாகிய மயூரநாதனும் இரண்டு ஆட்காரர்களுமே. பிரபு இரண்டு மூன்று காரணங்களுக்காக இப்போது நகர மாளிகைக்குத் தன் புத்திரனை யழைத்துச் செல்கிறார். முதலாவது, பின்னால் தன் புத்திரனுக்குச் சொந்தமாகப் போகும் நகர மாளிகையையும் அதிலுள்ள தன் மூதாதைகளின் படங்களையும் அவனுக்குக் காட்டி தம் குடும்பத்தைப் பற்றிபிருக்கும் கொடுஞ் சாபத்தைப்பற்றிய விவரத்தை யவனுக்குக் கூறுவதற்கும், இரண்டாவது, பூகம்பத்தால் தமது மாளிகைக்கு ஏதேனும் பழுது நேர்ந்ததாவென்று பார்க்கவுமே. இவையன்றி யின்னொரு காரணமு முண்டு. அதாவது டாக்டர் தங்கவேலுப்பிள்ளை தற்சமயம் பிராணனுக்குப் பயந்து ஒளிந்துகொண்டிருந்தாலும் அவனுக்கு இயற்கையாக வுண்டாகியிருக்கும் பண ஆசை இன்னும் அவனை விடவில்லை. பெரும் பாதகங்களை யெல்லாம் செய்து அவன் சம்பாதித்துச் சேமித்து வைத்திருக்கும் சொத்து முழுமையும் நகரத்திலுள்ள அவன் வீட்டில் இருக்கிறது. அவைகள் மிக்க இரகசியமான விடத்திலேதான் மறைத்து வைக்கப்பட்டிருக்கின்றன. ஆயினும் எதிரிகள் தன் வீட்டில் பிர

வேசித்துக் கொள்ளை யடிக்க வெண்ணி எல்லாவிடங்களை யும் ஆராய்ந்து பார்க்கத் தொடங்கினால், ஆஸ்தி யொரு சமயம் அவர்கள் கையில் சிக்கிக்கொள்ளுமோ என்ற பயம் அவனுக்குப் பெரிய மனோவேதனையாக விருந்தது. ஆகையால் பிரபு நகரத்திற்குச் சென்றால் அங்கிருக்கும் நிலைமையை யறிந்து, தான் இரகசியமாய் நகரத்திற்குள் நுழைந்து தன் சொத்துகளை யெடுத்துவந்துவிடக் கூடுமா என்பதைத் தனக்குத் தெரிவிக்கும்படி பிரபுவை வேண் டிக் கொண்டான். இக் காரணங்களுக்காகவே பிரபு இப் போது நகரத்திற்கு வந்தார். இவர்கள் மாளிகையைச் சேர்ந்து போஜனமருந்தியதும், பிரபு கையில் ஒருதீபத்தை யெடுத்துக் கொண்டு தன் புத்திரனை யழைத்துக் கொண்டு தன் மூதாதைகளின் படங்கள் வைக்கப்பட்டிருக்கும் அறைக்குச் சென்றார். அங்கு சென்றதே தமது வமிசத் தின் மூலபுருடனுடைய படம் கீழே விழுந்திருப்பதைக் கண்டதும் பிரபு "ஆ! நமது குடும்ப விஷயத்தில் ஏதே னும் விசேஷ சம்பவம் நேரிடும்போதெல்லாம் இப்படித் தான் இப்படம் அதிசயமான விதமாய்க் கீழே விழுந்து விடுகிறது" என்று கூறி, அந்த மூதாதையின் கொடும் பாதகச் செயலால் தங்களுடைய குடும்பத்திற்கு நேரிட்ட சாபத்தைப் பற்றிய விஷயங்களை யெல்லாம் விபரமாய்த் தன் புத்திரனுக்குக் கூறி வரிசையாக ஒவ்வொரு படத் தையும் காட்டிக்கொண்டே வந்தார். மயூரநாதன் அப் படங்களில் யாரார் குடும்ப சாபத்தால் பீடிக்கப் பட்ட வர்களோ அவர்கள் படங்களின் தலைப்பில் கறுப்புக் குறி யிடப்பட்டதைக் கவனித்துக் கொண்டே வந்தபோது, பிரபுவின் பாட்டனாகிய உலகநாதம் பிரபுவின் படத்தைக் கண்டதும் அதைத் தன் தந்தைக்குச் சுட்டிக் காட்டி,

"ஆ! தந்தையே! இவர்தானே தங்கள் பாட்டனார்?

இவர் தானே உயிரோடு எங்கோ போய் விட்டவர்?"
என்று வினவினான்.

பிரபு:—"ஆம் ஆம். இவர் தன் இருபத்தோராவது வயதில் ஒரு சாதாரண ஏழைப் பெண்ணை மணம்புரிந்து கொண்டார். அப்பெண் அந்தஸ்திற்கும் செல்வத்திற்கும் ஆசைப்பட்டு அவரை மணக்க ஒப்புக் கொண்டாள். ஆனால் அவள் மிக்க உத்தம நடக்கையும் கணவனிடம் பூரண பக்தியு முடையவளாயிருந்தாள். அம்மாது என் தந்தையாகிய ஒரேபுத்திரனைப் பெற்றாள். என் தந்தைக்குச் சுமார் பதினைந்து வயதான போது அந்தம்மாள் இறந்து போனாள். அதனால் என் பாட்டன் சகிக்கொணு வியாகூல முற்று தன்புத்திரனைத் தன்பட்டம் ஆஸ்தி யாவற்றிற்கும் சொந்தக் காரனாக்கி விட்டு, குடும்ப சாபத்தைப் பற்றிய இரகசியத்தை யவருக்குக் கூறிவிட்டு, ஒரு நாள் ஒருவருக்கும் கூறாமல் மாயமாகப் போய் விட்டார். அவர் எங்கு சென்றாரென்று யாருக்கும் தெரியாது" என்றார்.

மயூரநாதன் "அவர் எங்காவது தூரதேசம் சென்று தன் வாழ்நாட்களைக் கழித்துவிட் டிருப்பார். அல்லது ஒருசமயம் இன்னும் உயிரோடிருந்தாலும் இருக்கலாகும்" என்றான். பிரபு, "அப்படி யிருந்தால் அவர் இப்போது மிக்க வயோதிகராக விருக்கவேண்டும். அவர் இருந்தால் அவருக்கிப்போது வயது எண்பதுக்கதிகமாக விருக்கவேண்டும். என்மனதில் மட்டும் அவர் உயிரோடிருப்பதாகவே அடிக்கடி தோன்றுகிறது. கடந்த இரண்டு மூன்று மாதங்களில் அவரை இரண்டு மூன்று முறை கனவில் கண்டேன். கடைசியாகக் கண்டபோது அவர் முகத்தில் சந்தோஷப் பிரகாசமும் நம்பிக்கையான பார்வை

யும் இருந்தன. ஆ மைந்தனே! நமது குடும்பம் ஒரு அதிசயமான குடும்பம். நாம் கனவு சகுனங்கள் முதலிய வைகளில் நம்பிக்கை வைக்க வேண்டியவர்களாக விருக் கிறோம்.'' என்றபோது,

மயூரநாதன் “ தந்தையே! என்வரையில் அவ்வாறே நம்புகிறேன்; சிற்சில சமயங்களில் நமக்குள் அபூர்வ சாமார்த்திய முடைய ஏதோ ஒன்று இருந்துகொண்டு நாம் சாதாரணமாக அறியக்கூடாத எதிர்கால விஷயங் களைக் குறிப்பாய் அறிவிக்கிறது. கிழக்குதேசத்தி லிருந்து வந்திருந்த ஒரு சாஸ்திர நிபுணர் நமது மனதிற்குள் அபூர்வ சக்திக ளடங்கி யிருக்கின்றன வென்றும், மனம் சிற்சில நிலைமைகளை யடையும்போது அச்சக்திகள் வெளிப்பட்டு எதிர்கால விஷயங்களையும் மிக்க தூரத்தில் நடக்கும் நிகழ்கால விஷயங்களையும் அறிவிக்கின்றன வென்றும், தாங்களே முயற்சிசெய்து அத்தகைய மனோ நிலைமையை யடைந்த அறிவாளிகள் தாங்கள் கருதும் போது எந்த விஷயங்களையும் அறிந்து கொள்ளுகிறார்க ளென்றும், தமது நாட்டில் அத்தகைய மகான்களிருக் கிறார்க ளென்றும் கூறினர்'' என்றான்.

மயூரநாதன் அவ்வாறு கூறிக்கொண்டே, உலகநா தம் பிரபுவின் படத்தினுடைய தலைப்பிலிருக்கும் கறுப் புக்குறியின் மேல் தூசுபடிந்து அது நன்றாகப் புலப்படா திருந்தபடியால் தன் குட்டையால் அத்தூசைத் தட்டி னன். அப்போது படம் அசைய அதன் பின்னாலிருந்து மடித்த ஒரு சிறுகடிதம் கீழேவிழுந்தது. மயூரநாதன் ஆ! இதென்ன என்று அதைக் கையிலெடுத்து ஆவலோடு பிறித்துக் கொண்டே “ஆம். கடிதம்; எழுத்துக ளிருக் கின்றன'' என்றான். பிரபு “ஆ! நான் இங்கு உன்னை யழைத்து வந்தது என் பிரியப்படியல்ல; மேலான ஒரு

தெய்வீகச் சக்தி யெனக்குள்ளிருந்து என்னைத் தூண்டியே நான் வந்ததாகத் தெரிகிறது. அதில் என்ன எழுதப்பட்டிருக்கிறது? வாசி! வாசி!'' என்றார். மயூரநாதன் தீபத்தினருகிற் சென்று அக்கடிதத்தில் எழுதப்பட்டிருந்த சங்கதிகளைக் கீழ்க்கண்டபடி வாசித்தான்.

"இந்த உலகத்தின் சந்தடியே எனக்கு வெறுப்பாயிருக்கிறது. எனக்குச் சிறந்த பட்ட மிருந்தாலும், திரண்ட செல்வ மிருந்தாலும், போகபாக்கியங்க ளிருந்தாலும், மனச்சந்தோஷ மில்லாதபோது எவையிருந்தும் என்ன பயன்? என் மனதிலுள்ள அந்த நீங்காத வேதனையால் இவையனைத்தும் எனக்குப் பசையற்ற வெறுப்பாகவே தோன்றுகின்றன. நான் எங்காவது நிம்மதியான விடத்திற்குச் சென்று என் காலத்தை யொழித்து விடுகிறேன். அல்லது தவம்புரிந்து என்னையும் என் சந்ததியையும் பற்றியிருக்கும் அந்தக் கோரமான துன்பத்தி னின்றும் விடுதலையடைய முயலுகிறேன். ஆ! கடவுள் அவ்வளவு அருள்புரிந்தால்—என்னால் நானும் என் சந்ததியாரும் அத்துன்பத்தி னின்று விடுபடும்படியான அந்தப் புண்ணியம் எனக்கிருந்தால், அப்போதுதான் - அப்போது மட்டுமே நான் திரும்பி வருவேன். ஏன்! அந்தக் கொடிய கட்டளையில் என்ன கூறப்பட்டிருக்கிறது? 'இக்குடும்பத்தில் முறையின்படி அத்துன்பத்தால் பற்றப்பட்ட ஆடவர்களில் எவன் நீடித்தகாலமாகச் சீவித்திருந்து இத்துன்பத்தின் கொடுமையைச் சகித்துக்கொண்டு, ஆண்டவன் செவிக்கேற்கும் வண்ணம் பிரார்த்தனை செய்கிறானோ, அவனிடமிருந்து இத்துன்பம் நீங்கிவிடும், அதோடு இக்குடும்பத்தை விட்டே ஒழிந்துபோம்' என்றல்லவா. ஆகையால் என் சந்ததியாரே! நான் இன்னும் ஐம்பது அறுபது வரு

டங்கள் திரும்பிவரா திருப்பினும் நீங்கள் நம்பிக்கையை யிழந்து விடவேண்டாம். சர்வ ஜீவதயாபரனுகிய ஆண்டவன்மேல் பூரண நம்பிக்கைவைத்திருங்கள். ஏனெனில் நான் உங்களுக்குச் சந்தோஷ சமாசாரங் கொண்டு வருவேன் என்று என்னுள்ளத்தில் எதுவோ ஒன்று கூறுகிறது. இக் கடிதத்தை நமது குடும்பத்தில் பிறந்த ஆண்மக்கள் வாசித்தால் மட்டுமே இதிற் குறித்த இரகசியப் பொருளினை யறிவார்கள். ஏனையோர் ஒருவர்க்கும் இதுவிளங்காது.''

இதைக் கேட்ட பிரபு, "ஆ! இது ஏதோ தெய்வீகத்தாலேயே நடக்கிறது. இதில் கூறப் பட்டிருக்கும் விஷயம் நம்பத்தக்கதே. குழந்தாய்! உன் வேதனை கட்டாயம் ஒழிந்துவிடும் என்று என் மனதிற் படுகிறது. இன்று நாம் வந்ததும், நீ தற்செயலாக இதைத் துடைக்க முயன்றதும், இத்தனை நாள் கழித்து இது உன்கையில் சிக்கியதும், எல்லாவற்றையும் நோக்க நீ நம்பிக்கையோடிருவென்று உனக்குக் கூறுவது போலவே நன்றாய்த் தெரிகிறது'' என்றார்.

இவர்கள் இவ்வாறு சம்பாஷித்துக் கொண்டேயிருக்கையில், யாரோ அறையின் கதவைப் பட படவென்று தட்டுவதைக் கேட்டு பிரபு சென்று கதவைத்திறந்து அங்கு குழுமியிருந்த வேலைக்காரர்களை நோக்கி கோபத்தோடு "இதென்ன துஷ்டத்தனம்?'' என்றார். ஆனால் மறுவிநாடி அவர்கள் முகம் வெளுத்து மிக்க பீதியடைந்திருப்பதையுணர்ந்து வியப்போடு என்ன விசேஷம் என்றார்.

வேலையாட்கள், "பிரபுவே! நமது நகரத்தின் கெட்டகாலம் இன்னும் ஒழிய வில்லை. அந்தோ இப்போதுதான் பூகம்பம் உண்டாகி எவ்வளவோ கெடுதி

களை யுண்டாக்கி விட்டுச் சென்றது. அந்தப்புண் இன்னும் ஆருமலேயிருக்க, இப்போது ஒரு பெரிய ஆபத்து நமக்குண்டாகி யிருக்கிறது. அங்கநாட்டுச் சேனை நம் நாட்டின்மேல் படையெடுத்து வருகிறது. ஆச்சு நகரத்திற்குப் பதினுன்கு மைல் தூரத்தில் வந்து விட்டதாகக் கிராம வாசிகள் வந்து கூறுகிருர்கள்…'' என்ற போது, மயூரநாதன் "என்ன? அங்கநாட்டுச் சேனையா?'' என்ருன்.

ஆட்கள் "ஆம் ஆம். ஒரு இலட்சம் பேர்களாம். அந்தோ! இச்சேனையின் சேனுதிபதி யாரென்று கருதுகிறீர்கள்? கள்ளக்கூட்டத்தின் தலைவனுன மாயசிங்கனே'' என்று நடுக்கத்தோடு கூறினுர்கள்.

இதைக் கேட்ட மயூரநாதன் சந்தோஷத்தோடும் வியப்போடும் "மாயசிங்கனு? அப்படியாயின் நல்லவர்களும் நிரபராதிகளும் எதற்கும் கொஞ்சம்கூட பயப்பட வேண்டியதேயில்லை'' என்ருன்.

46-வது அத்தியாயம்.

அங்கநாட்டரசன் சேனைகள் நகரின்மேல் யுத்தத்திற்கு வருதல்—இராணியின் சேனைகள் யுத்தத்திற்கு ஆயத்தமாதல்—துஷ்டகேதுவின் தூதர்கள் கொண்டு வந்த சங்கதிகள்—சத்தியவீரப் பிரபுவும் இராகவ வீரப் பிரபுவும்—அதிசய மர்மங்கள் வெளியாதல்.

ஆத்மநாதம் பிரபுவிடம் அவர் ஆட்கள் கூறிய சங்கதியுண்மையே. ஆனுல் அவர்களுக்கு உண்டான பீதியால் சேனை கணக்கில் மட்டும் ஐம்பதினுயிரத்தை ஒரு இலட்சம் என்று கூறிவிட்டார்கள். பலம்

பொருந்தியவர்களும் பூரண ஆயுத பாணிகளுமாகிய ஐம் பதினுபிரம் வீரர்களே அந்த ஜனங்களுக்குப் பெரும் பீதியை யுண்டாக்கப்போதும். அதோடு அச்சேனே மாய சிங்கனல் நடத்தப்படுகிறதென்ற ஒரு விஷயமே அவர் களுக்கு அடங்காத பயத்தையும் கலவரத்தையும் அளிக் கப்போதுமானது.

நகரில் பலவித வதந்திகள் கிளம்பிவிட்டன. அங்க நாட்டினரசனுகிய சித்ரசேனன் கொலே செய்யப்பட்ட அமரநாதனுடைய தமையனுனதால், அவன் தன் தம்பி யின் கொலைக்காக இராணியின் மேலும் மற்றவர்கள் மேலும் பூரண வஞ்சம் தீர்த்துக்கொள்ளவே சேனையை யனுப்பினுன் என்பது சிலர் கொள்கை. ஆயினும் துஷ்ட கேது தற்காலத்திற்கு அரசனுக நியமிக்கப்படுவான் என் பது சிலர் அபிப்பிராயம். தன் கொடிய விரோதியாகிய துஷ்டகேதுவுக்குப் பட்டத்தை யளிப்பதாயின் இராக வன் அங்க நாட்டரசன் சைனியத்தில் சேர்ந்து வேலை செய்யச் சம்மதித்திருக்கமாட்டான் என்பது சிலர் அபிப் பிராயம். ஆழ்ந்த ஆலோசனையுடைய சிலர் "மாயசிங்கன் இத்தகைய பலமான சேனே தன் கையிலிருக்குமட்டும் தானே சிம்மாதன மேறுவான்" என்றனர்.

இராணியின் அரண்மனையில் இச்சங்கதியைக் கேட் டதே பெருங்குழப்ப முண்டாய்விட்டது இராணியின் அத்தையாகிய கோமளாபாய், "அய்யோ! நாம் நமது புத் திரன் அரசனுவானென்று செய்த முயற்சி யனைத்தும் வியர்த்தமாய் விடுகிறதே. கடைசியில் நம் புதல்வனும் அவன் காதலியான இராணியும் நாட்டைவிட் டோடி விட நேர்ந்துவிட்டதே" என்று மிக்க வியாகூலமுற்றுள். இராணியும் அம்மாதும் ஓடிவிடவே தீர்மானித்து விட் டார்கள்.

ஆனால் தேவசிங்க இராஜகுமாரன் இச்சங்கதியைக் கேட்டு கலக்க மடைந்து விடவில்லை. சமயோசிதமான தைரியமும் துணிகரமு மடைந்து எதிரிகளைத் தடுத்துப் போர் தொடுக்கத் தீர்மானித்தான். அவனுடைய தீர மொழிகளால் இராணியும் தேறுதலும் தைரியமு மடைந்தாள். அவன் இராணியை நோக்கி, "முன்னே ஆலசியம் செய்யாமல் தகுதியான இராஜதூதரை யனுப்பி சத்திய வீரப்பிரபு நமது நாட்டின்மேல் படையெடுத்து வருவதை யாட்சேபித்து, அப்படிச் செய்ய நினைத்ததற்கு என்ன காரணம் என்று அறிந்துவரச் செய்யவேண்டும்" என்றான். அவ்வாறே தூதர்கள் அனுப்பப்பட்டார்கள். எதிரிகள் படையெடுத்து வரும்சங்கதி அரண்மனைக் கெட்டிய போது மாலை மூன்றுமணியிருக்கும். தேவசிங்கன் உடனே நகரத்தைப் பாதுகாப்பான நிலைமையில் வைக்க முயன்றான். திருப்புகளில் போதுமானவர்களை அரண்மனைக்குக் காவலாக வைத்தான். நகரமெங்கும் பறையறைவித்து சேனைகளை யொன்று சேர்த்தான். தானே குதிரை மேலேறிக் கொண்டு நகரின் நாற்புறங்களிலும் சென்று, பணத்தைத் தாராளமாய்ச் செலவிட்டு ஆட்கள் ஆயுதங்கள் யாவும் சுறுசுறுப்பாகச் சேகரித்தான். சைனியத்தில் வந்து சேரும் பலம்பொருந்திய வாலிபர்க் கெல்லாம் இராணியால் நல்ல பரிசளிக்கப்படுமென்று எங்கும் பறையறைவித்தான். முன்னமே ஜனங்களின் அன்பைக் கவர்ந்துகொண் டிருக்கும் வீரத்தன்மை யுடைய இந்த இராஜகுமாரன் முயற்சியால் ஏராளமானவர்கள் சைனியத்தில் உடனே வந்து சேர்ந்து விட்டார்கள். இதனால் தைரியத்தோடு எதிரிகளைத் தடுத்து யுத்தம்செய்ய அனுகூலம் ஏற்பட்ட தன்னியில் பூரணவெற்றியே பெறலாம் என்ற நம்பிக்கையும் அவனுக் குண்டாய் விட்டது. சில படைகளை

யனுப்பி நகரத்திற்கு ஐந்துமைல் தூரத்தில் வடக்கிலிருக்கும் அவநாசி என்ற நகரைக் காவல் செய்யும்படி கட்டளையிட்டான். அந்நகரம் எதிரிகள் வரும் பாதையில் இருக்கிறது. இரவு முழுமையும் நகரில் பெருஞ் சந்தடியாகவே யிருந்தது. உடைகள் தைப்பதும், ஆயுதங்கள் தீட்டுவதும், ஆகாரங்கள் சமைப்பதும் ஆகிய இத்தகைய வேலைகள் சுறுசுறுப்பாய் நடந்தன. இராஜகுமாரன் ஆயிரக்கணக்கான தீவட்டிகளின் வெளிச்சத்தில் சேனைகளை யணிவகுத்துப் பரீக்ஷித்து அவர்களுக்கு உற்சாகத்தையும் உரோஷத்தையும் உண்டாக்கத் தக்க மொழிகளைக் கூறிக் கடைசியில் இராணி தன்னையே முழுசேனைக்கும் சேனாதிபதியாய் பட்டம் சூட்டியிருக்கிறாள் என்று கூறிய போது யாவரும் மிக்க சந்தோஷ ஆரவாரம் செய்தார்கள்.

இச் சந்தர்ப்பத்தில் பரம துஷ்டனாகிய துஷ்டகேதுவின் நிலைமை யெப்படி யிருக்கிறதென்று கவனிப்போம். முன்பு இவனும் நகரகுருவும் இன்னும் சில பிரபுக்களும் ஒன்று சேர்ந்து அமரநாதனுக்கு இரகசியமாய் முடிசூட்டியபோது, அமரநாதன் தன் தமையனுக்குக் கடிதம் எழுதி யிருப்பதாகவும் அதற்குவரும் விடையை எதிர்பார்த்துக்கொண் டிருப்பதாகவும் கூறினது நேயர்களுக்கு நினைவில் இருக்கலாம். அவன் கடிதம் எழுதியது அங்கநாட் டரசனாகிய சித்ரசேனனுக்கே. அது முதல் துஷ்டகேது அங்கநாட்டு இராஜாங்கத்தில் தன் தேசத்தைப்பற்றி நடக்கும் விஷயங்கள் அப்போதைக் கப்போது அறிந்து கொள்வதற்காகத் தகுதியான ஆட்களை ஏற்படுத்தி யிருந்தான். அதனால் நவீனபுரி இராஜ்ஜியத்தின்மேல் அந்த அரசன் படையெடுக்க வெண்ணிச் சேனையைச் சேகரிக்கத் தொடங்கியபோதே துஷ்டகேது

வுக்குச் சங்கதி யெட்டியது. “ அந்த அரசன் அவ்வாறு செய்வது தம் தம்பியாகிய அமரநாதனைக் கொன்றவர்கள் மேல் வஞ்சந்தீர்த்துக் கொள்ளவே யாதலின், நாம் ஜகத் குருவின் கட்டளையைக்கொண்டு அக்குற்றவாளிகள் தண் டனை யடையும்படி செய்துவிட்டால் அந்த அரசன் வஞ் சந்தீர்ந்து படையெடுக்காமல் பேசாம லிருந்துவிடுவான். பிறகு நாம் இந்த இராணியை மணந்து அரசனுகத் தாராளமான வழி யேற்பட்டுவிடும்” என்று துஷ்ட கேது யோசித்துக் கொண்டான். மேலும் “ இராகவன் அங்கநாட் டரசனிடம் வேலையில் அமர்ந்து கொண்ட வரையில் தன்தாய் எப்படிப் போனுலும் போகட்டு மென்று அவளை வெறுத்துவிட்டே போயிருக்க வேண் டும். ஒருசமயம் அப்படிக் கில்லாவிட்டாலும், அந்த அரசன், தன் தம்பியின் கொலைக்காக வஞ்சம் தீர்ந்து போனபின் இராகவன் தன் தாயை மரணதண்டனை யடையச் செய்த நம்மேல் வஞ்சம் தீர்த்துக் கொள்வதற் காக அவனுக்கொரு சேனையை யளிக்கமாட்டான்” என்று ஆலோசித்துக் கொண்டே பத்மநாயகியும் சிரச் சேத மடையும்படி செய்தான்.

தண்டனைகள் நிறைவேறியதும் துஷ்டகேது தான் மிக்க சிரத்தை யெடுத்து அவர்கள் தண்டனை யடையும் வண்ணம் செய்ததைப் பற்றி விவரமாய் ஒரு கடிதம் எழுதி அங்கநாட்டரசனுக் கனுப்பினுன். கடிதம்கொண்டு போனவர்கள் திரும்பிவந்து, “ தாங்கள் அளித்த கடி தத்தை மந்திரிகள் மூலமாய் சித்ரசேன ராஜன் பெற்றுக் கொண்டார். ஆனல் எங்களுக்குப் பேட்டி கொடுக்க மறுத்து விட்டதோடு நாங்கள் அவர் நாட்டு எல்லைக்குள் தங்காமல் உடனே வெளிதாண்டி விடவேண்டு மென்று

மந்திரியின் மூலமாய்க் கடினமான கட்டளையனுப்பினர்.” என்று துயரத்தோடு துஷ்டகேது விடம் கூறினர்கள்.

துஷ்டகேது கோபத்தையும் கலக்கத்தையும் அடக்கிக்கொண்டு “இருக்கட்டும் நமது நாட்டின்மேல் படையெடுக்கச் செய்யும் முயற்சி எப்படியிருக்கிறது?” என்ருன். அவர்கள் “ஆ! அம்முயற்சி முன்னிலும் மிக்க துரிதமாக நடக்கிறது; பெருந்திரளான முதல்தர சேனை சேகரிக்கப்பட் டிருக்கிறது சற்றேறக்குறைய எல்லாம் ஆயத்தமாய் விட்டனவென்றே கூறலாகும்” என்ருர்கள்.

இதற்கிடையில் இராணிக்குத் தேவசிங்க இராஜகுமாரன் வந்து துணையாகச் சேர்ந்ததும், இராணி தன்னையரண்மனைக்குள் வரவிடாமல் செய்ததும், 'பிறகு தனக்குப் போட்டியாய்த் தேவசிங்கன் இராணியின் காதலையும் ஜனங்களின் விசுவாசத்தையும் பெற்றிருப்பது மாகிய இவற்ருல் துஷ்டகேதுவின் மனம் கோபம், பொருமை, கலக்கம் இவற்ருல் மிக்க வேதனைப் பட்டுக்கொண் டிருந்தது. அதோடு சித்ரசேன இராஜனிடம் அனுப்பப்பட்ட ஆட்கள் கொண்டுவந்த சங்கதியால் அவமான முண்டானதோடு மிக்க மனக் கலக்கத்திற்கு ஏதுவாய் விட்டது. பிறகு அங்கநாட்டரசன் அனுப்பும் சேனை மாயசிங்கனும் இராகவனும் நடத்தப்படுகிற தென்பதை யறிந்ததே துஷ்டகேதுவுக்குக் கலக்கம் அதிகமாய் விட்டது. அவர்கள் இருவரும் தன்மேல் கொடிய விரோத முடையவர்கள் என்று அவன் அறிவான். மாயசிங்கன் எவ்வாறு அங்கநாட்டரசனிடம் அவ்வளவு அதிகமான செல்வாக்கு பெற்றுவிட்டா னென்பது மட்டும் அவனுக்கு விளங்கவில்லை. ஆயினும் தான் அனுப்பிய ஆட்களை யந்த அரசன் பார்க்காமல் துரத்தியதற்குக் காரணம் இவர்களே யென்று மட்டும் தீர்மானித்துக் கொண்டான்.

இத்தகைய நிலைமையில் இருந்த துஷ்டகேது அங்க நாட்டுச்சேனை நகரத்தின் சமீபத்தில் வந்து விட்டதென்ற சங்கதியைக் கேட்டதே பேரிடிவிழுந்தவன் போல் பிரமித்துத் திகைத்து விட்டான். அவன் மனம் ஒரு யோசனையும் செய்ய முடியாமல் தேனில் விழுந்த ஈயைப் போல் பரிதபித்தது. ஆகையால் உடனே நகரகுரு முதலிய தன் நண்பர்களை வரவழைத்து ஆலோசனை செய்தான். அவர்களில் நகரகுரு, "இப்போது நாம் வேறு விதமாக ஆலோசனை செய்வதில் பயனில்லை. இன்னும் நமக்குள் இருகட்சியாக விருந்தால் எதிரிகள் சுலபமாக இரண்டையும் வென்று விடுவார்கள். ஆகையால் இவ்விஷயத்தில் நாமும் இராணியின் கட்சியோடு சேர்ந்து ஒருமித்தே எதிரியைத் துரத்தவேண்டும்" என்றார். இந்த ஏற்பாட்டை யுடனே துஷ்டகேதுவும் மற்றவர்களும் ஒப்புக்கொண்ட பின் தேவசிங்கம் இராஜகுமாரனுக்கு இதை யறிவித்தார்கள். அவன் தடை கூறாமல் இதற்குச் சம்மதித்தான். ஆனால் மொத்த சேனையும், துஷ்டகேது முதலிய அனைவரும் யுத்த விஷயத்தில் தனக்குக் கீழ்ப்படிந்தே நடக்கவேண்டு மென்றான். துஷ்டகேதுவுக்கு இது அவமானமாகத் தோன்றினும் தாய் நாட்டின் க்ஷேமத்தைக் கருதி அந்த நிபந்தனைக்கும் சம்மதித்தான். அன்றிரவு முழுமையும் துஷ்டகேதுவும் தன் அரண்மனையைச் சார்ந்த பூமியில் படைகளைத் திரட்டி யுத்தத்திற்கு ஆயத்தம் செய்யத் தொடங்கினான்.

இதை வாசிக்கும் நம்நாட்டுச் சகோதரச் சகோதரிகள் இச்சந்தர்ப்பத்தில் சற்று சிந்திக்கும்படி வேண்டிக் கொள்கிறோம். துஷ்டகேதுவுக்கு இராணியின் கட்சியார் மேல் இருக்கும் விரோதம் எவ்வளவு கடுமையானது!

இராணியின் மேலும் தேவசிங்கன் மேலும் அவனுக்குள்ள கோபமும் பொருமையும் அவர்களைக் கொன்றாலும் தீராது. இராணிக்கு அவன் செய்த தீங்குகளுக்கோர் எல்லையில்லை. ஆகையால் இராணிக்கும் துஷ்டகேதுவின் மேலுள்ள பகை அளவிட்டுக் கூறக்கூடியதல்ல.

இருகட்சிகளுக்கும் இத்தன்மைய விரோதம் இருந்தும் இருவர்க்கும் பொதுவான தாய்நாட்டின் க்ஷேமத்தைக் கருதித் தங்கள் பகையை ஒரு பக்கம் கட்டிவைத்துவிட்டு, இருவரும் ஒருமித்து தேசத்தைக் காப்பாற்ற ஒற்றுமை யடைந்தார்கள். இவர்களல்லவோ ஒற்றுமையின் பயனை யுணர்ந்தொழுகுவோர். மேல் நாட்டார் இந்த அறிவைப் பெற்றிருப்பதாலேயே சீரும் சிறப்பும் அடைந்திருக்கிறார்கள். நமது நாட்டார்களா யிருந்தால் எதிர்கட்சியை யழிக்க வேண்டிய ஒரு எண்ணத்தையே முக்கியமாகக் கொண்டு, 'எதிரிக்கு ஒரு கண் போவதானால் நமக்கு இரண்டுகண்களும் போனாலும் சரிதான்' என்று கோரும் மூடசிகாமணியைப் போல் தாய்நாடழிந்தா லழியட்டும், எதிர்கட்சி துன்பமடைவதே நமக்குப் பெரிதென்றெண்ணி வெளியிலிருந்து வந்த விரோதிக்கு உள்ளுளவாயிருந்து துணை செய்வார்கள். "இப்போது நமது உதவிகொண்டு நம் எதிர்கட்சியை யழிக்கும் பகைவன் பிறகு சுலபமாகவே நம்மை யழித்துவிடுவானே. நம் செய்கை முடிவில் நம் தாய் நாட்டிற்கே பெருங்கேட்டை விளைவிக்குமே" என்று கருதவே மாட்டார்கள். நேயர்களே! நம் நாட்டாரை நாம் தூஷணமாய்க் கூறுவதாகக் கருதவேண்டாம். இப்போது நம் நாட்டில் கட்சிபேதங்களுண்டாவதும் அவற்றால் கெடுதிகள் நேரிடுவதுமாகிய பிரத்யட்ச விஷயங்களால் மனம் வருந்திக் கூறுகிறோமேயன்றி வேறில்லை. நமது நாட்

டார் எப்போது ஒற்றுமையின் பயனைப் பூரணமாக உணர்ந்து நடப்பார்களோ, எப்போது தாய் நாட்டின் முன்னேற்றத்தைக் கருதி தங்களுக்குள் இருக்கும் ஜாதி பேதம், மதபேதம், சில்லரைச் சச்சரவுகள், ஆகியவற்றை நீக்கி விட்டு, சுயநலம் கௌரவம் இவற்றைக் கருதாது மனமொருமித்து ஒற்றுமை யடைகிறார்களோ, அப்போது தான் நம்நாடு க்ஷேமமடையத் தொடங்கும்.

நவீன புரிக்கு ஐந்து மைல் தூரத்தில் அவநாசி என்ற நகரமிருக்கிறதென்று கூறினோமல்லவா, அதற்குச் சற்று தூரத்தில் ஒரு பக்கம் குன்றுகளையும் காறுறுகளையு முடைய வெளிப்பிரதேசம் இருக்கிறது. மேற்கண்ட சம்பவங்கள் நடந்த மறுநாள் காலை வானம் களங்கமின்றி யிருந்தது. காலைச் சூரியனுடைய பிரகாசத்தில் அவ் வெளிப் பிரதேசம் முழுமையும் கண்களுக் கெட்டிய தூரம் வரையில் ஒரே வெள்ளைச் சீலை விரித்திருப்பது போல் பளபள வென்று பிரகாசித்தது. அப்படிப் பிரகாசிப்பது வெள்ளைச் சீலையே. எப்படியெனின் அவை யாவும் எண்ணிறந்த கூடாரங்களேயாகும். அவ்வாறு புலப்படும் அச்சிறிய வெள்ளைநகரம் அங்கநாட்டுச் சேனையின் கூட்டங்களே. முன் இரவுதான் சத்திய வீரப் பிரபுவால் நடத்தப்பட்ட அச்சுத்த வீரர்களின் கூட்டம் அங்கு வந்துசேர்ந்து பாளையமிறங்கியது. வெளியான விடங்களிலும், குன்றுகளின் சரிவுகளிலும், ஆறுகளின் கரைகள் நெடுகவும், எங்கும் ஒழுங்கான நேர்வீதிகள் போல் கூடாரங்கள் அமைக்கப்பட்டிருகின்றன. பாளையம் முழுமையும் யுத்த சங்கீதம் முழங்கிக்கொண்டிருக்கிறது. போர் வீரர்கள் தங்கள் கவசங்களைத் துடைத்துக்கொண்டும், ஆயுதங்களைக் கூராக்கிக்கொண்டு மிருக்கிறார்கள். போர்

வீரர்களோடு கூட வந்த மாதர்கள் சமையல் வேலை செய்.துகொண் டிருக்கிறார்கள்.

அன்று பகற்பொழுது கழிந்து ஆதித்தன் மேற் கடலில் மறைந்தான். பாளையம் முழுமையும் எண்ணிறந்த தீபங்கள் பிரகாசிக்கத் தொடங்கின. மேற் கண்ட பாளையத்தின் மத்தியில் ஒரு சதுரமான மேட்டில் ஒரு பெரிய கூடாரம் இருந்தது. அக்கூடாரம் மற்ற எல்லா கூடாரங்களையும் விட மிக்க பெரியதாகவும் பிரகாசம் பொருந்திய வெள்ளை நிறமுடையதாகவும் இருந்தது. அதன் உட்பக்கம் பொற்சரிகையால் வேலை செய்யப்பட்ட மொகம்மல் சீலைகளால் அலங்கரிக்கப் பட்டிருந்தது. அதைச் சூழ்ந்து அனேகம் போர்வீரர்கள் காவல் நின்றார்கள். தீபம் வைத்தவுடனே ஒருவீரன் அந்தக் கூடாரத்தை நோக்கி வருவதைக்கண்ட போர்வீரர்களனைவரும், கற்சிலைகள் போல் அசைவற்று நின்று அவனுக்கு மரியாதைசெய்தார்கள். அவனே அவர்களுடைய இரண்டாவது சேனாதிபதியாகிய இராகவவீரப் பிரபு.

இராகவன் சேனாதிபதியாகிய சத்திய வீரப்பிரபுவின் கூடாரத்திற்குள் சென்றான். அவனைக் கண்ட அப்பிரபு மிக்க சந்தோஷத்தோடும் அன்போடும் எழுந்து எதிர் கொண்டுவந்து அழைத்துச் சென்றார். இராகவன் உடனே அப் பிரபுவின் பாதங்களில் முழங்காலிட்டுப் பணிந்தான்.

சத்திய வீரப்பிரபு:—" என் அன்பார்ந்த இராகவவீரனே! என் எனக்கு இவ்வளவு தாழ்ந்த வணக்கம் காட்டுகிறாய்?" என்றார்.

இராகவன்:—" சங்கைக்குரிய வீரராகிய மகாப்பிரபுவே! பெருந்தன்மையும், கருணையும், இரக்கமுமுடைய தாங்கள் சுத்த வீரனுடைய இலக்ஷணம் இன்னதென்

பதை எனக்கறிவித்தீர்கள். என் நடக்கைகளை யடியோடு மாற்றி எனக்கு இத்தகைய கௌரவமும் பெருமையும் வாய்ந்த பதவியை யளிக்கத்தக்க புத்திமதிகளைப் பெற்றேரினும் கருணையோடும் அக்கரையோடும் போதித்தீர்கள். தங்கள் கருணையால் நான் இப்போது பூரணமான மாறுதலடைந்திருக்கிறேன். ஓ! அரிய குணங்கள் வாய்ந்த பிரபுவே! இப்போது நாம் நவீனபுரியினருகில் வந்து சேர்ந்துவிட்டோம். தாங்கள் ஏதோ சில விஷயங்கள் கூறுவதற்குக் குறித்த காலம் வந்துவிட்டது'' என்று மொழிந்தான்.

சத்திய வீரப்பிரபு உடனே முகத்தில் ஒருவிதப் பிரகாசமும், மனதில் கொஞ்சம் கலவரமும் தடுமாற்றமுமுடையவராகி, "ஆம். ஆம். அக்காலம் வந்துவிட்டது. என்னைப்பற்றி நீ யறிய விரும்பிய மர்மங்களையும், உன் மனதில் தோன்றியிருக்கும் சந்தேகங்களையும் யாவற்றையும் தெளிவாய்க் கூறவேண்டிய காலம் வந்துவிட்டது. உன்னைச் சோதனை செய்யுங்காலம் போய் உன்னைப் பூரணமாய் நம்பிவிட வேண்டிய காலம் வந்துவிட்டது. என் அன்பிற்குரிய இராகவா! என் கண்மணியே! என்னை யாலிங்கனம் செய்துகொள். ஏனெனில் நான் உன் தந்தையே'' என்றார்.

47-வது அத்தியாயம்.

தந்தையும் மகனும்—பழைய மர்மங்கள் வெளியாதல்—சத்திய வீரப்பிரபுவின் சரித்திரம்.

தந்தைக்கும் மகனுக்குமுண்டான அன்பினாலாகிய மனக்கிளர்ச்சி யடங்கக் கால் மணி நேரமாயிற்று. அதன் பிறகு இருவரும் சாந்தமாக ஆசனங்களிலமர்ந்த பின், இராகவன் தன் தந்தை கூறுவதாய் வாக்களித்த விஷயங்களைச் செவியேற்க மிக்க ஆவலோடு அவர் முகத்தையே நோக்கிக்கொண் டிருந்தான். பிரபு பின் கண்டவாறு கூறத்தொடங்கினர்.

" ஆம் ஒரு காலத்தில் கொஞ்சமேனும் பிரசித்தியில் லாது ஏழையாக விருந்த வலைஞனாகிய இலட்சுமணன் என்பவனே யான். பத்தொன்பது வருடங்களுக்கு முன் நான் அபாண்டமாகக் கொலைக்குற்றம் சுமத்தப்பட்டேன். டாக்டர் தேவராசுப்பிள்ளையை நான் கொலை செய்ததாகச் சிறையாக்கப்பட்டேன். சந்தர்ப்ப சாக்ஷியங்கள் என்னையே குற்றவாளியாகக் காட்டின. ஆனல் உண்மையில் நான் நிரபராதி. ஆகையால் எப்படியும் கடைசியில் உண்மை வெளிவரும். கடவுள் நிரபராதியைத் தண்டனை யடையும்படி விடமாட்டார் என்றே நம்பியிருந்தேன். ஒரு நாள் உன் தாயாரும் நீயும் என்னைச் சிறைச்சாலையில் காண வந்தீர்கள். ஆ! அப்போது நான் அனுபவித்த மனோவியாகூலம் சொல்லக் கூடியதல்ல. மற்ற யார் என்னை நிரபராதியென்று நம்பாவிடினும் எனக்கு அக் கரையில்லை. அது என் மனதை யவ்வளவாக வாதிக்காது. என் சொந்த மனைவியும் என் புத்திரனுமே என் வார்த்தையை நம்பாமல் என்னைக் கொலை பாதகனென்றே

தீர்மானித்துக் கொண்டதை யறிந்தபோது எனக்கு எல்லாம் வெறுப்பாகிவிட்டன. அப்போது வந்த கோபத்தால் உங்களை வெளியில் தள்ளிவிட்டுத் தனியே உட்கார்ந்துகொண் டிருந்தேன். நெடுநேரங்கழித்து எனக்குத் தேறுதல் கூறி என்னோடு பிரார்த்தனை செய்ய ஒரு குரு என்னறைக்கு வந்தார். அவரிடம் நான் உண்மையைக் கூறியபோது, அவரும் என்னைக் கொலையாளி யென்றே பூரணமாக நம்பிக்கொண்டு, "வீணாக ஏன் மறைத்துக் கூறுகிறாய்? உண்மையை யொப்புக்கொண்டால் ஆண்டவன் கோபம் கொஞ்சமேனும் தணியும்" என்றார். உடனே என் மனப்புண்ணில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றியதுபோ லாயிற்று. "ஓகோ இது உண்மை யறியாக்காலம், யாவரும் நான் கொலை செய்தவனே என்று முன்னடியே தீர்மானித்துவிட் டிருக்கிறார்கள். இனி நாம் நியாய சபையில் கூறினால் கூட நம்மை நிரபராதி யென்று நம்பமாட்டார்கள். இனி நாம் தப்பித்துக்கொள்ள முயல வேண்டியதே" என்று தீர்மானித்துக்கொண்டேன். அக்குரு சரியாக என் உயரமே இருந்தார். நான் உடனே அவரைப் பிடித்து கை கால்களைக்கட்டி வாயில் துணி யடைத்துவிட்டு அவர் உடைகளைக் கழற்றி அணிந்து கொண்டு சிறைச்சாலையினின்று வெளி யேறிவிட்டேன். ஆ! பிறகு அந்த குரு அதனால் இறந்து போனாரென்று கேள்விப்பட்டதே என் மனம் மிக்க வேதனை யடைந்தது.

இதுவரை நடந்த சங்கதிகளைப் பின்னாலேனும் கேள்விப்பட்டேயிருப்பாய். இனி கூறப்போகும் சங்கதிகளோ நீ இனி யறிந்துகொள்ள வேண்டியவை. சிறைச்சாலையைவிட்டுப் புறப்பட்டதே நகரத்தைக் கடந்து அதி துரிதமாய் நடந்து பொழுது விடிவதற்குள் நெடுந்தூரம்

போய்விட்டேன். அன்றே நமது நாட்டு எல்லையைக் கடந்து கொஞ்சதூரம் சென்றபின் ஒரு கிராமத்தில் தங்கி இளைப்பாறி என் குரு வுடையைக் கொடுத்துவிட்டு, ஒரு குடியானவன் உடைகளை வாங்கி யணிந்துகொண்டேன். வேலைக்காக என்ன முயன்றும் எங்கும் கிடைக்கவில்லை. அச்சமயம் அங்கநாட்டிற்கும் அதன் தெற்கிலுள்ள துருக்க இராஜ்ஜியத்திற்கும் கடும்போர் நடந்துகொண் டிருந்தது. நேராய் அங்கு சென்று அங்க நாட்டுச்சேனை யில் ஒரு போர் வீரனுக அமர்ந்துகொண்டேன். அப் போது நடந்த சண்டைகளில் நான் தைரியத்தோடும் வீரத்தோடும் யுத்தம் புரிந்தபடியால் சிக்கிரத்திலேயே காப்டன் பதவியைப் பெற்றேன். அதற்குப் பின்பு ஒரு நாள் நான் தெய்வசங்கல்பத்தால் என் அரசனுடைய உயிரைக் காப்பாற்ற நேரிட்டது. அரசன் என்மேல் மிக்க சந்தோஷங்கொண்டு சத்தியபுரி ஜாகிரை யெனக் களித்ததோடு உடனே சைனியத்தில் எனக்கு ஜனரல் பதவியும் அளித்துவிட்டார். அதன் பிறகு ஒரு விடத் தில் பிரபலமான யுத்தம் நடந்தபோது எங்கள் சேனை யின் வலதுபக்கப் படையும் மத்தியபாகப் படையும் எதிரிகளால் மிக்க கடுமையாய்த் தாக்கப்பட்டதால் அதிக சேதமடைந்து கலைந்தோடத் தொடங்கின. அச்சமயம் நான் நடத்திக்கொண்டிருந்த இடதுபாகப் படையைக் கொண்டு மற்ற படைகளைக் காப்பாற்றியதோடு எதிரி களுக்கு மிக்க சேதமுண்டாக்கி யவர்கள் சிதறியோடும் படிச் செய்தேன். அதனல் அவர்களுடைய பொக்கிஷ மும் ஏராளமான யுத்த தளவாடங்கள் கூடாரங்கள் குதிரைகள் முதலியனவும் எங்கள் கையில் சிக்கின.

இதைக் கேட்டதே அரசன் எனக்கு நன்றிபாராட்ட விரும்பி பெருந் தொகையான பொருளை யளித்ததோடு

சத்தியவீரப் பிரபு என்ற பிரபுப் பட்டத்தையு மெனக் களித்து, அப் பட்டத்தை எனக் களித்த சத்தியபுரி ஜாகீ ரோடு சேர்த்து விட்டார். அந்தோ! சமீபத்திலேயே அச்சமயம் என் தலைக்குமேல் சூழ்ந்திருக்கும் கறிய மேகம் இடிக்கப் போவதை யறியேன். என்ன வெனில், அரசனிடமிருக்கும் மந்திரிப் பிரதானிகள் நான் இவ் வளவு சீக்கிரமாகப் பட பட வென்று அவ்வளவு மேலான அந்தஸ்திற்கு வந்து விட்டதைக் கண்டு மிக்க பொறாமை கொண்டு, என்னை யடியோடழிக்க வெண்ணி அரசனிடம் என்னைப் பற்றி ஏதேதோ பொய் வதந்திகளைக் கூறினார் கள். அறிவில்லாத அந்த அரசன்—இப்போதிருக்கும் தேவசிங்க மகாராஜனுடைய தந்தை-விசாரித்து உண்மை யைக் கண்டறியாமலே, என் பட்டம் ஜாகீர் ஆஸ்தி முத லிய யாவற்றையும் பிடுங்கிக் கொண்டதோடு உத்தியோ கத்திலிருந்தும் நீக்கி விட்டான். நான் என் உடை வாளோடும் கொஞ்சம் ரொக்கப் பணத்தோடும் அந்த நன்றி கெட்ட அங்க நாட்டைவிட்டு வெளிப்பட்டேன். நான் நவீனபுரி சிறைச்சாலையிலிருந்து தப்பித்துக் கொண்டு வந்துவிட்டு அப்போது ஆறு வருடங்க ளாயின. என் மனைவியையும் புத்திரனையும் காணவேண்டு மென்று எனக்கு மிக்க ஆவலாயிருந்தது. ஆகையால் மாறுவேட மணிந்து கொண்டு ஒரு ஹோட்டலில் தங்கி மிக்க எச்சரிக்கையோடு விசாரித்தபோது, "என் மனைவி இறந்துபோன அரசனுடைய வைப்பாட்டியா யிருக்கிறா ளென்று கேள்விப்பட்டேன். ஓ கடவுளே! இதைக் கேட்டதே என் மனதில் பழுக்கக் காய்ச்சிய வேலைச் சொருகியதுபோ லிருந்தது. அதைப் பற்றி யதிகமாய்க் கூறாது சுருக்கி விடுகிறேன். அவ்வளவு வேதனைப்பட் டும், என்மேல் இல்லாத பழிகள் கூறப்பட்டு நான்

யாவற்றையும் இழக்க நேர்ந்ததை நினைத்து, ஒரு சமயம் நம் மனைவி உயர்ந்த அந்தஸ்தி லிருப்பதால் யாரேனும் பொறாமையால் இப்படிக் கூறலாகும்! இதைத் தீர விசாரித்தறிய வேண்டு மென்று இரகசிய மாகவே ஆராய்ச்சி செய்யத் தொடங்கினேன். அய்யோ! என் தீவினை, நான் என் மனைவி நிரபராதி யென ருசுவாகுமா வென்று ஆவல் கொண்டு பார்த்த போது, அவள் அரசனுக்கு மட்டுமல்ல - பிரதம வைத்தியராகிய தங்கவேலுப் பிள்ளைக்கும் வைப்பாட்டியா யிருக்கிறாளென்று ஐயமறத் தெரியவந்தது. அதைக் கேட்டதே இன்னும் அங்கிருந்தால் என்மனதில் விபரீத யோசனைகள் உதிக்கும் போல் தோன்றியது. உடனே வெறிகொண்டவன்போல் நகரத்தை விட்டு ஓட்ட மெடுத்து இந்த நாட்டெல்லையைக் கடந்து போன பிறகு, நிதானமாக என்ன செய்யலா மென்று ஆலோசனை செய்தேன். அங்கநாட்டிற்கோ செல்லலாகாது. சரி, நேராய்த் துறைமுகத்திற்குச் சென்று கப்பலேறிப் பாஞ்சால தேசம் போய் அந்த அரசனுடைய சேனையில் ஒரு உத்தியோகம் பெற்றுக் கொள்வதென்று தீர்மானித்துக் கொண்டேன்.

இவ்வாறு தீர்மானித்துக்கொண்டு ஒருநாள் மாலை சுமார் மூன்று மணிக்குப் புறப்பட்டு ஒரு குன்றின் ஓரமாகச் செல்லும் பாதையே போய்க்கொண் டிருக்கையில், பக்கத்திலிருந்த அடர்ந்த தோப்புக்குள்ளிருந்து ஐந்தாறு பேர் ஆயுத பாணிகளாகிய கள்ளர் வந்து என்னைக் கொள்ளை யடித்துச் சிறைப்படுத்திக்கொண்டு தங்கள் தலைவனிருந்த ஒரு குகைக்குக் கொண்டு போனார்கள். நான் சுலபத்தில் அவர்கள் கைக்குச் சிக்கவில்லை. ஆயினும் ஐந்தாறு பலசாலிகள்—அதிலும் ஆயுத பாணிகளோடு, ஒருவன் எந்நேரம் போராட முடியும். இவர்கள்

என் சாமார்த்தியங்களைத் தங்கள் தலைவனிடம் கூறியதைக் கேட்டதே, அவனும் இன்னும் அங்கிருந்த மற்ற கள்ளரும் என்னை வெகுவாய் மெச்சிக்கொண்டு என்னைத் தங்கள் கூட்டத்தில் சேர்த்துக் கொள்ளும்படிக்கும், தங்களின் இரண்டாவது தலைவனாக விருக்கும்படிக்கும் மிகவும் வேண்டிக் கொண்டார்கள். அச்சமயம் என் மனம் இருந்த மிக்க வெறுப்பான நிலைமையில் நான் பேசாமல் அவ்வாறே யொப்புக்கொண்டு அன்று முதல் கள்ளரில் ஒருவனாகச் சேர்ந்துகொண்டேன்.

நான் சேர்ந்தது முதல் அவர்கள் நடக்கையில் மிக்க அக்கிரமம், கொலை, மாதரை யவமானப்படுத்தல் முதலிய கொடும்பாதகச் செயல்கள் நடக்கவொட்டாதபடி பாது காக்கத் தொடங்கினேன். அவர்களனைவரும் தங்கள் தலைவனிடம் காட்டியதைவிட என்னிடம் அதிக மரி யாதையும் அன்பும் காட்டத் தொடங்கினார்கள். நான் ஏற்படுத்திய கண்டிப்பான சட்டத்திட்டங்களே நான் உயர்தரத் தலைவனாயிருக்கத் தகுதியுடையவன் என்று அவர்கள் மதிக்கும்படி செய்துவிட்டது. என் பாரபக்ஷ மற்ற நடக்கையும், சுயநலம் கருதாது அவர்கள் அனைவர் க்ஷேமத்தையும் கருதி அன்பும், இரக்கமும் காட்டி நடக் கும் நடக்கையே என்மேல் அவர்களுக்கு மிக்க பிரியத்தை புண்டாக்கிவிட்டது. இவ்வாறு ஒருவருடங் கழிந்தது. அதன்பின் தலைவன் வியாதியுற்று மரணமடையக் கள்ள ரனைவரும் ஒரே வாக்காக நானே தலைவன் பதவியைப் பெற வேண்டுமென்று தீர்மானித்துவிட்டார்கள்.

நான் உடனே எங்களுடைய வாசஸ்தலத்தை அந் தப் பிரதேசத்திலிருந்து நவீனபுரியின் ஓரத்திற்கு மாற் றிக் கொண்டேன். இப்போது எனக்குத் துஷ்டரையும், ஏழைகளை யக்கிரமமாக நடத்தும் செல்வ வந்தரையும்

தண்டிப்பதற்கும், ஏழைகளுக்கும் பலவந்தரால் கஷ்டப் படுத்தப்படும் பலயீனர்களுக்கும், அனாதைகளுக்கும் உதவி செய்யவும் வல்லமை யுண்டாகி விட்டது. அச்சம யம் அந்த நாட்டில் செல்வம் பொருந்திய பிரபுவும் மந் திரிகளி லொருவனுமாகிய ஒரு ஆள் எங்களிடம் சிக்கிக் கொண்டான். முன்பு அரசனிடம் என் மேல் கோள் கூறிய சதிக்காரர்களில் இவன் ஒருவன். நான் யாரென் றறிந்ததே அவன் தன் உயிர் கட்டாயம் போய் விடு மென்றே நிச்சயித்துக் கொண்டான். நானோ அவன் எனக்குச் செய்த துரோகத்திற்காக அவனை மன்னித்து விட்டதாகக் கூறி அவனிடமிருந்து பறிக்கப் பட்ட பொருள் யாவும் கொடுத்து அவனை க்ஷேமமாக ஊர் போய் சேரும்படி யனுப்பி விட்டேன். அவன் மனதில் என் உதார நடக்கை மிகவும் உறுத்தியது. அவன் தான் எனக்குச் செய்த சதிக்காக உண்மையாகவே மிக்க மனத் தாபப்பட்டு கண்ணீர் விட்டுத் தான் எப்போதேனும் எனக்குக் கடிதம் எழுதுவதாயின் எவ்விடத்திற் கனுப் பினால் எனக்குச் சேரும் என்று கேட்டான். நான் அவ் வாறே எனக்குச் சினேகிதமாகி யிருந்த இராஜாங்கக் கொலையாளியாகிய மாதவன் வீட்டு விலாசத்தைக் கூறி னேன். அதோடு அவன் சங்கதியை மறந்தே போய்விட் டேன். அதன் பிறகு ஒரு கொள்ளைநோய் எங்கள் கூட் டத்தில் பிரவேசித்து ஆறு பேர் தவிர மற்ற என் ஆட் களையெல்லாம் கொன்றது. ஒருநாள் நாங்கள் துரைத் தனப் போர்வீரர்களால் துரத்தப்பட்டபோது அந்தப் பாழடைந்த மடத்தைக்கண்டு அதில் ஒளிந்து கொண் டோம். அது முதல் அதுவே எங்களுக்கு வசதியான இடமாகத் தோன்றியதால் அதையே எங்கள் வாசஸ்தல மாக்கிக்கொண்டோம். பிறகு நாளுக்கு நாள் எங்கள்

கூட்டம் பெரிகிக் கடைசியில் மூவாயிரம் பேர்களையுடைய தாகித் துஷ்டர்க்கும் அக்கிரமஸ்தராகிய செல்வப் பிரபுக் களுக்கும் நடுக்கத்தை யளிக்கத்தக்க தாய்விட்டது. நிர பராதிகளும் ஏழைகளும் எங்களைச் சிநேகராகக்கொண் டார்கள். நாங்கள் கொள்ளை யடிக்கும் பொருளிலிருந்து ஏழைகளுக்கும் அநாதைகளுக்கும் மிக்க உபகாரம் செய்து வந்தோம். நான் வைத்துக்கொண்ட மாயசிங்கன் என்ற பெயர் எங்கும் பிரபலமாய்விட்டது. என் மனம் என் மனைவியையும் மைந்தனையும் நாடியது. ஆனால் நான் மிக்க கஷ்டப்பட்டு மனதை யடக்கிக்கொண்டேன். அவர்களை யடியோடு மறந்துவிட வேண்டுமென்பதே என் முயற்சி. உன்னை மட்டுமாவது அவளுடைய நடக்கையால் கெட்டுப்போகா வண்ணம் அழைத்து வந்து விடலாமா வென்று சிந்தித்தேன். நீ இங்கு வந்து நம் தந்தை ஒரு கள்ளக் கூட்டத்தின் தலைவனென் றுணர்ந்து அதை யவ மானமாகக் கருதுவதை விட இராஜசபையின் துர்நடைக் கையில் கலந்திருப்பதே நலம் என்று கருதிக் கொண் டேன். '' என்றான்.

இராகவன் "அப்பா! நான் சிறுவயதிலேயே உன்னி டம் வந்துவிட் டிருந்தால் உன் கெம்பீரம் பொருந்திய உயர்ந்த நடக்கைகளில் சிலவற்றை யேனும் பின் பற்றி யிருப்பேன் '' என்று வியாகூலத்தோடு கூறினான்.

தந்தை:—குழந்தாய்! பூரணமான உயர் நடக்கைகளை யுடையவன் எவனுமே யில்லை. அதற்காக சிந்திக்க வேண்டாம். அப்போது நான் அம்மடத்தில் வந்து சேர்ந்து பத்து வருடங்களுக் கதிகமாயின. மறுபடி என் மனைவியின் நடக்கைகளைப் பற்றியும் உன் நிலைமையைப் பற்றியும் அரண்மனையில் நடக்கும் விவகாரங்களைப் பற்றியும் அறிந்து கொள்வதற்காக

வேவு ஆட்களை வைத்தேன். நான் அறிந்த விஷயங்களில் திருப்தியானவை எள்ளளவுமில்லை. டாக்டர் தங்கவேலுப் பிள்ளையின் மிக்க அக்கிரமமான நடக்கைகளை யெல்லாம் பற்றி நான் பூரணமாக அறிந்து கொண்டேன். அதனால் டாக்டர் தேவராஜப்பிள்ளை யென்ற அவன் அண்ணனைக் கொன்றவன் அவனே யென்று நிச்சயமாக வறிந்தேன்.'' என்றதே,

இராகவன்.—“என் தாய் அதற்கு உடந்தையோ?'' வென்றான்.

சத்தியவீரப்பிரபு:—“இல்லை யில்லை. இறந்தவள் மேல் அபாண்டம் கூறலாகாது. அவள் பாபங்களுக்கே அவள் அனுபவிக்க வேண்டியது எவ்வளவோ இருக்கிறது.

இது அப்போது அவளுக்குத் தெரியாது. அநேக நாட்களுக்குப் பின்பே தன் சோரநாயகன் கொலைபாதகன் என்று அறிந்தாள். இராகவா! அப்போது உன்னைப் பற்றியே எனக்கு அதிக கவலை யுண்டாய்விட்டது. உங்களுக்கு உண்மையான செல்வாக்கு ஒன்றுமில்லை யென்றும், அந்த டாக்டர் உங்களையெல்லாம் தனக்குக் கருவிகளாக வைத்துக் கொண்டு ஆட்டுகிறா னென்றும் நான் நன்றாயறிந்துகொண்டேன். ஒருநாள் இராணியின் காதலில் நீ சிக்கிக்கொண்டா யென்றும் உன் தாயும் டாக்டரும் அதற்கு இடமளித்து அதை விர்த்திசெய்கிறார்களென்றும் கேள்விப்பட்டதே உன்னைப் பற்றி எனக்கு அதிக பயமுண்டாய் விட்டது. சமீபத்திலேயே அல்லது கொஞ்ச காலத்திற்குள் அவர்கள் அனைவரும் பெரிய ஆபத்தில் சிக்கிக் கொள்வது நிச்சயமென்று அறிந்து கொண்டேன். அந்தப் பிராணுபத்தி லிருந்து உன்னைக்

காப்பாற்றுவது எப்படி என்ற கலக்கம் எனக்கு மிக்க மனோவேதனையாய் விட்டது.

இவ்வா றிருக்கையில் நான் ஒருநாள் மாதவன் வீட்டிற்குச் சென் றிருந்தபோது என்னிடம் ஒரு அரக்கு முத்திரையிட்ட கடிதக்கட்டு அளிக்கப்பட்டது. அதை வாங்கி முத்திரையைக் கண்டதே எனக்கு மிக்க வியப்பும் கலவரமும் உண்டாகின. ஏனெனில் அம்முத்திரை அங்க நாட்டரசனாகிய தேவசிங்க மகாராஜன் முத்திரை. அன்று நான் ஒரு பிரபுவுக்கு உதவி செய்ததாகக் கூறினேனே, அப்பிரபு வீனாக என் விலாசத்தைக் கேட்டுக்கொண்டு போகவில்லை. நான் அக்கட்டைப் பிறித்துப் பார்த்தேன். அதில் அங்கநாட்டரசன் தன் தந்தை எனக்களித் திருந்த ஜாகீர்பட்டம் ஆஸ்தி உத்தியோகம் முதலிய யாவற்றையும் திருப்பி யளித்துவிட்டதாக, அவைகளுக்கு வேண்டிய பத்திரங்க ளெல்லாம் இருந்தன. அதோடு அதில் அரசன் கைப்பட ஒரு கடிதம்வைக்கப்பட் டிருந்தது. அதில் கீழ்க்கண்டபடி எழுதப்பட் டிருந்தது.—

" நீ என் தம்பியாகிய அமரநாதனுக்கு இடைவிடாக் காவலாகவிருந்து அவனைப் பாதுகாக்க வேண்டும். அவன் மிக்க இக்கட்டான நிலைமையி லிருக்கிறா னென்று எனக்குத் தெரிகிறது. இராணியின் நேசர்களில் யார் யார் என் தம்பியின்மேல் பகைகொண் டிருக்கிறார்களோ அவர்கள் எல்லார் மேலும் நீ இடைவிடாக் கண்ணோக்கம் வைக்க வேண்டும்'' என்று எழுதியிருந்தார். நான் இழந்துவிட்ட பட்டம்செல்வம் அந்தஸ்து யாவற்றையும் மறுபடி எனக்களித்த அரசனுக்கு நான் மிக்க நன்றியுடையவனாக இருக்க வேண்டியவன். ஆகையால் சந்தோஷத்தோடு அந்த வேலையை யொப்புக் கொண்டேன். நான் அங்க

நாட்டிற்குத் திரும்புமுன், இந்த ஆபத்தும் கஷ்டமுமான வேலேயோடு, என் புத்திரனை அவன் சிக்கியிருக்கும் பிராணுபத்தான வலேயினின்றும் மீட்கவேண்டிய வேலேயும் அங்கெனக் கிருந்ததால், நான் அங்கநாட்டு அரசனுடைய ஆள் என்று ஒருவருக்கும் அறிவிக்காமல் கள்ளத் தலேவனுகிய மாயசிங்க னென்றே நடித்துக்கொண்டிருந்தேன்.

மாதவன் புத்திரனுகிய பூபாலன் உதவியால் சில நாட்களுக்குள் அரண்மனேயிலுள்ள இரகசிய வழிகளேயெல்லாம் நன்ருய் அறிந்துகொண்டேன். அந்த அரண்மனே முழுமையும் சுரங்கங்கள் போல் பூமியின் கீழும் சுவர்களுக்குள்ளும் இரகசிய வழிகள் நிறைந்திருக்கின்றன. எந்த அறையில் நடக்கும் சம்பாஷணேயையும் அங்குள்ள சுவருக்குள் நின்றிருந்து கேட்டுக்கொள்ளலாம். நான் இவ்வழிகளேப் பூரணமா யறிந்துகொண்ட சில நாட்களுக்குள் அரசன் இறந்துபோய் இராஜகுமாரி இராணியாகப் பகிரங்கப் படுத்தப்பட்டாள். அவள் கணவனுகிய அமரநாதனே அரசனுகப் பகிரங்கப் படுத்தாதபடி சூதாகத் தடுத்துவிட்டார்கள். இத்தகைய சந்தர்ப்பத்தில் என்ன செய்வதென்று நான் யோசித்துக்கொண் டிருக்கையில் அங்கநாட் டரசனிட மிருந்து ஒரு இரகசியக் கடிதம் எனக்குவந்தது. அதில் அந்த அரசர் இனி துஷ்டகேது இராஜகுமாரனும், நகரகுருவும் இன்னும் சில பிரபுக்களும் தன் தம்பியின் காரிய சித்திக்கு வேண்டியவற்றைச் செய்வார்கள் என்று எனக்கு எழுதியிருந்தார். நான் உடனே அந்த விஷயத்திற்கு நானும் உடந்தையா யிருந்து உதவிசெய்ய ஆயத்தமாக விருப்பதாகத் துஷ்டகேதுவுக்குத் தெரிவித்தேன். அதன்மேல் அமரநாதன் அப்பாழடைந்த மடத்துக் கோயிலில் முடி சூட்டப்பட்

டான். அமரநாதன் ஒரு கோழை. அன்று அவன் பலவந்தமாகவே முடி சூட்டப்பட்டான்.

அரசன் அனுப்பிய அக்கடிதம் என்மே லிருந்த பொறுப்பை துஷ்டகேது முதலியவர்கள் மேல் மாற்றி விட்டது. அமரநாதன் விஷயமாய்ச் செய்யவேண்டிய யாவும் அவர்களே இனிச் செய்யவேண்டும். நான் பேசாமல் யாவற்றையும் கவனித்துக்கொண் டிருந்து, அவர்கள் சமயத்தில் ஏதேனும் உதவி வேண்டுமென்று கோரினுல், என்னுல் கூடிய உதவியைச் செய்யவேண்டியவனே யன்றி மற்றவேலை யொன்றும் எனக்கில்லை. நான் வேலைக்காரன் போல் அவன் அதிகாரத்திற் கடங்கி நடவாமல் சுயேச்சையின்படி நடந்துகொள்வது மமதையுடைய துஷ்டகேது இராஜகுமாரனுக்குப் பிடிக்கவில்லை. அதோடு அப்போது நடந்த இரண்டொரு சம்பவங்களால் அவனுக்கு என்மேல் வெறுப் புண்டாகியது. முதல் முறை வில்வநாதன் என்று நான் உனக்குக்கூறிய அந்த வாலிபனைத் துஷ்டகேது கொன்றுவிட வேண்டுமென்று தீர்மானம் செய்தபோது நான் அப்படிச் செய்யேன் என்று மறுத்துவிட்டேன். உடனே அவன் தானே அவ்வாலிபனைக் கொல்ல முயன்றபோது இருவருக்கும் வாட்போர் நேர்ந்து அதில் துஷ்டகேதுவே தோல்வி யடைந்தான். அவனுக்கு நேர்ந்த அந்த அவமானத்திற்கு நானே காரணம் என்பது அவன் கருத்து. பிறகு ஒருமுறை வில்வநாதன் ஆத்மநாதம்பிரபுவின் புதல்வியை யத் துஷ்டனிடமிருந்து மீட்டபோதும் அவனைப் பூமியில் வீழ்த்தி விட்டான். அப்போது தன் தங்கையென்று அவன் அறியாத அக்கன்னிகையை மீட்டுக்கொண்டு திரும்பும்போது துஷ்டகேதுவும் அவன் ஆட்களும் அவர்களைத் துரத்திவரவே வில்வநாதன் நான் கொடுத்திருந்த ஊதுகுழலை ஊதினுன்.

அச்சமயம் நானும் என் ஆட்களில் சிலரும் அருகாமையி லிருக்க நேர்ந்ததால் நாங்கள் உடனே சென்று வாலிப னுக் குதவி செய்தோம். அது முதல் துஷ்டகேது என் னைக் கொடிய விரோதியாகவே கருதிக் கொண்டான். எனக்குக் கெடுதிசெய்ய அவனுக்குச் சக்திமட்டு மிருந் தால் மிக்க ஆபத்தையே யுண்டாக்கி யிருப்பான்.

இச்சம்பவம் நடந்த இரண்டாவது நாள், எங்கள் வாசஸ்தலத்தில் எங்கள் கூட்டத்தைச் சேர்ந்த ஆட்களுக் கெல்லாம் நான் விருந்து வைக்க நியமித்திருந்த சமயத் தில், 'இராணியின் படை இரகசியமாக வந்து எங்களை யழி த்துவிட உத்தேசித்திருக்கிறார்கள்' என்ற அபாய சங் கதியை உத்தமவானான வில்வநாதன் எனக்குத் தெரிவித் தான்." என்றான்.

இராகவன் "ஆ! நானே நடத்தி வந்த அப்படை வீரர்கள். ஓ கடவுளே! அச்சமயமட்டும் தாங்கள் யார் என்பதை யெனக்கறிவித்துவிட் டிருந்தால் சண்டாள னாகிய நான் பெற்ற தந்தைமேல் விரோதங்கொண்டு பாபத்திற்குள்ளாகி யிருக்கமாட்டேன்..." என்று பிர லாபித்தான்.

தந்தை:—"மைந்தனே! பின்னால் மனஸ்தாபப்படத் தக்க குற்றம் எதுவும் நீ செய்யவில்லை. அன்று நீ சுத்த வீரத்தன்மையோடேயே நடந்து கொண் டனை" என்றான்.

இராகவன் "ஆ! நான் தங்களிடம் சிறையாக விருந்த அந்தச் சொல்பகாலத்திற்குள் அரண்மனையில் ஒரு பயங்கர சம்பவம் நடந்துவிட்டது" என்றான்.

சத்தியவீரப் பிரபு:—"ஆம். அமரநாதன் கொலை செய் யப்பட்டான். அந்த ஏற்பாடே யுனக்குத் தெரியா

தென்று நீ முன்னமே கூறியிருக்கின்ருய்" என்ருர்.

இராகவன்:—"தந்தையே! இப்போது கடவுளறியக் கூறுகிறேன். அக்கொலைக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விஷயமே எனக்குத் தெரியாது. அங்கு சென்று அதைப்பற்றி யறிந்ததே என் மனம் மிக்க வேதனை யடைந்தது. நான் மூன்று நாள் என் அறையைவிட்டு வெளி கிளம்பவில்லை. தாங்கள் எனக்குக் கூறிய புத்திமதி முதலிய விஷயங்களைப் பற்றியே சிந்தித்துக்கொண் டிருந்தேன். இராணி யழைத்ததற்குக்கூட செல்லவில்லை. கடைசியில் மூன்ருவது நாள் நேராய் என் தாயிடம் சென்று தாங்கள் கூறியபடி என் தந்தையே டாக்டர் தேவராஜுப்பிள்ளையைக் கொன்ருரென்று கடவுளறிய இப்போது கருதுகிருயா என்று கேட்பதே சரியென்று துணிந்து சென்றேன். அங்கு சென்றபின் என் தாயார் நான் அரசனுகக்கூடும் என்று தந்திரமாய்க் கூறி என் ஆசையைத் தூண்டிவிடவே நான் மயங்கி இராணியிடம் சென்று நயவஞ்சகமாய்ப் பேசி அவள் என்னை மணம் புரிவதாய் வாக்களிக்கச் செய்துகொண்டேன். அச்சமயம்தான் நாங்கள் இருவரும் இருந்த அறையின் கதவு திடீலென்று திறக்கப்பட்டதும் கவசமணிந்த ஒரு உருவம் வாயிற்படி யருகில் வந்து நின்றது." என்ருன்.

சத்தியவீரப் பிரபு, "ஆ! அன்று ஆயுத சாலையிற் காட்டப்பட்ட அதிசயக் காட்சிகளா? கூறுகிறேன். நான் என் வாசஸ்தலத்தில் உன்னிடம் பேசியபோது உன் பிறவிக்குணத்திலுள்ள பெருந்தன்மையான குணங்களெல்லாமே அழிந்து போகவில்லையென்று தெரிந்து

கொண்டேன். அமரநாத இராஜ குமாரன் கொலை செய்யப்பட்ட சங்கதியைக் கேட்டதே டாக்டர் தங்கவேலுப் பிள்ளை யெத்தகைய பாதகத்திற்கும் அஞ்சமாட்டானென்றும் உன் தாய் அவனோடு சேர்ந்து அதே மாதிரியாய் விட்டாளென்றும் தெரிந்துகொண்டேன். அவளையினிச் சீர்திருத்த முயல்வது ஆகாத காரியம். ஆகையால் உன்னைக் கூடிய சீக்கிரத்தில் அந்த அபாயமான விடத்திலிருந்து பிரித்துவிட வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டேன்.

பூபாலன் தமையன் மெழுகினால் பதுமைகள் செய்வதில் மிக்க சாமார்த்தியவான். அந்தப் பதுமைகளை யெல்லாம் அவ்வித அதிசயமான விதமாகச் செய்திருப்பது எனக்குத் தெரியும். அவற்றை யுனக்கும் இராணிக்கும் காட்டினால் அதன் மூலமாக உங்களுக்கு உங்களுடைய அபாயநிலைமை தோன்றி எச்சரிக்கை யடைவீர்களென்று அப்படிச் செய்தேன். ஆயுதசாலையில் அந்த இரகசிய அறை இருக்கிறது. அதன் வழியாய்த் தோட்டத்திற் பிரவேசித்து பூபாலன் வீட்டிற்குச் செல்லலாம். ஆயுதசாலைக்கு வரும்வழி அங்குள்ள சுவரில் இருக்கிறது. இரவில் அப்பதுமைகளை யெல்லாம் அந்த இரகசிய அறைக்குக் கொண்டுவந்து வைக்கச் செய்தேன். நீயும் இராணியும் தனியாயிருக்கும் சமயம்பார்த்து எனக்கு அறிவிக்கும்படி பூபாலனுக்குக் கட்டளையிட் டிருந்தேன். அதேப்படி அவன் வந்து கூறியதும், என் ஆட்களில் ஒருவனாகிய அச்சுதனை இராஜனுடைய கவசத்தை யணிந்துகொண்டு உங்கள் முன் வந்து நின்று உங்களை யங்கு வரும்படி தூண்ட அனுப்பினேன்'' என்றான்.

இராகவன்:—"ஆ அதில் இறந்துபோன அரசனைப் பற்றிய காட்சியும் டாக்டர் தங்கவேலுப் பிள்ளையின்

கழுத்தில் அக்கயிறு மாட்டப்பட்டதும் ஏனோ விளங்கவில்லையே" என்றான்.

தந்தை:—"அதில் ஒரு விபரீத குற்றம் அடங்கி யிருக்கிறது. படுகொலை" என்றதே இராகவன் "கடவுளே! இன்னமும் கொலையா?" என்று மிக்க ஆவலோடும் துயரத்தோடும் கேட்டான்.

தந்தை:—"மைந்தனே! அந்தக் கொலையின் விவரத்தைக் கூறுகிறேன் கேள். இறந்துபோன அரசன் தங்கவேலுப் பிள்ளையால் விஷத்தால் கொல்லப்பட்டான். உன் தாயும் அதற்கு உடந்தையாக விருந்தாள். அரண்மனை முழுமையும் இரகசிய வழிக ளிருக்கின்றனவென்று கூறி யிருக்கின்றே னல்லவா. ஒருநாள் நான் உன் தாயின் அறை யருகிலுள்ள இரகசிய வழியிலிருந்து, டாக்டரும் அவளும் பேசிக்கொண்டிருந்ததைக் கேட்டு இக்கொலை நடந்ததை யறிந்து கொண்டேன். அதோடு உனக்கும் இராணிக்கும் அச்சங்கதி தெரியாதென்பதையும் அறிந்துகொண்டேன். ஆகையால் அக்காட்சியைப் பார்த்து இராணிக்கு இதைப்பற்றி சந்தேக முண்டாகி டாக்டரைத் துரத்திவிடுவாள் என்று கருதினேன்" என்றான்.

இராகவன்:—"அய்யோ என்ன மடமை! அப்போதுகூட எனக்குப் புத்தியிற் படாமற் போய்விட்டதே. இராணிக்கு இன்னும் அது தெரியாதென்றே கூறுவேன்" என்றான்.

சத்தியவீரப் பிரபு:—"ஆம், ஆம்! பிறகு நீங்கள் அக்காட்சிகளைப் பார்த்துவிட்டுத் திரும்பும்போது மேடைமேல் கவசமணிந்து நின்றிருந்த அச்சுதன் உங்களைத் தொடர்ந்துவந்தான். அங்கு மறைவிலிருந்த என்

ஆட்கள் உடனே பாய்ந்து வந்து உங்களிருவரையும் பிடித்து மயக்க மருந்தை யுங்கள் வாயில் ஊற்றி யுங்களுக்கு ஸ்மரணை நீங்கியதே தூக்கிக்கொண்டு போய் உங்களறைகளில் படுக்க வைத்துவிட்டார்கள்.

48-வது அத்தியாயம்.

சத்திய வீரப்பிரபுவின் சரித்திரத் தொடர்ச்சி—அனேக மர்மங்கள் வெளியாதல்—யுத்தம்—இராணியின் சேனை தோல்வி யடைந்து நகரத்திற்குத் திரும்பல்.

சத்திய வீரப்பிரபுவின் சரித்திரத் தொடர்ச்சி :-

அப்படியும் நீங்களறிந்து கொள்ளவில்லை. உன் மனம் இன்னும் கடினமாகவே யிருந்தது. ஆயினும் நான் மனத்தளர்ச்சியடையவில்லை. கூடிய சீக்கிரத்தில் உன்னை யங்கிருந்து விலக்கிக்கொண்டு வந்துவிடச் சந்தர்ப்பம் வாய்க்குமென்று எனக்கு நம்பகமுண்டு. அதற்கு அவசியமான சம்பவங்கள் சீக்கிரத்திலேயே ஆரம்பமாயின. அதாவது ஜனங்கள் கலகம் செய்யத் தொடங்கினர்கள். நான் அழைக்கப்படாதே அரண்மனைக்கு வந்துவிட்டேன். ஏனெனில் ஜனங்கள் அரண்மனையைத் தாக்கி உள்ளே நுழைந்துவிட்டால் உன்னையும் உன் தாயார் இராணி மூவரையும் உயிர்ச்சேத மடையாதபடி காப்பாற்றவே நான் அங்கு வந்திருந்தேன். நீ ஜனங்கள் முன் சென்று யுத்தம்செய்து இராணியின் விபரீதத் தன்மையை ருசுப்படுத்துவதாகக் கூறிய ஏற்பாட்டை ஒப்புக்கொள்வதாக முதலில் கூவியர்கள் என் ஆட்களே. நான் உன்னைப் பாதுகாக்க எண்ணங்கொண் டிருக்கிறேனென்பதை யென் ஆட்களறிந்துகொண் டிருக்கிறார்கள்.

பிறகு நீ உயிர் தப்பியது வில்வநாதனிடம் நான் அளித்த ஊது குழலை யவன் ஊதியதால் தான். பிறகு நீயும் வில்வநாதனும் அரண்மனைக்கு வந்திருந்தபோது இராணி என்னைக் காணப் பிரியப்படுவதாய்க் கூறினாள். நான் அருகிலிருந்தபடியால் உடனே இராணியின் முன் வந்தேன். அப்போது நடந்த சங்கதிகளெல்லாம் எனக்குத் தெரிந்தேயிருக்கிறது. இராணி யென் புத்திமதிகளைக் கேட்கவில்லை. மறுபடி யவளுக்கு ஆபத்து நேரும் என்று எனக்குத் தெரியும். அதனால்தான் நான் அவ்வாறு எச்சரிக்கை செய்துவிட்டு மறுபடி என்னைக் கோரினால் வருவதாகவும் வாக்களித்தேன். அச்சமயம் நீயும் புண்ணியகோடிப் பிரபுவும் என்னை யெதிர்த்தபோது அந்த அன்பார்ந்த வில்வநாதன் எனக்கு உதவி வந்தான். பிறகு நானும் அவனும் அதைவிட்டுப் புறப்பட்டபோது நீ படிகளண்டை வந்து யென்னைச் சண்டைக்கழைத்தாய். அப்போது என்மனம் மிக்க கலக்க மடைந்துவிட்டது.'' என்றதே,

இராகவன் "அந்தோ! அப்போதே தாங்கள் 'நான் உன் தந்தையென்று' ஒரு வார்த்தை கூறிவிட் டிருந்தால் என் மனதிலுதித்த எவ்வளவோ துவேஷமும் சதியெண்ணங்களும் தோன்றாம லிருந்திருக்குமே'' என்று துக்கித்தான்.

தந்தை:—"இருக்கட்டும், அச்சமயம் நான் அவ்வாறு கூறியிருந்தால் கள்ளனைத் தந்தையாக மதிப்பது உனக்கு ஒருகால் அவமானமாகத் தோன்றுமென்று சந்தேகித்தேன். அப்படி யிருந்தாலும் நீ மட்டும் என்னைச் சண்டைக்கழைத்த பின் சற்று அங்கு நின்றிருந்தால் இரகசியத்தைக் கூறி விட்டே யிருப்பேன். நீ யுடனே திரும்பிப் போய்விட்டாய்.

பிறகு நடந்த யுத்தத்தில் உன்னைத் தோல்வியடையச் செய்தால் உன் மனம் பக்குவப்பட்டு வருமென்றும் அதனால் நீ யிராணியை விட்டுப் பிரிய நேரிடுமென்றும் கருதியே உன்னிடம் தோல்வி யடைந்ததை மிக்க அவமானமாகக் கருதி யுன்னைச் செயிக்க வேண்டுமென்று ஆவல்கொண்டிருந்த வில்வநாதனைத் தயார் செய்து மூன்றுவது நாள் உன்னோடு யுத்தம் செய்ய அனுப்பினேன். கடைசியில் அவனோடு யுத்தம் செய்து தோற்றவன் நீயல்ல வென்றும் புண்ணியகோடிப் பிரபு வென்றும் அறிந்த போது எனக்கு மிக்க வெறுப்புண்டாயிற்று. ஆயினும் எப்படியும் உன்னை அங்கிருந்து அப்புறப் படுத்தத் தகுதியான சமயம் வாய்க்குமென்று பொறுமையா யிருந்து விட்டேன். ஏதோ ஒரு இரகசிய சங்கதி நமது பயங்கரமான இரகசியங்களை யெல்லா முணர்ந்து நம்மைப் பிரித்து விடக் கங்கணம் கட்டிக்கொண் டிருக்கிற தென்று நீயும் இராணியும் உணர்ந்து எச்சரிக்கை யடையும்படிச் செய்ய வேண்டு மென்பது என்கருத்து. அதற்காக என் ஆட்களில் ஒருவனைக் கொண்டு மூன்றுவது நாள் இரவு நீங்கள் போஜனம் செய்யும்போது போஜன மேஜைமேல் அந்தக் கயிற்றை யெறியச் செய்தேன். நான் கோரிய சமயம், நான் எதிர் பார்க்காத அதிக சீக்கிரமாகவே சம்பவித்து விட்டது. எப்படியெனில், அன்றிரவே சித்ராங்கி யுன்னைத் தன்னறைக்கு அழைத்துச் சென்று இராணியின் மேல் உனக்கு வெறுப்புண்டாகவும் நீ தன் மாயத்திற்குட்படவும் செய்தாள். பிறகு அவளே இராணியிடம் சென்று தந்திரமாகவும் சாமார்த்

தியத்தோடும் இராணி புண்ணியகோடிப் பிரபுவைப் போய் இரகசியமாய்க் காணும்படி வேண்டிக்கொண்டாள். பூபாலன் இரகசிய வழியிலிருந்து யாவற்றையும் கேட்டு வந்து எனக்குக்கூறினன். 'ஓகோ சீக்கிரம் விபரீத சம்பவம் நடக்கும்' என்று தெரிந்துகொண்டு மறுநாள் காலையே அரண்மனைக்கு வந்துவிட்டேன். பிறகு இராணி புண்ணியகோடியின் அறைக்குச் சென்றதும் நீயும் உன் ஆளும் அந்த அறையருகில் மறைந்துகொண் டிருப்பதும் பூபாலன் வந்து கூறியதும் வேலை நெருங்கி விட்டதென்று புண்ணியகோடி யிருக்கும் அறையில் ஒரு சுவரிலிருக்கும் கள்ளக் கதவின் பின் நானும் என் இரண்டு ஆட்களும் வந்து நின்றிருந்தோம். சற்று நேரத்திற்குள் நீயும் உன் ஆளும் அறைக்குள் வந்தீர்கள். நடக்கும் சம்பாஷணையாவும் எங்களுக்கு நன்ருகக் கேட்கிறது. அந்தோ அச்சமயம் கதவைத்திறக்க முயன்ருல் மரை திரும்ப வில்லை. நீ இராணியைக் கொல்வதாகக் கூறுவது கேட்கிறது. கதவோ திறக்கக் கூடவில்லை. காரியம் மிஞ்சிக் கொலை நடந்துவிடும்போ லிருக்கிறது. அந்த இரண்டொரு விநாடிகள் எனக்கு ஒரு யுகம்போலிருந்தது. கடைசியில் நீ கத்தியை யோங்கியபோது இராணி, "அய்யோ என் நண்பனுன மாயசிங்கன் அருகிலிருந்தால் என்னைக் காப்பாற்றவேண்டும்" என்று கூவும்போதுதான் மரை திரும்பிக் கதவு பட்டென்று திரும்பிக் கொண்டது. நான் உடனே என் ஆட்களோடு அறைக்குள் பாய்ந்தேன். பிறகு நடந்த சங்கதிக ளெல்லாம் நீ யறிந்தவையே" என்ருன்.

இராகவன் "ஆம் தந்தையே, என்னைப் பிடித்து வந்து என் குணங்களை யடியோடு மாற்றி நான் இப்போ திருக்கும் உன்னதப்பதவியில் என்னை யமர்த்தி வைத்தீர். அத்தகைய பேருபகாரத்திற்கு நன்றி பாராட்டித் தங்க ளுக்கு ஊழியம் செய்வதே வாழ் நாள் முழுமையும் நான் கடமையாகச் செய்ய வேண்டிய வேலை யாகும்" என்றான்.

சத்திய வீரப்பிரபு புத்திரன் மொழிகளைக் கேட்டு உளம் பூரித்து, "மைந்தனே! உன்னால் நான் அடைகிற சந்தோஷமே எனக்கு நீ செய்யும் கைம்மாருகப் போதும். இப்போது அதிக நேரமாய்விட்டது. பொழுது விடிந்ததே நமக்கு மிக்க வேலை யிருக்கும் இராணியிட மிருந்து வந்த தூதருக்கு விடையளித் தனுப்பிவிட்டேன். அதாவது 'இருபத்து நான்கு மணி நேரத்திற்குள் இராஜ தானியின் கோட்டைச் சாவியை என் வசம் கொண்டு வந்து கொடுத்துவிட வேண்டும். இன்றேல் யுத்தம் நடப் பதே. அந்த வாயிதாவும் நெருங்கி விட்டது. ஆகையால் காலையில் யுத்தமே நடக்கும். நாம் செயிப்பதில் சற்றும் சந்தேகமே யில்லை. இடது பக்க வாட்டுச் சேனைக்கு உன்னைத் தலைவனாக அமர்த்தி யிருக்கிறேன். நாம் அடையும் வெற்றியோடு உதார குணமும் கருணையும் கலந்தே யிருக்க வேண்டு மென்பதை மறவாதே. சிறி யோர், மாதர், வயோதிகர், வியாதியஸ்தர், நிராயுத பாணிகள் இவர்களுக்கு எவ்விதத் தீங்கும் செய்யலா காது என்று எல்லாப் படைகளுக்கும் மிகக் கண்டிப் பான கட்டளை பிறப்பித்திருக்கிறது. அதை மறுபடி யனை வர்க்கும் நினைப் பூட்ட ஏற்பாடு செய்" என்றார். அதன் பிறகு இராகவன் தன் தந்தையிடம் விடை பெற்றுக் கொண்டு தன் கூடாரத்திற்குச் சென்றான்.

* * * * * *

யுத்தம்

நவீன புரியின் வடக்கில் சில மைல் தூரத்தில் அவ காசியென்றும் நெட்டூர் என்றும் இரண்டு சிறு நகரங்களிருக்கின்றன. இன்னும் சற்று தூரத்தில் வடக்கில் வேணி நதி என்ற ஒரு சிற்றாறு ஓடுகிறது. மேற் கூறப்பட்ட சம்பவங்கள் நடந்த மறுநாட் காலை மேற்படி இரண்டு நகரங்களுக்கும் நடுவில் நவீன புரிச் சேனை யணி வகுத்து யுத்தத்திற்கு ஆயத்தமாக நின்றது. தேவஸிங்க இராஜகுமாரனாலும் துஷ்ட கேதுவாலும் நடத்தப்பட்ட அறுபதினாயிரம் சேனா வீரர்களின் ஈட்டிகள் உதய சூரியனுடைய கிரணங்களால் ஜொலித்துக்கொண் டிருந்தன.

அதேசமயம் எதிரிலுள்ள குன்றுகளின் சரிவுகளிலும் ஆற்றோரத்திலும் பாளையமிறங்கி யிருந்த ஐம்பத்தையாயிரம் அங்க நாட்டு வீரர்க ளடங்கிய சேனையும் புடைபெயர்ந்து வந்தது. அச்சேனை கற் சிலைகள் போல் அசைவற நிற்கும் நவீனபுரிச் சேனையை நோக்கி வந்துகொண் டிருக்கிறது. அந்த ஐம்பத்தையாயிரம் வீரர்களின் வேலாயுதங்களும் வாளாயுதங்களும் கண்ட கோடரிகளும் சூரியப் பிரகாசத்தில் பள பளவென்று ஜொலித்தன. இச் சேனையின் வலது பக்கமும் மத்தியபாகமும் வீரப்பிரதாபமுடைய மாயசிங்கனால் நடத்தப் பட்டன. இடது பாகம் அவன் புத்திரனாகிய இராகவப் பிரபுவால் நடத்தப் பட்டது.

சேனா வீரர்களின் காலடிச் சத்தமும், ஆயுதங்கள் உராய்ந்துக் கொள்ளும் சத்தமும், குதிரைகள் நடக்கும் சத்தமும், அவைகளின் காலடிச் சத்தமும் பூமி யதிர்ந்து விடச் செய்தன. அசையாது தனக்கு ஒருவரும் நிகரில்லை யென்ன இறுமாந்து நிற்கும் கல்மலை மேல் கொந்தளிக்

கும் கடல் புரண்டு மோதிக் கொள்ளப் போவது போல் இருந்தது அக் காட்சி. அங்க நாட்டுச்சேனை உற்சாகத் தோடும் வீராவேசத்தோடும் வந்துகொண் டிருக்கிறது. பேரிகைகள் முதலிய யுத்த வாத்தியங்களின் முழக்கம் மனச் சோர்வடைந்திருக்கும் வீரர்களுக்கும் வீரத்தன் மையான உரோஷத்தையும் யுத்த ஆவலையும் ஆவேசத் தையும் யுண்டாக்கத் தக்கதா யிருந்தது.

நவீனபுரிச் சேனைகள் தேவசிங்கன் மேல் அல்லது இராணியின்மே லிருந்த அன்பினால் யுத்தத்திற்கு வந்த வர்களல்ல. அல்லது நமது இராணிக்கு எதிரிகள் அக்கிர மம் செய்கிறார்கள், நம்மரசியிடம் நியாயம் இருக்கிறது என்ற நம்பிக்கை யோடு யுத்தத்திற்கு வந்தவர்களுமல்ல. தங்களுக்குக் கொடுக்கப்பட்ட பண ஆசையாலேயே அவர்கள் சண்டைக்கு வந்தார்கள். பணம் அச்சமயம் அவர்களுக்கு உற்சாகத்தை யுண்டாக்கியது. இப்போது வெட்கம் ஒன்றே அவர்களைத் திரும்பிப் போக வொட் டாமற் செய்கிறது. அவர்கள் மனதில் நிலைபான யுத்தப் பிரியம் இல்லாத படியால் எதிரிகளைக் கண்டதே நாம் தோல்வி யடைவோம் என்ற பீதி அவர்கள் எண்ணத்தில் உதித்து விட்டது.

தேவசிங்கன்மட்டும் தன்சேனைகள் உரோஷத்தோடு கடைசிவரையில் யுத்தம் செய்வார்கள் என்று நம்பி யிருந்தான்.

இரண்டு சேனைகளும் ஒன்றுக் கொன்று கால்மைல் தூரத்தி லிருக்கும்போது கிழக்குத் திக்கிலுள்ள மரங்க ளடர்ந்த விடத்திலிருந்து நெருக்கமான ஒரு சிறுசேனை வருவதை இருகட்சியாரும் கண்டார்கள். யுத்தப் பழக்க முடையோர் அச்சேனையில் குறைந்தது மூவாயிரம் வீரர் கள் இருப்பார்கள் என்று மதிப்பிட்டார்கள். இச்சேனை

எக்கட்சிக்கு உதவியாக வருகிறதோ வென்று இருகட்சி வீரர்களும் மனக்கலக்கமும் ஆவலு மடைந்தார்கள்.

மாயசிங்கன் மட்டும் அவர்களையுற்று நோக்கியதே, "ஆ! அவர்கள் நமது நண்பர்களே" என்று கூறினன். ஆகையால் சீக்கிரத்தில் அங்கநாட்டுச் சேனையின் அணிகளில் ஓர் சந்தோஷ ஆரவாரிப்பு உண்டாயிற்று. இரண்டொரு நிமிடங்களுக்குப்பின் அந்தச் சிறுசேனை அங்கநாட்டுச் சேனையின் திக்கைநோக்கித் திரும்பி சந்தோஷ ஆரவாரத்தோடு சென்றன. இதைக்கண்ட தேவசிங்கன் பற்களைக் கடித்தான். அவ்வாறு வந்தபடைகள் மாயசிங்கன் கூட்டத்தைச் சேர்ந்த மூவாயிரம் கள்ளர்களே. அவர்களை நடத்திவந்த அச்சுதனும், ஜக்கன், கிருஷ்டன் மூவரும் மாயசிங்கனை நோக்கி, "ஓ சுத்த வீரத்தன்மை பொருந்திய எங்கள் தலைவராகிய பிரபுவே! இதோ தங்கள் ஊழியர்களாகிய மூவாயிரவரும் இன்று தங்களிடம் ஊழியம் செய்து தங்களுக்கு வெற்றி யுண்டாக்குவதென்றும் அல்லது யுத்தகளத்தில் மடிவதென்றும் சத்தியம் செய்துகொண்டு வந்திருக்கிறோம்" என்றார்கள். மாயசிங்கன் அவர்களுக் களித்த பதில் மொழிகள், சேனைகள் போட்ட சந்தோஷ ஆரவாரத்தில் அமிழ்ந்து விட்டது. புதிதாய்வந்த படைகள் மாயசிங்கன் சேனையின் முற்காவற் படைகளோடு கலந்து கொண்டன.

இதைக்கண்ட தேவசிங்கன் பெருமூச்சு விட்டான். துஷ்டகேது மிக்க கோபமும் கலக்கமும் அடைந்தான். மாயசிங்கனுக்கோ வெற்றி யடையோமென்ற பூரண நம்பிக்கை யிருந்தது. இத்தகைய நிலைமையில் சண்டை தொடங்கியது.

கற்சிலைகள் போல் அசையாமல் நின்றிருந்த நவீன புரிவீரர்கள் எதிரிகள் நெருங்கிவிட்டதே, அத்தனை சிலைக

னும் இந்திர ஜாலக்காரனுடைய மாத்திரைக் கோலின் தட்டுதலால் உயிர் பெற்றவைகள் போல் உற்சாகமும் உரோஷமுங் கொண்டு கர்ச்சித்து ஆரவாரித்தன. அலை கடலேபொங்கிக் கிளம்பிப் போய் மேடான கரையில் மோதுவது போல் அங்க நாட்டுச் சேனை எதிரிகளின் மேற் பாய்ந்து தாக்கியது. உடனே தென்புலத்தான் நமக் குப் பெரிய விருந்தென்று சந்தோஷித்தான். கத்திகள், ஈட்டிகள், கண்ட கோடரிகள் யாவும் தத்தம் தொழிலைச் செய்யத் தொடங்கின. ஒரு பிரம்மாண்டமான மரத்தில் தொங்கும் ஆயிரக்கணக்கான கூண்டுகளி லிருந்து, (ஒரு பயங்கர சத்தம் உண்டானதே) தூக்கணங்குருவிகள் எவ் வாறு பறந்து விடுமோ, அவ்வாறே வீரர்களின் தேகத் தினின்றும் உயிர்கள் பறக்கத் தொடங்கின. எத்தகைய ஆயுதத்தாலும் சேதிக்க முடியாதென்று நம்பப் பட்ட கவசங்க ளனைத்தும் சல்லடைக் கண்கள் போல் துளைக் கப்பட்டும், காகித அட்டைகள் போல் பிளக்கப் பட்டும் போயின. எங்கு பார்த்தாலும் மரணம் பலவித உருவங் களாகத் தோன்றியது. வில்லைப்போல் வளைந்து உடனே நிமிர்ந்து பழையபடி நிற்கும் ஈட்டியின் கொம்புகள் பலதுண்டுகளாக உடைந்து மேலே பறக்கும் காட்சி யுத்தம் புரியும் வீரர்களின் மேல் சூரியன் கிரணங்கள் படாவண்ணம் தேவர்கள் அம்புகளால் சரக்கூடம் போட்டதுபோ லிருந்தது.

அங்கநாட்டுச் சேனையின் இடது பக்கப் பாகத்தை நடத்தும் இராகவ பிரபு, தேவசிங்க இராஜ குமாரனுல் நடத்தப்படும் எதிரிகளின் வலது பக்கச் சேனையைத் தாக்கினன். அங்கநாட்டு வலது பாரிசச் சேனையை மாயசிங்கனும், மையச் சேனையை இப்போது வந்து சேர்ந்த அச்சுதனும் நடத்தினர்கள். அவர்கள் வலது

பக்கச்சேனை துஷ்டகேதுவால் நடத்தப்பட்ட எதிரிகளின் இடது அணியைத் தாக்கியது. மத்திய பாகச் சேனை குமர சிங்கம் பிரபுவால் நடத்தப்பட்ட எதிரிகளின் மையச்சேனையைத் தாக்கியது. நவீனபுரி வீரர்கள் தங்கள் பிராணன்களைக் காப்பாற்றிக் கொள்ள கருதி வீரத்தோடு நின்றே போர்புரிந்தார்கள். யுத்தம் செய்யும் வீரர்களின் ஆவேசக் கூச்சலும். ஆயுதங்களோடு ஆயுதம் மோதிக் கொள்வதாலுண்டாகும் சத்தமும், உரோஷத்தையும் யுத்தாவேசத்தையும் உண்டாக்கும் இரணபேரிகையின் முழக்கமும், காயம்பட்டுக் கீழேவீழ்ந்த வீரர்கள் படும்வேதனையின் சத்தத்தை மேலெழும்பா வண்ணம் செய்தன.

இவ்வாறு மூன்று மணிநேரம் கோரமான யுத்தம் நடந்ததும் இருதிரத்தாரில் ஒருவரேனும் ஒரு அங்குலமாவது இடம் விட்டவர்களல்ல. கடைசியில் சூரியனும் இத்தகைய கோரயுத்தத்தைச் சற்று சமீபத்தில் சென்று பார்க்க விரும்பி நேராய் உச்சிக்கு வந்து விட்டான். அப்போதும் ஒருவராவது சற்று பின் வாங்குவதாகத் தோன்றவில்லை. அதற்குள் ஆயிரக்கணக்கான வீரர்கள், காலையில் சுகத்தோடும் உற்சாகத்தோடும் கர்ச்சித்து நின்றவர்கள், உச்சிச் சூரியனைக் காண்பதற்கின்றி விண்ணுலகடைந்தார்கள், அனேக உத்தமிகள் அன்பார்ந்த கணவரையிழந்து அமங்கலிகளானார்கள்.

மணி பிற்பகல் ஒன்றடித்தது. தன்வீரர்கள் மடிந்து குவிவதைக் கண்ட மாயசிங்கன் மனம் வேதனை யடைந்தது. சற்று சிந்தித்தான். "சே! துணிகரமாய் நடந்து உடனே வெற்றிக்கு வழிதேட வேண்டும்." என்று தனக்குள் தீர்மானித்து, சற்று நேரம் ஜாக்கிரதையாய் வலப் பக்கம் யுத்தத்தை நடத்தும்படி தன் இரண்டாவது

படைத் தலைவனுக்கு எச்சரிக்கை செய்து விட்டுத் தன் சமுதாய உத்தியோகஸ்தராகிய வீரர்களோடு சேனைக்குள் நுழைந்து தன் சேனையின் நடுப்பாகத்தில் அச்சுதனால் நடத்தப்படும் படைகளிடம் சென்றான். தங்கள் தலைவனைக் கண்டதே வீரர்களனைவரும் சந்தோஷத்தால் ஆரவாரித்தார்கள். அவர்களுடைய உற்சாகம், வீரம், தைரியம், பலம் யாவும் அதிகமாய்விட்டன. மாயசிங்கன் (சத்திய வீரப்பிரபு) அவர்கள் முன்னணியில் நின்று அவர்களை யழைத்துக்கொண்டு எதிரிகளின் மையஸ்தானத்தின் சேனையில் பாய்ந்தான். வீரர்கள் ஆவேசத்தோடு எதிரிகள்மேல் பாய்ந்து ஒரு கப்பலானது எப்படிக் கடல்நீரைக் கிழித்துக்கொண்டு செல்கின்றதோ அவ்வாறே எதிரிகளின் அணிகளுக்குள் தங்கள் வாள்களாலும் ஈட்டிகளாலும் வழியுண்டாக்கிக் கொண்டே நுழைந்தார்கள். மாயசிங்கன் தன் வாளால் இருபுறமும் பிணக் காடாக்கிக்கொண்டு சென்று கால்மணி நேரத்திற்குள் எதிரிகளின் மத்திய அணியை நடத்தும் குமரசிங்கம் பிரபுவை நெருங்கி எதிர்த்தான்.

படைத் தலைவராகிய இரண்டு சுத்தவீரர்களும் எதிர்த்துப் போர்புரியத் தொடங்கியதைக் கண்டதே இரு கட்சி வீரர்களும் மனமொத்து பேசிக்கொண்டது போல் சண்டையிடாது நின்று அவர்கள் யுத்தத்தையே பார்க்கத் தொடங்கினார்கள். குமரசிங்கன் யுத்தத்திற் கைதேர்ந்த வீரனே. ஆயினும் சத்தியவீரப் பிரபுவாகிய மாயசிங்கன் முன் அவன் பலமும் சாமார்த்தியமும் நெடுநேரம் நிலைத்து நிற்கக்கூடவில்லை. பத்து நிமிடத்திற்குள் மாயசிங்கன் வாளால் குமரசிங்கன் சிரம் துண்டிக்கப்பட்டு பந்துபோல் பூமியிலுருண்டது. இதைக்கண்ட அங்கநாட்டு வீரர்கள் சந்தோஷக் கோஷ்ட மிட்டுப் பின்னும் உற்சா

கத்தோடு எதிரிகளின் அணிகளைப் பிளந்து கொண்டு உள்ளே நுழைந்தார்கள்.

மாயசிங்கன் இவ்வாறு எதிரிகளின் மையச் சேனையைப் பிளந்துவிட்டு அச்சுதனுக்கு வெற்றிக்கு வழியேற்படுத்திவிட்டு அங்கிருந்து திரும்பித் தான் நடத்தும் தன் வலதுபக்கச் சேனையில் வந்து சேர்ந்து அவர்களையழைத்துக் கொண்டு துஷ்டகேதுவின் படைகளுக்குள் நுழைந்து உக்கிரமான சண்டைதொடுத்தான். எதிரிகள் தைரியமாக நின்று யுத்தம்புரிந்தாலும் மாயசிங்கன் சற்று நேரத்திற்குள் தன் வாளே வழிகாட்டியாகக் கொண்டு துஷ்டகேதுவை நெருங்கினன். அன்று அதுதான் முதல் தடவை அவன் துஷ்டகேதுவைச் சந்தித்தது.

மாயசிங்கனைக் கண்டதே துஷ்டகேது மிக்க கோபாதீப்தனாகி முன்வந்து, "அடே கொலைக்காரக் கள்ளப் பயலே! இன்று உன்னை இருதரச் சேனைகளுக்கும் முன்பாக அவநாசிக் கோட்டையின் கொத்தளத்தின்மேல் தூக்கிற்போடாமல் விடுவதில்லை" என்றான்.

மாயசிங்கன், "அடே அக்கிரமஸ்தனே! இன்று நீ என்கையிற் சிக்கினல் நான் உன்னை எள்ளளவும் மன்னிப்பதில்லையென்று கடவுளறியக் கூறுகிறேன்" என்றான்.

உடனே இரண்டு வீரர்களும் யுத்தம் செய்யத் தொடங்கினர்கள். இருதரப் போர்வீரர்களும் பிரமித்து நின்றார்கள். இருவரும் போரிலும் வல்லமையிலும் சாமார்த்தியத்திலும் சிறந்தவர்களே. ஆயினும் மாயசிங்கனுக்கு இணையாக நிற்க யாராற்றரம். இருவர்க்கும் சுமார் கால் மணிநேரம் கடுமையான யுத்தம் நடந்ததும், கடைசியில் துஷ்டகேது மாயசிங்கனை யிதோடு தொலைத்து விடுகிறேன் என்று கொக்கரித்து வாளை யோங்கிக்கொண்டு பாய்ந்துவந்து வீசினன். மாயசிங்கன் சட்டென்று ஒருபக்கம்

தன் புரவியை விலகச்செய்து, கேடையத்தால் தன்மேல் வந்த கத்தியைத் தட்டிவிட்டு துஷ்டகேது மறுபடி தன் கத்தியை உயரத் தூக்குவதற்குள் ஓங்கி அவன்தலைமேல் வெட்டினன். துஷ்டகேது உடனே அடியற்றமரம்போல் பூமியில் விழ, மாயசிங்கன் வீரர்கள் அவனைச் சிறைப் படுத்தி பின்பக்கம் கொண்டு போய்விட்டார்கள். மாய சிங்கன் ஓங்கிவீசிய கத்திவெட்டால் துஷ்டகேதுவின் மண்டைமே லிருந்த கவசத்தகடு நசுங்கி அவன் மண்டை யில் தாக்க அவன் நெடுநேரம் மூர்ச்சையாய்க் கிடந்தான்

தங்கள் தலைவன் சிறை யாக்கப்படவே அங்கிருந்த வலது பக்கவாட்டுச்சேனை கலைந்து அல்லோல கல்லோல மாய் அவிநாசியை நோக்கியோடி அதைப் பாதுகாக்க முயன்றது. ஆனல் ஜெயலட்சுமியின் துணைபெற்றுச் சிங்கம்போல் துரத்தி வந்த மாயசிங்கன் வல்லமைக்கு முன் எவர்கள்தான் நிற்கக்கூடும். மாலை மூன்று மணிக் குள் அவிநாசிக் கோட்டையின்மேல் மாயசிங்கனுடைய அங்க நாட்டுக்கொடி நாட்டப்பட்டது. கரம் மாயசிங் கன் வசமாய்விட்டது.

இதற்கிடையில் இராகவவீரன் தேவசிங்க இராஜ குமாரனுக்கு இடங்கொடாமல் நின்று யுத்தம் புரிந்து கொண் டிருந்தான். இருமுறை அவர்களிருவரும் நேரில் சந்தித்து வாட்போர் தொடங்கினர்கள். ஆனல் இரு முறைகளிலும் பக்கத்திலிருந்த போர் வீரர்களின் சண்டையால் இவர்கள் பிறிக்கப்பட்டு விட்டார்கள். இந்த இரண்டு படைகளுக்கும் கைகலந்த யுத்தம் கடுமை யாக நடந்துகொண் டிருக்கையில் சுமார் இரண்டு மணிக்குக் குமரசிங்கம் பிரபு மாயசிங்கன் வாளுக்கிரையானனென் றும் மையச்சேனை பிளக்கப்பட்டு விட்டதென்றும் தேவ சிங்கனுக்குச் சமாசாரம் எட்டியது. ஆயினும் அவன்

தைரியத்தை விடாமலே யுத்தம் செய்துகொண் டிருந் தான். பிறகு ஒருமணி நேரங் கழித்து துஷ்டகேது மாய சிங்களிடம் சிறையாகச் சிக்கிக்கொண்டானென்றும் இடதுபக்க வாட்டுச்சேனை கலைந்து ஓடிக்கொண் டிருக்கிற தென்றும் கேள்விப்பட்டான். இராகவனோடு யுத்தம் தொடுத்து நிற்பதற்கே அவனுக்குச் சரியாயிருக்கிற தன்றி, தன் சேனைகளுக்கு எவ்வித வுதவியும் செய்ய அவனால் முடியவில்லை. என்ன செய்வான்! ஆயினும் இன்னும் தைரியத்தோடேயே யுத்தத்தை நடத்திக் கொண் டிருந்தான்.

ஆனால் மாலை நான்கு மணிக்கு அவிநாசி நகரம் எதிரிகளின் வசத்தில் சிக்கிக்கொண்டது என்ற சங்கதி வந்ததே அவன் படைகள் அணி குலைந்து திரும்பி ஓடத் தொடங்கினார்கள். அவனும் குழப்பமாக ஓடும் கூட்டத் தில் சிக்கிக்கொண்டு ஆற்று வெள்ளத்தால் அடித்துக் கொண்டுபோகப் படுபவன்போல் போகவேண்டியதா யிற்று. அவன் மனம் மிக்க வேதனை யடைந்தது. கண் களினின்று ஜலம் தாரை தாரையாய்வடிந்தது. இராகவன் ஓடும் சேனைகளைப் பின் தொடர்ந்து அழித்துவிட்டிருக்க லாம். ஆனால் தன் தந்தையின் கட்டளையை நினைந்து அப்படிச் செய்யாமல் தன் சேனைகளை நடத்திச் சென்று நெட்டூரைக் கைப்பற்றிக் கொண்டான்.

மாலை ஆறு மணிக்குள் அங்க நாட்டார் பூரண ஜெயம் பெற, நவீனபுரிச்சேனைகள் அடியோடு முறி படிக்கப்பட்டு அல்லோல கல்லோலமாக நகரத்திற்குள் ஓடினார்கள்.

49-வது அத்தியாயம்.

இராணியும், தேவசிங்கனும் அவன் தாயும் நகரை விட்டோடல்—துஷ்டகேது இராஜ குமாரன் தன் தாயைக் கொன்றதற்காகத் தண்டனை யடைதல்—பவழத்தீவு வயோதிகன் ஒரு கப்பலால் காப்பாற்றப்படல்—இராணியும் தேவசிங்கம் இராஜ குமாரனும் விக்னபுரி சேர்தல்—இராணி சாமார்த்தியமாயத் தான் நிரபராதி யென்று நிரூபித்தல்.

தேவசிங்கன் துயரத்தோடு அரண்மனைக்குச் சென்றான். இவர்கள் தோல்வி யடைந்த சங்கதி முன்னடியே அரண்மனைக்கு எட்டிவிட்டதால் இராணியும், தேவசிங்கன் தாயாகிய கோமளாபாயும் ஓடி விடுவதற்குப் பிரயத்தனப்பட்டுக்கொண்டிருந்தார்கள். ஏனெனில் அங்க நாட்டுச் சேனைவீரர் தன் கணவனைக் கொன்றவர்கள் மேல் வஞ்சம் தீர்த்துக்கொள்ளவே வந்தார்களென்று இராணியின் மனதிற்குப் புலப்பட்டது. ஆகையால் அவர்கள் கையிற் சிக்கினல் சித்ராங்கி முதலியவர்கள் கதியே நமக்கும் கிடைக்கும் என்று நிச்சயித்துக் கொண்டாள். ஆனல் தேவசிங்கன் வந்ததும், "ஓடக்கூடாது. நகரத்தைச் சரியான பாதுகாப்பில் வைத்தால் எதிரிகள் முற்றுகைப் போட்டாலும் சில நாட்கள் பாதுகாக்கலாம்" என்று நம்பிக்கையோடு கூறியதால் இராணி சற்று தைரியமடைந்து தான் கொடுத்தப் பிரயாண உத்தரவை இரத்து செய்துவிட்டாள்.

தேவசிங்கன் அன்று பகலெல்லாம் யுத்தம் செய்ததாலுண்டான ஆயாசத்தையும் சகித்துக்கொண்டு உடனே குதிரையேறி நகரத்திற்குள் சென்றான். அந்தோ அவன்

எண்ணம் சற்றும் பலிக்கவில்லை. ஏனெனில், அன்று யுத்தத்தில் மடிந்தப் போர் வீரர்களின் மனைவிகளும் சுற்றத்தார்களும் தேவசிங்கனைக் கண்டதும் தங்கள் கணவன்மார்களும் சுற்றத்தார்களும் மடிந்ததற்கு இவனே காரணமென்று கூறி இவனைச் சபிக்கவும் தூஷிக்கவும் தொடங்கினார்கள். "அந்தோ இப்படுபாவி முதலிலேயே ரகசுத்தை மாயசிங்கன் வசம் ஒப்பித்துவிட் டிருந்தால் அப்புண்ணிய புருஷன் ஒருவரைக்கூட கொல்லமாட்டேனே, இவன் நம் நாட்டிற்குச் சனியனாக வந்தான்" என்று வசை கூறினார்கள். ஆண் மக்களோ, "இனி எது எப்படியாயினும் சரி. அந்த அசகாய சூரனாகிய மாயசிங்கனோடு யுத்தம் செய்ய நாங்கள் வரவேமாட்டோம்" என்றார்கள்.

தேவசிங்கன் ஆவி யொடுங்கித் தன் உயிர் தப்பியது தம்பிரான் புண்ணியமென்று எண்ணிக்கொண்டு அரண்மனைக்குத் திரும்பிவிட்டான். இரவு பனிரண்டு மணிக்கு ஒரு பெரிய படகில் மூன்று பேர்களும் சில ஆட்களும் ஏறிக்கொண்டு புறப்பட்டார்கள். அவர்கள் இராணியும், தேவசிங்கனும், அவன் தாயும், அவர்களிடம் இன்னும் நன்றி பாராட்டியிருந்த சில வேலைக்காரர்களுமே. பொழுது விடிவதற்குள் அவர்கள் சமீபத்திலிருந்த ஒரு அன்னிய நாடுபோய்ச் சேர்ந்தார்கள். படகில் ஏறிச்செல்லும் இராணிக்கு அப்பொழுதுதான் தன் துர்நடக்கையின் பயன் இன்னதென்று தெரிந்தது.

அந்தோ காரியம் மிஞ்சியபின் புத்தி தோன்றி என்ன பயன்? கணவன் இறந்தபின் விதவைக்குக் கணவன் அருமை தோன்றி யாது பயன்? பிறர் கூறும் நற் புத்தியைக் கேளாமல் செல்வம் அதிகாரம் முதலியவற்றின் செருக்கால் அக்கிரமச் செயல்களைச் செய்வோர் பிறகு

அவற்றின் பயனாகிய துன்பங்கள் வந்தபோது மனத் தாபப்பட்டால் ஒரு பயனுமில்லை. ஜீவரத்னம் இராணி யின் கதி அவ்வாறே முடிந்தது. தங்கள் சுய லாபத் தைக் கருதி அவளுக்குத் துர்ப்புத்தி கற்பித்து அவளை இத்துன்பத்திற் காளாக்கியவர்கள் பட்டபாட்டை முன் னமே பார்த்தோம். நேயர்களே! எல்லார் துன்பங் களுக்கும் காரணமாகிய பரம துஷ்டனான டாக்டர் தங்கவேலுப்பிள்ளை மட்டும் தப்பித்துக்கொண்டானே என்று கருதுவீர்கள். ஆண்டவன் கட்டளை அவன் எங்கு சென்றாலும் அவனை விடாதென்ற உண்மை போகப் போக உங்களுக்கே விளங்கும்.

இதற்கிடையில் நகர அதிகாரியும் இராஜாங்கக் காரியதரிசியும் பிரதம நியாயாதிபதியும் சத்திய வீரப்பிரபு விடம் சென்று வணங்கி நகரச் சாவியை யவர் பாதங் களில் வைத்துவிட்டார்கள். காலை ஏழு மணிக்கு நான்கு போர் வீரர்கள் துஷ்டகேது இராஜ குமாரனைச் செய சீலனாகிய சத்திய வீரப்பிரபுவின் கூடாரத்திற்கு அழைத் துக்கொண்டுபோய் அப் பிரபுவின் முன் நிறுத்தினார்கள். கூடாரத்தின் முன் அறையில் சத்திய வீரப்பிரபு உயர மான ஒரு ஆசனத்தி லமர்ந்திருந்தார். அவருடைய வலது பக்கம் பிரதம நியாயாதிபதியும், இடது பக்கம் இராகவப்பிரபு, இராஜாங்கக் காரியதரிசி ஆகிய இவர் களும் வீற்றிருந்தார்கள். அந்த அறையின் பின் பக்கம் விடப்பட்டிருந்த திரையின் கோடியில் இன்னொரு மனி தன் நின்றிருந்தான். அவன் பக்கத்தில் ஆயுதங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்ததால் துஷ்டகேதுவின் கண் களுக்கு மட்டும் அவன் புலப்படவில்லை. இராகவப்பிரபு துஷ்டகேதுவை யழைத்து வந்த வீரர்களை வெளியில் போகும்படி சமிக்கை செய்தான். அவர்கள் அவ்வாறே

வெளியிற் சென்ருர்கள், அதன் பிறகு சத்திய வீரப்பிரபு நிதானமாகவும் சாந்தமாகவும் துஷ்டகேதுவை நோக்கி,

"துஷ்டகேதுப் பிரபுவே! நேற்று யுத்தகளத்தில் நாமிருவரும் சந்தித்தபோது நீர் என்னைக் கோட்டைத் தளத்தின் மேல் தூக்கிற் போடுவதாய்ச் சபதம் செய்து கொண்டீர்; நானும் கோபத்தால் நீர் என்கையிற் சிக்கிஞல் உம்மை மன்னிப்பதில்லை யென்று சத்தியம் செய்து விட்டேன். யுத்த முனையில் பகைவனை யவ்வாறு பயமுறுத்துவது சுபாவமே. நான் இப்போது ஜெயமடைந்த படியால் எனக்குள்ள அதிகாரப்படி உம்மைக் கொலை செய்து விடுவது நியாய விரோதமாகாது. ஆயினும் நான் என் வஞ்சத்தைத் திருப்திப்படுத்துவதற்காக ஒருபோதும் ஒருவரை யப்படிச் செய்யமாட்டேன். பிரபுவே! இப்போது நீர் உமது நியாயாதிபதியின் முன் இருக்கின்றீர். அந்த நியாயாதிபதியிடம் உமக்குப் பூரண நம்பிக்கை யிருக்கிறது. ஜகத் குருவின் உத்தரவு பெற்று இந்த நியாயாதிபதியைக் கொண்டே சில ஆசாமிகளை நீர் மிக்க பயங்கரமான கொலைக்குள்ளாக்கினீர்" என்ருர்.

துஷ்டகேது :—"பிரபுவே! தாங்கள் கூறுவதைப் பார்த்தால் இதோ விருக்கிற பிரதம நியாயாதிபதியையே குறிப்பிட்டுக் கூறுவதாகத் தெரிகிறது. ஆயினும் என்மேல் என்ன குற்றம் சாட்டப் போகிறீர்கள்? நான் தங்களைப் பயமுறுத்தியதற்குத் தாம் மன்னித்து விட்டீர்கள். தங்களோடு யுத்தத்திற்கு வந்தது குற்றமாகாது. ஏனெனில் நான் அங்க நாட்டரசருக்குக் கட்டுப் பட்டவனல்ல. அமரநாதன் கொலையில் நான் சம்பந்தப் பட்டவனல்ல. நானே கொலை செய்த குற்றவாளிகளைத் தண்டனையடையும்

படிச் செய்தேன். இவ்வாறிருக்க, ஓ பிரபுவே! தாங்கள் என்மேல் என்ன குற்றத்தைக் கொண்டு வரப் போகிறீர்கள்?" என்றான்.

அருகிலிருந்த பிரதம நியாயாதிபதி உடனே துஷ்டகேதுவை நோக்கி, "பிரபுவே! நீர் உமது தாயாரைக் கொன்றதாக உம்மேல் குறறம் சாட்டப்படுகிறது" என்றார். இதைக் கேட்டதே துஷ்டகேது இடிவிழுந்த மரம் போல் ஆசனத்தில் சாய்ந்து விட்டான். அவன் மனதிற் பெருந்திகிலுண்டாய் விட்டது. ஆயினும் உடனே மனதை யொருவாறு தேற்றிக்கொண்டு நியாயாதிபதியை நோக்கி, "இது பெரிய அபாண்டம். பெரும்பொய் பெரும் பொய்; எவன் அவ்வாறு கூறியவன்?" என்று ஆத்திரமடைந்தவன் போற் கூறினன்.

உடனே "பிரபுவே! நான் ஒருபோதும் பொய் யுரைக்கிறவனல்லவென்று தங்களுக்கே தெரியும்" என்ற ஒரு சத்தம் பக்கத்தில் கேட்டது. அக்குரல் தான் முன் கேட்டுப் பழகியகுரல் போல் தோன்றியதால், யாராயிருக்கலாகு மென்று அவன் சிந்தித்துக்கொண்டே திரும்பிப் பார்ப்பதற்குள் தன்னிடம் தோட்டக்கார மேஸ்திரியாக விருந்த முனியன் எதிரில் வந்து நிற்கக்கண்டான். உடனே அவன் முகம் சவம்போல் வெளுத்துவிட்டது, நாவுலர்ந்தது, கண்கள் அகன்று பிதுங்கிவிடும் போல் தோன்றின. அவன் தேகத்தில் ஒருவித நடுக்கம் உண்டாகியது. பேச நாவெழவில்லை". அச்சமயம் நியாயாதிபதி, "பிரபுவே! ஒன்றும் சிந்திக்காமல் உண்மையை யொப்புக்கொள்ளும். உம்மேல் உண்டாயிருக்கிற ருசு பூரணமானது" என்றார்.

துஷ்டகேதுவின் மனம் பெரிய நரக வேதனைக்குள்ளாகியது. தன் தாயின் உருவம் எதிரில் நிற்பதுபோல்

தோன்றியது. மறுத்துக்கூற அவனுக்குத் தைரியம் உண்டாகவில்லை. உடனே, "அய்யோ! ஒரு குரு! ஒரு குருவை யழையுங்கள். அவரிடம் யாவும் ஒப்புக் கொள்கிறேன்" என்ருன்.

சத்தியவீரப்பிரபு முனியனுக்கு ஒருவிதச் சமிக்கை செய்ததே, அவன் வெளியிற் சென்று இரண்டொரு நிமிடங்களுக்குள் ஒரு குருவை யழைத்து வந்தான். குரு துஷ்டகேதுவை யழைத்துக் கொண்டு அருகிலிருந்த திரையின் பின்பக்கம் சென்ருர். சுமார் கால்மணி நேரங்கழித்ததும் துஷ்டகேது நியாயாதிபதியின் முன் கொண்டுவரப் பட்டான். வந்தவுடனே அவன் சற்று நிம்மதி யோடேயே தன் குற்றத்தை யொப்புக்கொள்ள, நீதவான் அவனுக்கு மரண தண்டனை விதித்தார். ஒரு மணி நேரத்திற்குள் துஷ்டகேது அத்தண்டனைப்படி சிரச்சேதம் செய்யப் பட்டான்.

* * * * *

நேயர்களே! நாகரீக மற்ற மேற்கிந்தியத் தீவுகளிலொன்றிலிருந்த ஜனங்களின் உதவியால் ஒரு பெரிய மரப் படகிலேறி மறுபடி தன் கடற் பிரயாணத்தைத் தொடங்கிய பவழத்தீவு வயோதிகன் என்னமானுனென்று பார்ப்போம். அவன் அத்தீவிலிருந்து புறப்பட்டு மூன்று மாதங்களாயின. அவன் அங்கிருந்து புறப்பட்ட ஒரு மாதம் வரையில் வேகமானகாற்றடித்து படகை வடக்கில் பனி நிறைந்த பாகத்திற்குக் கொண்டுபோய் விட்டது. அதனல் பிரம்மாண்டமான மலைகள் போன்ற பனிக் கட்டிகளினுல் படகு அழிந்து விடுமென்றே கிழவன் பன்முறைப் பெருந்திகிலடைந்து ஆவிசோர்ந்து அவதிப்பட்டான். அப்படிப்பட்ட சமயங்களிற் கூட அவன் கடவுள் மேல் வைத்த நம்பிக்கையை விட்டவனல்ல. ஆபத்து

தோன்றும்போ தெல்லாம் கடவுளைப் பிரார்த்தித்துக் கண்களை மூடிக்கொண்டு மனத்துணிவோடு தன் படகில் படுத்து விடுவான். இவ்வாறு சிலநாட்கள் கழிந்த பின் படகு எத்திக்கில் செல்கின்றதென்றும் எங்கு இருக்கிற தென்றும் அவனுக்குப் புலப்படவில்லை. ஆனால் காயும் வெயிலாலும், பெய்யும் மழையாலும் உஷ்ணப் பிரதேசத் திலிருக்கிறோமென்று மட்டும் கிழவன் அறிந்துகொண் டான். மழை பெய்ததால் அவனுக்கு நல்ல சலம் கிடைத்தது.

இவ்வாறிருக்கையில் ஒரு நாள் அவன் ஊதிப்போய் விகார ரூபமடைந்திருந்த ஒரு சவத்தைக் கடலிற் கண் டான். இப் பயங்கரமும் வெறுப்புமான காட்சி அவன் மனதிற்கு ஒரு நம்பிக்கையையும் சந்தோஷத்தையும் உண்டாக்கியது. எப்படி யெனில், இப்போது நாம் கப்பல்கள் போக்குவரத்தாக விருக்கும் பாதையில் வந் திருக்கிறோம் என்று உணர்ந்தான். ஏனெனில் இச்சவம் கப்பற் சேதமடைந்த மனிதன் சவமாகவே யிருக்க வேண்டும் என்று நன்கு விளங்கியது. அக்கிழவன் கருதியது உண்மையாகவே முடிந்தது. எவ்வாறெனின், சில நாட்கள் கழித்து ஒருநாள் காலை அவ்வயோதிகன் நித்திரை விட்டெழுந்து கடவுளைத் தொழுதுவிட்டு கடலை நாற்புறங்களிலும் நோக்கிய போது ஒரு புறத்தில் அடி வானத்தில் ஏதோ இரண்டு மூன்றுகழிகள் நிற்பதுபோல் தோன்றியது. கிழவன் மனதில் என்று மறியாத ஒரு வித ஆனந்தம் ஜனித்தது. ஆயினும் அவன் கடைசியில் அது மாயத்தோற்றமாய்ப் போய்விடக் கூடுமென்றஞ்சி கடவுளைத் துதித்துக்கொண்டே உற்று நோக்கினான். வர வர அக்கழிகள் தோன்றிய விடத்தில் உயரமான வானத்தில் சீலை விரித்திருப்பது போல் தோன்றியது.

கிழவன் மனம் பதைத்தது. அவன் கண்களில் நீர் துளித்தது. வரவர அவ்வுருவம் தன் படகை நோக்கிவருவது போல் அருகில் அருகில் வந்துகொண்டேயிருந்தது. கடைசியில் கப்பலின் கறுப்பாகிய அடித்தட்டு கண்களுக்குப் புலப்பட்டது. கப்பலின் மேல் ஆட்கள் நடமாடுவது தெரிந்தது. இரண்டொரு நிமிடங்களுக்குள் கப்பலிலிருந்தவர்கள் தன் படகைக் கண்டுவிட்டார்களென்று கிழவன் அறிந்து கொண்டான். ஏனெனில், ஒருவன் அக்கப்பலின் கொடிமரத்தில் ஏறி ஒரு கொடியைப் பறக்க விட்டான்.

கிழவன் அதையுற்றுப் பார்த்ததும் ஓ கடவுளே! என்று கூவினன். ஏனெனில் அக்கொடி நவீன புரிக் கொடியே. தன்தாய் நாட்டுக் கொடியைக் கண்டதோடு "கப்பலிலுள்ளவர்கள் நம்மைப் பார்த்து விட்டார்கள். ஆகையால் நாம் இக்கப்பலிலேறி நம் தாய்நாடு போய்ச் சேருவோம்" என்று அவன் மனதிற் பட்டதும் திடீலென்றுண்டான அவ்வளவு சந்தோடத்தைத் தாங்கமுடியாமல் மூர்ச்சையடைந்து படகில் சாய்ந்து விட்டான்.

186496 கிழவன் மறுபடி ஸ்மரணை வந்து கண்களைத் திறந்து பார்த்தபோது தான் ஒரு கப்பலறையில் மஞ்சத்தின் மேல் படுத்திருப்பதையும் இரண்டு பேர் தன்னைக் குனிந்து பார்ப்பதையும், ஒருவன் தன் வாயில் ஔஷதம் ஊற்றுவதையும் கண்டான். முதலில் அவனுக்கு அது கனவு போற் பட்டது. ஆனல் மறு நிமிடம் தான் படகிலிருந்ததும், ஒரு கப்பல் தன் படகை நோக்கி வந்துகொண்டிருந்ததும், யாவும் நினைவிலுதித்தன. "ஆ! நான் எங்கிருக்கிறேன்?" என்று ஆவலோடு கேட்டான். அதற்கு அம் மனிதர் "பயப்படவேண்டாம், உமது தாய் நாட்டுச் சகோதரரிடமே கப்பலில் க்ஷேமமாக விருக்கி

சென்னை-600 008
18649

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியாரவர்கள் இயற்றியது.

கனகபூஷணம்.

(இது ஓர் கற்புடைய உத்தமியின் அதிசயமான கதை.)

இதில் கற்பிலக்கணம் விவரமாய் உலக அனுபவத்தோடு விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. இக்கதாநாயகி தனக்கு நேரிடும் மிக்க பயங்கரமான அனேக இக்கட்டுகளிலிருந்து தன் கற்புக்குப் பழுதுவராமல் தப்பித்துக்கொள்வது மிக்க சோகத்தையும் ஆச்சரியத்தையும் தரும். அதோடு இதில் இவ்விதமான நடவடிக்கைகளும், அவைகளாலுண்டாகும் நன்மை தீமைகளும் தெளிவாய்க் கூறப்பட்டிருப்பதால், இது வாசிப்பவர்களுக்குச் சகலவித நற்குணங்களையும் போதிக்கக்கூடியதென்பது உண்மை. ஆண்பாலர்; பெண்பாலரிருவர்க்கும் வேண்டிய சகல புததிமதிகளும் இதில் அடங்கியிருக்கின்றன. இது முழுதும் உலக வழக்கத்தையும் அனுபவமான ஆசாரத்தையும் ஒட்டி எழுதப்பட்டிருக்கிறது.

முதல்பாகம் ரூ. 1—12—0. 2-ம் பாகம் ரூ. 1—12—0

இரத்தினபுரி இரகசியம்.

ஓர் அற்புதமான தமிழ் நாவல்.

இதில் மிக்க ஆச்சரியமும் நெஞ்சு திடுக்கிடக்கூடியவையும், ஆதிமுதல் அந்தம் வரையில் மனதைக் கவரக்கூடியவைகளுமான சம்பவங்கள் நிறைந்துள்ளன. பலவித நடவடிக்கைகளையுடைய பாத்திரங்களுமிருப்பதால், அநேக நீதிகளும், புத்திமதிகளும் தக்க திருஷ்டாந்த பூர்வகமாக நிரூபிக்கப்பட்டிருக்கின்றன.

நமது சிறுவர், சிறுமிகளும், ஸ்திரீகளும் அவசியமாய் உணர வேண்டிய இலௌகிக ஆசார விஷயங்களைப்பற்றி ஆங்காங்கு விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது. இதன இனிமையும் அருமையும் வாசிப்போர்களால் முன்னமே புகழ்ந்து கூறப்பட்டிருக்கின்றன: ஆதலால் இதைப்பற்றி நாம் அதிகமாய்க் கூறவேண்டுவதில்லை. இதில் எல்லா ரசங்களும் பூரணமாயிருக்கின்றனவென்று கூறுகிறோம்.

முதல் பாகம் ரூ. 1—12—0 2-ம்பாகம் ரூ. 2—4—0

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை மதராஸ்

"ஆனந்தபோதினி"

ஓர் இனிய மாதாந்தத் தமிழ்ச் சஞ்சிகை.

இச்சஞ்சிகை 1915ஞ ஜூலைமீ முதல் சென்னையில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. தற்காலம் குன்றியிருக்கும் நமது தமிழ்ப் பாஷையின் அபிவிர்த்தியையும், நமது நாட்டாருடைய இலௌகீக ஆசார ஒழுக்கங்களின் சீர்திருத்தத்தையும், ஆன்மார்த்த ஞானாபிவிர்த்தியையும், பெண் கல்வியையும் நோக்கமாய்க் கொண்டே இச்சஞ்சிகை பிரசுரிக்கப்பட்டு வருகிறது. பிரதிசஞ்சிகையிலும், மேற்கண்ட விஷயங்களோடு, நமது சிறுவர், சிறுமிகளுக்கும், ஸ்திரீகளுக்கும் அவசியமான நீதிகளும், புத்திமதிகளும் காணலாம். எல்லா விஷயங்களும் உக்க அனுபவமுடைய கல்வியாளரால் வரையப் படுகின்றன. இவையன்றி ம-ா-ா-ஸ்ரீ ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் மிக்க நேர்த்தியான புது நாவல்களும் தொடர்ச்சியாய் எழுதப்பட்டு வருகின்றன. இப்போது இது நமது நாட்டில் பிரசுரிக்கப்படும் எல்லாத் தமிழ்ச் சஞ்சிகைகளையும் விட அதிகமான சந்தாதாரையுடையது. இது ஜாதிமத பேதமின்றி ஒவ்வொரு மாணவனும், புருடனும், ஸ்திரீயும் அவசியம் வாசிக்கத்தக்கது. இது நமது நாட்டாரது நன்மையொன்றைமட்டும் கருதியே பிரசுரிக்கப்படுவதால், டெம்மி 8 பக்கம் அளவில், 40 பக்கம் விஷயங்களுள்ள இச்சஞ்சிகைக்குத் தபாற்கூலி யுள்பட வருட சந்தா 1 ரூபாதான் ஏற்படுத்தப்பட் டிருக்கிறது. பினாங்கு, ஸிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 1-4-0. மாதிரி காப்பி இனாம்.

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் இயற்றிய நாவல்கள்.

	ரூ.	அ.			
இரத்தினபுரி இரகசியம்			தினகரசுந்தரி ரூபா	1	0
2-பாகமும் ...	4	0	தபால்கொள்ளைக்காரர்	0	14
பவளத்தீவு 1-ம் பாகம் ...	1	6	பத்மாஸனி ...	0	14
கற்கோட்டை ...	2	0	வீரநாதன் ...	0	12
மின்சார மாயவன் ...	1	8	குணசுந்தரன் ...	0	12
தேவசுந்தரி ...	1	4	மஞ்சள் அறையின் மர்மம்	1	8
கனகபூஷணம் 2-பாகமும் ...	3	8	கமலசேகரன் ...	1	12
சுவர்ணாம்பாள் ...	0	12	பூங்கோதை ...	0	10
ஆனந்தவல்லி ...	2	0	இந்திராபாய் ...	2	8
மதனபூஷணம் ...	1	0	அமராவதி 2 பாகமும்	4	0
ஸ்ரீ ராமகிருஷ்ண பரம ஹம்ஸரு			சகோதரவாஞ்சை	0	6
டையசரித்திர உபதேசங்கள்	1	12	ஹை ஸ்கூல் பதிப்பு ...	0	7

விலாசம் : மானேஜர், "ஆனந்தபோதினி" ஆபீஸ்,
நெ. 6, வெங்கடேச மேஸ்திரி வீதி, சௌகார்பேட், மதராஸ்.

Printed at the "Ananda Bodhini" Press, Madras.